பரவிய விருத்தி யாலே பலவித மாவதே போல். 66

சிரவண மாதி யைந்துஞ் செறிந்தவாக காதி யைந்தும
மருபிரா ணாதி யைந்து மருவுமவா ணுதி யைந்து
மிருதய மாதி னுனகு மெய்திய வகிதனை காமம்
பரவுகன் மமமிவ வெட்டும பகாபுரி யட்ட கங்காண். 67

ஓதிய கரணந் தானே யுள்ளகன மங்க ளெல்லா
நீதியா யான்மா முனபாய் நித்தமுஞ செயவ தாலே
சாதுவே சகலத் துக்குஞ சாட்சியா மான்மா வெந்தப்
போதுமே யசஙக மாகும பொருந்திடா தொருவி காரம். 68

ஆதலா வின்ப துனப மகஙகரத் தாம மேயாஞ்
சாதுவே யகண்டா னந்த சாகர வானமா வுக்கி
யேதுமே யில்லை யென்று மெய்திய விடய மெல்லா
மோதுமான் மாபபொ ருட்டா லொனறிடும் பிரிய மாக. 69

ஓதிய விடயந் தானே யுள்ளவா பிரிய மாகா
தேதமி லான்மாத தானே யெவாக்குநற் பிரிய மாகு
மாதலா லான்மா வென்று மகண்டவா னந்த மேயாந்
தூயதா மான்மா வுக்குத் துன்பமோர் காலு மில்லை. 70

புரிவுசெய் சுழுத்தி யினகண் புலனிலா வான்மா னந்தந்
திரமதா யாவ ராலுந் தினமனு பவிக்க லாகுஞ்
சுருதிதான் பிரதயட் சந்தான சொலலிய வைதி கந்தான்
பரவிய வனுமா னந்தான் பகர்ந்தத்திற் பிரமா ணங்கள். 71

அரியனேர் கார ணாக்கை யடைவினி லறையக் கேளா
யிருளவ்வி யத்த மாயை யேதமா மவிதனதப் பேராய்த்
திரிகுண வடிவ மாகித திருசியங் கட்கு மேலாயப்
பரவியே யனுதி யாமோர பரசிவ சததி யுணடால் 72

தரணியி லந்தச் சத்தி தன்னுடைக் காரியங் கொண்
டருமையாம் புததி மானக ளாகிஞே ரனுமா னிக்கு
முருவமாய்ச சகம னேததது மொழுஙகுறப படைபபதாகி
யொருவித மீதா மென்ன வுரைததிட வொணுத தாகும். 73

ஈதுசத் தான தல்ல வீதுதா னசத்து மல்ல
வீதுமற் றுபய மல்ல வீதுதான் பினன மலல
வீதுமற் றபின்ன மல்ல வீதுதா னுபய மலல
வீதுசா வயவ மலல விதுநிர வயவ மலல 74

ஈதுமற றுபய மலல வீதுவிசித திரமே யாகி
யாதிதென் றுணர வொண்ணு வநிர்வச நீப மாகுந
தீதிலாப் பரசி வைகயத தெரிவுதா னிதைய முகருக
சாதுவே பழுதை ஞானஞு சாபபமா லழிபபதே போல். 75

சகலரு மறிவ தான தனனுடைக் காரி யததால்
மிகவுமெங் கும்பிர சிதத மேவிய முககு ணநதான்
புகலபான சததிக குண்டு புகனறவிம முககு ணததி
லகலிரா சதகு ணததா லாகுமவிட சேப சததி 76

கிரியையே வடிவ மாகிக கிட்டுமபிர விருததி யெலலாந
தருவதற கேது வாகத் தங்குமவிட சேப சததி
பரவிய காம மாதிப பலதுய ராதி யான
விருதய விகார மெல்லா மீதினு லிசையு மென்றும 77

உரவிய காமங் கோப முலோபடம பமம கநதை
மருளுரு மசூயை யீரஷை மசசர முதல்வி காரந
தரணியி லிராச ததின் றாமமா மிககு ணநதான்
புருடரிற் பிரவிர்த்தி செய்யும் புரையினுற பநத வேது. 78

இருளுறு தமகு ணத்தா லீன்றதா வரண சத்தி
பரமமாம் வத்து விததாற் பாாககலாம வேறே பாகப்
பிரிவுறு விட்சேப சததைப பெற்றவே துவினு லீதே
புருடரின் பவத்தி னுக்குப் பூருவ காரணங் காண். 79

பெரிதுபண் டிதனு னும் பிரக்ஞையுள் ளவனு னும்
மருமையாஞ் சூக்கு மார்த்த மறவறிந் தவனு னுஞ்
சருவவல் லவனு னுஞ் சாற்றுமா வரண சத்தி
யிருளினுன் மூடப் பட்டோ னியல்பினை யியம்பக் கேளாய். 80

அருமையாங் குரவன் மேலோ ரான்மரூ பத்தை யன்பா
லாரமதாய் வெகு விதத்தா லுணர்த்தினு முணரா னன்னோன்
பிரமையா லாரோ பித்த பேதமாம் பொருளைத் தானே
திரமெனு நன்றி தென்னுந் தியங்கியே யவலம் பிப்பன் 81

ஆதலாற் பொல்லாங் காக வமைந்ததா மதகு ணத்திற்
சாதமா யுரமே யாகச் சார்ந்தவா வரண சத்தி
சாதுவே யற்ப ராலே சாலவுங் கடக்க வொண்ணு
தீதுடை வல்ல பத்தை யென்னவென் றுரைப்ப மந்தோ. 82

ஈதினோ டிசைந்தோன் றன்னை யேதுமே யறியாத் தன்மை
யோதினு முணராத் தன்மை யுணரினு மையஞ் சேர்கை
பேதமா யறியுந் தன்மை பேசிய விவைக டரா
வேதவிட் சேப முந்தா னென்றுமே யிழுத்த லைக்கும் 83

நித்திரை சோம்பல் வெண்மை நிகிலமுந் தவிர்தன் மோகம்
புத்தியின் சாட்டி யாதிப் புகலதமோ குணவி கார
மித்தினோ டிசைந்தோ னியாது மெவளவு முணரா வண்ணம்
நித்தமுந் துயில்வோன் போலு நீண்டதூண் போலு நிற்பன். 84

சத்துவ குணஞ் சலம்போற் சாலவுஞ் சுத்த மேனுஞ்
சொத்திய விருகு ணத்தைத் தொடர்ந்ததாற் பவத்துக் கேது
நித்தமு மான்மா விதத்தி னிகழ்வுறப் பதிவிம் பித்துச்
சுத்திய சடமனைத்துஞ் சூரியன் போலவி ளங்கும். 85

புருடனன் முயற்சி யாலே பூருவம் போல மெத்த
விருகுண மிகுந்தி டாம லிலங்கிய சத்து வத்தின்
மருவிய தருமங் கேளாய் மானமில் லாமை யாதி
வரியம நியம மாதி வரன்மிகு சிரத்தை பக்தி. 86

திரமுறு முமூட்சுத் தன்மை தெய்வசம் பத்தி மற்றும்
சரையுறு செய்கை யின்கண் பொருந்திடா மீட்சி யாதி
புருவமு மிசிரமான சத்துவ குணத்தின் றர்மஞ்
சருவமுஞ் சுத்த மான சத்துவ மகிமை கேளாய். 87

சுத்தசத் துவகு ணத்தின் சூக்குமத் தெளிவி னாலே
நித்தியான் மானு பூதி நிகழ்ந்திடும்பரம சாந்தி
சித்தியாந் திருப்தி மேவுஞ் சேர்ந்திடு மிகக் களிப்பு
நித்தமு மானந்தஞ் செய் நின்மல நிட்டை கூடும். 88

இவ்வித முக்கு ணத்தோ டிசைந்தவவ் வியத்த சத்தி
செவ்விய வான்மா வுக்குச் சேர்ந்தகா ரணவு டம்பாம்
விவ்விதப் பொறிமனங்கள் விருத்தியில் லாச்சு ழுத்தி
யெவ்வமா றிவ்வு டம்பி னிசைந்துள வவத்தை யாகும். 89

அகிலமாம் விதமு மான வறிவிலாச் சுழுத்தி யின்க
ணிகன்மனம் வித்தாய நிற்கு மேதுமே யுணர்கி லோமியாஞ்
சுகமதாய்த் துயில்கின் றோமென் சொல்லிடும பிரசித்தி யாலே
மிகுசுக வான்மாத் தானே மிஞ்சியே யிதில் விளங்கும். 90

உடலுயிர் பொறி புலன்க ளுமைமன மகங்கா ராதி
யிடர்தரு விகார மியாவு மின்பதுன் பாதியும்மற்
றடர்க்கனு திபூதி யாதி யாகிய சகம னைத்து
மிடரவ்வி யத்த மீறு மிவையெலா மனன்மா வாகும். 91

மாயைகா ரியமே யான மகதத்து வாதி யாயிக்
காயமீ றான யாவுங் கலங்கிய பொய்யே யாகு
தூயனே சொன்ன தெல்லாந் தொகுத்தனுன் மாவு மாகும
நீயிசைக் கான னீரி னிகரென நினைதி யென்றும். 92

எத்தைநன் றுணர்ந்தோன் பந்த மிகழ்ந்துகே வலனு மென்றும்
பத்தனே யினி யுனக்கப் பரமான்ம வுருவஞ் சொல்வாம்
நித்தமு நானு னென்று நிகழ்நதிடு மனுபூ திககிம்
மெத்திய பொருளே யாகி மெய்ம்மையாய் நிற்கு மான்மா. 93

திரிவித வவத்தை கட்குந் திருந்திய சாட்சி யாகி
விரிவுறு பஞ்ச கோச விலட்சண மாகி யாது
மருவிய மனவி ருத்தி மற்றதின் பாவ மியாவுங்
கருதிய வவத்தை மூன்றிற் கண்டிடு மஃதே யானமா. 94

யாதனைத் தினையுங் காணு மியாதினை யனைத்துங் காணு
யாதுதான் புத்தி யாதி யாவுமே சித்தாய்ச் செய்யும்
யாதினைப் புத்தி யாதி யாவுமே சித்தாய்ச் செய்யா
தோதிய வதுதா னேயுன் னுடையவான் மாவா மைந்தா. 95

யாதினாற் சகம னைத்து மெங்குமே பரவ லாகும்
யாதினைச் சகம னைத்து மெவளவும் பரவ மாட்டா
யாதொரு போத ரூப மிசைநதுவிச் சடம னைத்து
நீதியாய் நிகழு மீதே நின்னுடை யான்மா வென்றும். 96

நீதுட லிந்தி யங்க டியங்கிய மனது புந்தி
யீதுதன் செய்கை யின்கண் ணேவிடப் பட்ட தேபோற்
சாதுவா மைந்த யாதின் சன்னிதி மாத்தி ரத்தா
னீதியாய்ச செலலு மீதே நின்னுடை யான்ம ரூபம். 97

தொத்திய வகங்கா ராதித் தூலமீ றான யாவுஞ்
சுத்திய புலனை யாதது ஞ சுகாதியுங் கடமே போல
நித்திய போத மாகி நிலைமையாய் நிகழா நின்ற
வெத்தினா லறிய லாகு மீதுநின் னான்மா வாகும். 98

யாதினா லுயிரும வாக்கு மியாவுமே யியங்கு மந்தப்
போதமா மநத ரான்மாப பூரணன் புராண னென்றும்
பேதமி லகண்டா னந்தன் பெருகிய வேக ரூபன்
சாதமார் விருத்தி தோறும் சாட்சியாய்ச சார்நது நிற்பன். 99

சாதுவே யிதுதே கத்திற் சார்மனக் குகையின் கண்ணே
யோதுமவ் வியத்த விண்ணி லொளிரநதிடு மிநத வான்மா
பேதமாம் பொருளை யெலலாம பெருகிய தன்றே சாலே
நீதியாய் விளக்கும் விண்ணி னிகழ்நதிடு மிரவி யேபோல். 100

அடர்மன வகங்கா ரங்க ளாகிய விகார மியாவு
முடல்பொறி யுயிர்கள் செய்யு முலைத்தலு முணரு மான்மா
சுடுகன லயபபிண டமபோற சொலலிய வினைததி னேடுந
தொடரினும் விகார மேவான் சொற்பமுஞ் செய்தோ னுகான்.

சாதுவே யிந்த வான்மா சனனமா கான்ம ரிக்கா
னேதுமே வளர்வு றான்மற் றிளைத்திடான் விகாரி யாகா
னேதமா மிந்தத் தேக மிறக்கினு மிறவா னித்தன்
பேதமாங் கடமி றக்கிற் பெருகுவா னிறப்ப துண்டோ. 102

பத்தனே பகுதி யாதிப் பகுப்பினுக் கெல்லாம் வேறாய்ச்
சுத்தசிற் சொரூப மாகிச் சுழல்வுறுஞ் சதசத் தெல்லா
நித்தமும் விளக்கி வைத்து நிருவிசே டம்பொ ருளதுஞ்
சத்தியப் பரமான் மாவே சாக்கிரா தியிலி லங்கும். 103

நித்தமு நானா னென்றே நிலைமையாய் நிகழா நின்று
புத்தியின் சாட்சி யாகப் பொருந்திய பரமான் மாவைச்
சித்தவே காக்கி ரத்தைச் செறித்துநான் பிரம மென்றே
புத்தியின் றெளிவி னாலே புலனுற வுணர்தி மைந்தா. 104

நித்தமு நின்னான் மாவை நின்னிடை நீயு ணர்ந்து
தத்திய சனன மாதித் தரங்கமாய்ப் பார மற்ற
கத்துசம் சார மாகுங் கடலினைக் கடந்து நன்றாய்ச்
சத்தியப் பிரம மாகிச் சார்பயன் சார்ந்து நிற்பாய் 105

கரணமார் தெளிவி னாலே கறையறத் தீட்டப் பட்ட
வருமையா ஞான மெனனு மசியினாற் சிதையும் பந்தம்
பரவிய வதகி ராதிப் படைகண்மற் றனிலம் வன்னி
யுரவிய கன்ம கோடி யொன்றிலுஞ் சிதைய மாட்டா. 106

சுருதியை நம்பி னோக்குச் சொன்னதவ கன்ம நிட்டை
மருவிடு மவற்றி னாலே மன்னிடுஞ் சித்த சுத்தி
பரவுமச் சுத்தி யாலே பரமுணா ஞான முண்டாம்
விரிவுறும் பவம வற்றால் வேருட னசிக்கு மன்றே. 107

ஓதிய பாசிக் கொத்தை யுதகநின் றொதுக்குங் காலை
சாதுவே புருட னுக்குச் சலிலமே தூய்தாய்த் தோன்றித்
தீதுறு தாகந் தாபந் தீர்ப்பதாய்ச் சுகம ளிக்கு
மேதுவா யுதவு கின்ற வியல்பினை யிங்கு கண்டோம். 108

இந்தவா பஞ்ச கோச மிவற்றினை யபவா தித்தாற்
சந்ததா னந்த மாகிச் சாலவு மிலங்கா நின்ற
பெந்தமில் பரமான் மாவும் பிரத்தியக் கான்மா வாக
மைந்தனே தூய்தாய்த் தோன்றி மாசுக மளிக்கு மன்றே. 109

ஆகையால் விவேகி யானோ னடைந்ததன் பந்த நீக்க
வேகமா யான்மா னன்ம விவேகமே செய்ய வேண்டு
மூகமாம் விவேகத் தாலே யுண்மையா னந்த சித்தா
யேகமாம் பரமான் மாவை யிங்கறிந் தின்பஞ் சார்வன். 110

மருவிய முஞ்சிப் புல்லின் மத்தியு ளாணி யைப்போற்
றிருசியத் திரளி னின்று நிகழ்ந்திடுந் தன்னான் மாவை
யருமையாம் புத்தி யாலே யசங்கமா யசல மாக
மருவிய தென்று கண்டு மாசற வகுக்க வேண்டும். 111

இவ்விதம் வருத்த பின்ன ரிங்குள திருசி யங்க
ளவ்வித வான்மா வென்றே யனிசமும் பிரவிலா பித்துத்
தவ்வற வான்மா வாகத் தரணியி லிருப்ப வன்றான்
செவ்விய முத்திப் பேற்றைச் சேர்ந்தவ னனக மைந்தா. 112

மேதைதொக் கத்தி யாதி மேவிய கூட்ட மான
வேதமாந் தேக நானென் றெண்ணுவன் மூடனானோன்
கோதிலா விசார சீவன் குரம்பையின் வேறே யான
வாதியா மான்ம ரூப மகமெனு வறிவன் மைந்தா. 113

உடலிது நானே யென்றிங் குன்னுவன் மூட னானோ
னுடலுயி ரிரண்டு நானென் றுன்னுவன் கரும ஞானி
திடமுறு விவேக ஞானத் திறமுடைத் தான மேலோ
னிடரிலாச் சொரூப நானென் றெண்ணுவன் றன்னை யென்றும்.

மேதைதொக் கென்பே யாதி மேவிய வாக்கை யின்கண்
சாதுவே யான்ம புந்தி சற்றுநீ சார்ந்தி டாதே
போதவா னந்த வுண்மைப் பூரண சொரூப நானென்
றீதினைச் சார்நதே யென்று மெய்திடு பரம சாந்தி. 115

மொழியும்வே தாந்த நீதி முழுவதுந் தெரிந்தோ னேனு
மழியுட லாதி யின்க ணத்தியா சத்தி னாலே
யெழுமகம் புந்தி தன்னை யெவன்விடா னெம்மட் டம்மட்
டொழிவிலா முத்தி யென்றிங் குரைத்தலு மவனுக் கில்லை. 116

உன்னுடைச் சாயா தேக முன்பதி பிம்ப வாக்கை
யுன்னுடைக் கனவு தேக முன்மனோ ராச்சி யாக்கை
யின்னதி லான்ம புந்தி யேதுநீ யியற்றா தேபோ
லின்னதா லாக்கை மீது மீதைநீ யியற்றி டாதே. 117

ஓதுதே கான்ம புந்தி யுணர்விலா மூடர்க் கெல்லா
மேதமாஞ் சனன மாதி யின்னலசெய் வித்தே யாகு
மாதலான் முயற்சி யாலே யதனைவிட் டுளத்தி னுசந்
தீதறச் செய்யி வற்றாற் றிருமபவிப பவமே சாராய். 118

மனதினை யன்றி வேறாய் மற்றொரு வவித்தை யில்லை
மனதுதா னவித்தை யாகு மற்றிதே பந்த வேது
மனதுதான் வளருமபோது மற்றதும் வளர்ந்த தாகு
மனதுதா னசிக்கும் போது மற்றது நசித்த தாமே. 119

சாதுவே சுழுத்தியின்கண் சலமன மொடுங்கும் போது
யாதுமே யணுவு மில்லை யாவரு மறிவ ரித்தை
யாதலாற் புருட னுக்கிவ் வசத்தியப் பவசம பந்த
மோதிய மனத்தா லுண்டா முண்மையிற் பவமே யில்லை. 120

வீசிய காற்றே முன்னர் விண்மிசை முகிலைச் சேர்த்துப்
பேசிய ததுதான் பின்னும் பெருமுகி லீர்ப்ப தேபோற்
றாசுறு மனமே முன்னர் துன்பமார் பந்தஞ் செய்யும்
மாசுறு மனமே மற்று மாசுக வீட ளிக்கும். 121

பெருகிய கயிற்று லாவைப் பிணிப்பதும் விடுவ தும்போற்
றிரிவிதக் குணங்க டம்மின் றிறமையாற் சீவ னுக்கிங்
குரைதரு மனது தானே யுபயமுஞ் செய்வ தாலே
பரவிய பந்த மோட்சம் படைப்பதற் கேது வீதே. 122

இதுதமோ ரசகு ணங்க ளிசைநதுதான் மலின மாகித்
திதமுறு பந்த வேது திகழ்நதிடுஞ் சத்து வத்தை
நிதமுமீ தனுச ரித்து நிருமல வடிவ மாகி
யதிசய முத்தி யேது வாயிடு மனக மைந்தா. 123

கோதிலா விவேகத் தாலுங் குறைவிலா விரதி யாலு
மீதுதான் சுத்த மாகி யின்பவீட் டின்பொ ருட்டா
மாதலாற் புத்தி மானு யமைநதுள முமுட்சு வானோ
னேதுமிவ் விரண்டை யும்முன் னுரமதா யடைய வேண்டும். 124

மனமெனும் பெயரு டைத்தாய் மகத்தான புலியொன் றிந்தக்
கனமுறு விடய மென்னுங் கானகத் தேசத தின்க
ணனுதினஞ் சஞ்ச ரிக்கு மாதலா லததே சத்தி
லனிசமு நனமு முட்சு வற்பமு மணுக வேண்டா. 125

ஆதலா லான்ம ரூப மறிநதபண் டிதர்க ளெல்லா
மோதிய மனமே யென்று மோங்கிய வவிதநதை யென்பர்
மோதிய காற்றி னாலே முகிற்றிரள் சுழல்வ தேபோ
லீதினா லிநத ஞால மியாவுமே சுழலு மன்றோ. 126

ஆதலான் முமுட்சு வானோ னலைவுறுந் தன்ம னத்தைச்
சூதிலா முயற்சி யாலே சோதிக்க வேண்டு மீது
சோதனை செய்யப்பட்டுச் சுத்தமா நிற்குங் காலை
யோதிய முத்தி சித்தி யுளங்கையிற் கனிநே ராமே. 127

வீடுறும் விருப்பத் தாலே விவிதமாம் விடயத் தின்க
ணேடணை விட்டுக் கன்ம மியாவையுந் துறந்தன் போடே
நீடுறுஞ் சிரவ ணாதி நிட்டையி னிற்ப வன்றான்
மூடிய மனோ விகார முழுவதும விடுத்தோ னவன். 128

ஊனமாம் புத்தி யென்னு முபாதியின் சம்பந் தத்தா
லீனமாம் சீவ பாவ மேகமா மானமா வின்கண்
கானனீர் நிகரே யாகக் கற்பித மாத லாலே
யானவீ துண்மை யாகா தநிர்வச நீய மாமே. 129

புத்தியோ டேபு ணர்ச்சி பூரண வானமா விற்கு
மித்தியா ஞானத் தாலே மேவிய தாத லாலே
சத்திய ஞான மொன்றுற சாற்றிய புணர்ச்சி நீங்கும்
புத்திர மற்றொன் றுலப புணர்ச்சிதா னீங்கா தென்றும். 130

நித்தமாம் பரசீ வைக்கிய நிகழ்த்திய ஞானந் தானே
சத்திய ஞான மென்று சம்மதனு சுருதிக் கெல்லாஞ்
சுத்தமா மான்மா னாம சொரூபநல விவேகத் தாலே
யத்திற ஞான முண்டா மாதலால விவேகஞ் செய்க. 131

மலமுள சலத்தி னின்று மலத்தினை நீக்குங் காலை
சலமது நிமல மாகிச சகத்தினிற் றோன்று மாறே
நிலையுறு தன்னான் மாவி னின்றகங் கார மாதிப
பலவித வசத்தை நீக்கிற பரமமா யான்மாத் தோன்றும். 132

ஆதலா லகங்கா ராதி யகிலமா மசத்தை யுந்தன்
னீதியா யான்மா நின்று நித்தமு நீக்க வேண்டு
மோதுவிஞ் ஞான கோச முண்மையா யான்மா வாகா
தேதெனி லனக மைந்தா வேதுவை யியம்பக் கேளாய். 133

சாதுவே விகாரி யாலுஞ் சடமதாந் தன்மை யாலுந்
தீதள வுடைய தாலுந் திருசிய மாவ தாலு
மேதுமே நியம மன்றி யிதுவிப சாரி யாலு
மாதியா மான்மா வாகா தநித்திய நித்த மாமோ. 134

பரமமா மானந் தத்தின் பதிபிம்ப மதனைச் சாந்த
வுருவுமா மவித்தை விர்த்தி யோதுமா னந்த கோசம்
பிரியமோ தப்பிர மோதப் பிரிவுடைத் தாகி யிட்ட
மருவிடும் போது திக்கு மற்றகா லத்தொ டுங்கும். 135

யாதொரு கோசந் தன்னி லியாவரு முயற்சி யின்றி
யோதுமா னந்த மெய்யா யொன்றிநித் தஞ்சு கிப்பர்
போதனே யக்கோ சத்தின் பூரண வருப வந்தான்
சாதுவா மறிஞ ருக்கே சநததஞ் சார லாகும். 136

பரவுசோ பாதி யாலும் பகுதியின் விகாரத் தாலுங்
கருதிய புண்ணி யத்தின் காரிய மாத லாலுந்
தரமுறு விகாரக் கூட்டந் தன்னிலுட் பட்ட தாலு
மருவுமா னநத கோச மாசிலா வான்மா வாகா. 137

திருசியக் கடமு ணர்ந்து திகழ்ந்திடு தேவ தத்தன்
மருவுமக் கடமு மாகான் மறறதின் றாம மேவான்
பரிசுபோற் பஞ்ச கோசப் பகுபபினை யுணரு மான்மா
மருவுமக் கோச மாகா மற்றதின் றாம மேவா 138

பரவிய பஞ்ச கோசப் பகுப்பினை யூகத தாலே
புரையற வபவா தித்தாற் புரிநதவவ வபவா ததநின
மருவிய வவதி யாகி மாசிலா வகண்ட போத [ம.
வுருவமாய்ச் சாட்சி தானே யொருமையாய் மிஞசித தோன்று

விரிவுரு பஞ்ச கோச விலட்சண வுருவ மாகிக
கருதிய வவத்தை மூன்றின் கரியதாய் நிரு விகார
நிருமல போதா னநத நிலைமையா மிவவான மாவை
யரியனே விவேகி யாளு னகமென வறிய வேணடும். 140

வகை கார மாதி விகாரமற றதன பாவஙக
ளிருமையா மிவற்றை யெல்லா மிங்கியா துணரு மியாதை
யொருபொரு ளுணரா தநத வுணாவுரு வான சாட்சிய
பொருளினை மிகவு நுண்மைப புத்தியா லுணாதி மைந்தா 141

சூனியத் தப்பா லாகச் சொலலிய வான்மா விற்கு
மேனிலை யாக வொன்று மேவிய தில்லை யென்று
மானதா லறிபொ ருட்கு மறிபடாப பொருளி னுக்கு
மேனிலை யறிவே மெய்யாய் மேவிய வான்மா நீயே 142

சாதுவே யெநத வான்மா சாக்கிர மாதி யின்க
ணோதிய பிரத்திய கான்ம வுருவமாய் நானு னென்று
சோதியா யுளத்தி லென்றுஞ் சொலிததிடு மேக மாக
வாதியா மவ்வான் மாவை யகமென வறிநீ யென்றும். 143

வித்தர விகார முற்று விவிதமாய்த் தோன்று நின்ற
வத்திர வகங்கா ராதி யகிலமு நேரே கண்டு
நித்தியா னந்த சித்தாய் நிகழ்ந்திடு நின்னான் மாவைப்
புத்திர னூக்க மான புந்தியா லுணர்தி நன்றாய். 144

போதமார் விவேகி தேகம் புந்திசிற் பதிபிம் பங்கள்
யாதும்விட் டிதய விண்ணி லேகமா யாவுங் காணுஞ்
சோதியா யகண்ட போத சொரூபமாய்ச் சதசத் துக்குப்
மேதமாந் தன்னான் மாவைப் பிரித்துநன் கறிய வேண்டும். 145

நித்தமாய் விபுவு மாகி நிகிலபூ ரணமு மாகி
மெத்தவு நுண்மை யாகி மேவுமுள் வெளிக ளின்றிப்
பித்தியக் கான்மா வாகப் பிறங்கிய பரமான் மாவை
புத்திர விவேகி யானோன் புலமுற வறிய வேண்டும். 146

பிரமமே யான ஞானி பின்னரிச் சம்சா ரத்தை
மருவிடா னாதலாலே மாசற முமுட்சு வானோன்
பிரமநான் பிரம மேநான் பிரமமே நானென் றிங்ஙன்
றிரமதாய்ப் பிரமந் தன்னைத் தினமுமே யறிய வேண்டும். 147

சாற்றிய நீதி யேபோற் சத்தியப பிரமத் தின்கண்
டோற்று காரியம னைத்துந துகளிலாப் பிரம மேயா
மேற்றிய பிரம மல்லா லெவளவும் வேறே யில்லை
தேற்றமா யுசாவி லெங்குந் திகழ்வது பிரமந் தானே. 148

இதுவெனுஞ் சகம னைத்து மேகமாம் பிரம மேயென்
றதர்வண வுபநிடத்தி னதிசய மான வாக்குந
திதமதாய்ச் சொல்வ தாலே திருசியச் சகம னைத்து.
முதயமத் தமன மின்றி யொளிர்ந்திடும் பிரம மேயாம். 149

வேதமாம் மானத் தாலும் விளங்கிய போதத் தாலு
மோதிய சொப்ப னாதி யுத்தம வுத்தி யாலு
மீதிலை யீதி லைமற் றீதிலையென்ப தாகப்
பேதமா முபாதி யெல்லாம் பெயர்ந்திடத் தள்ள வேண்டும். 150

இவ்விதந் திருசி யத்தை யேகமாய்த் தள்ளிப் பின்ன
ரவ்விதப் பரசீ வைக்கிய மறிந்திடத் தக்க தாலே
செவ்விலக் கணையி னாலே செப்பிய வவர்க டம்மை
யெவ்வமற் றுணர வேண்டு மேகமாய் நிற்ப தற்கே. 151

விட்டலக் கணையும் வேண்டாம் விடாதலக் கணையும் வேண்டா
மிட்டனே யுபய மான விலககணை வேண்டுமீது
திட்டமாஞ் சோயந தேவ தத்தனென் கின்ற வாக்கிற்
றட்டிடா வதுபோ லீதாந ததவமசியாம் வாக்கில. 152

திருததமாஞ் சோயந தேவ தத்தனென் கின்ற வாக்கு
விருததமாந் தரும மெல்லாம் விட்டவ் வேகக்கி யததை
தரித்திடச சொல்வ தேபோற் றத்துவ மசியாம் வாக்கும
விருத்தமாந தரும மெல்லாம விடுததயிக் கியமே சொல்லும்.

இத்திரம் விரோதந தள்ளி யிலக்கியச சித்தே யான
சுத்தமாம் பரசீ வாக்குச சொலலிய வைக்கி யததை
நிததமு மறிஞ ரெல்லா நிலைமையாய்ப பரிச யிபபா
புத்திர நீயு மவவா புகன்றதைப பரிச யிபபாய். 154

இததிறம் வேதந் தோறு மிசைமகா வாக்க னேக
மத்திர நூல மாதி யசத்தினை யபவா திததுச
சுத்தமாய் வானம போலக் சூககமாய்த தானே நினற
வத்தமி லிநதச சீவாக் ககண்டவைக கியமே சொல்லும. 155

ஆதலாற் பொய்யே யாகி யகமென வறியப பட்டிங்
கேதெது தோன்று நிற்கு மிவையெலா நன்றாய விட்டுப்
போதவா னநத வுண்மைப் பூரணப் பிரம நானென்
றேதமில் புந்தி யாலே யின்றுனை யுணாதி மைநதா. 156

யாதினும் பிரம மன்றி யாதுமே வேறிங் கில்லை
யாதலா லதுவே யுண்மை யாதுதா னெவாககு மான்மா
யாதுவத் துவிதஞ் சாந்த மமலமாம் பரமா மென்றுஞ்
சாதுவே யதுநீ யாவாய சததிய மைய மிலலை 157

மருவிய சரேம்மி யின்றி மாசில்யோ கியா மனத்தாற
கருதிடப் பட்டு மற்றோ கரணமுங கருதொ ணாத
வுருவமாய் மனதிற் கெட்டா வுண்மையாய் நிறைந்து நின்ற
பிரமமே ததுநீ யாவாய் பிரிவறச சிநதை செய்வாய். 158

ஓதிய விவ்வர்த் தத்தை யுத்தம வுத்தி யோடே
கோதிலாப் புத்தி யாலே குறித்துளந தன்னிற் சிந்தி
யீதினு லைய மாதி யின்றியே வுளங்கை நீபோற்
சாதுவே யுண்மை ஞானஞ் சனிததிடுஞ சங்கை யில்லை. 159

அடர்வுறு சயினி யத்து ளரசனைக் காண்ப தேபோ
லுடன்முதற் றிரளி னுக்கு ணுணர்வுமாத் திரமே யாகித்
திடபரி சுத்த மாகத திகழ்ந்திடு நினைக் கண்டவ்
விடரிலாப் பிரம நானென் றெண்ணியவ் வடிவாய் நிற்பாய். 160

நிருமலப் பிரம மாக நின்னினீ யென்று நின்று
பிரமமா மநத வுன்னிற் பிரிவுபோற் றோன்று நின்ற
திருசியத திரளை யெல்லாந தீரவே பிரவிலா பித்துப்
பரமவா னநதம பெறறுப் பகுபபிலாச சாந்தி சார்வாய. 161

சத்தசத் திற்கு வேறாகு சததிய வேக வத்துப்
புத்தியாங் குகையின் கண்ணே பொருந்துமவ் வத்து வாக
நித்தமிக குகையின் கணணே நிலைமையா யாவ னிற்பன்
புத்திர வன்னோன் மீண்டிப புறையுடற் குகையிற சேரான். 162

மைந்தனே யான்ம நோககான் மாசிலா நின்னுன் மாவிற்
சந்தத நீயிருநது சலிததிடா முயற்சி யாலே
வநதவா தனைய டககு வாதனை யடக்கத தைத்தான்
முந்திய வசிட்ட ராதி முனிவரா முத்தி யென்பார். 163

ஒருவித மிலாத தான வுலகுடைச சாாபை விட்டுப்
பொருள்களை நானு வாகப புகலுறூற் சார்பும் விட்டுப்
பாவிய வனர்த்த மெல்லாம் பறறுடற் சாபும் விட்டிங்
கரியனே யான்ம நோககா லததியா சநத விர்ப்பாய். 164

சந்தத மான்ம நிட்டை சார்நததா வியோகி யர்க்குத்
தொநதமா மனமி றக்குந் துட்டவா தனைய டங்கு
மைந்தனே யதனி னாலே மயஙகிய வததி யாசப்
பந்தனை யாவுந் தீர்த்துப் பரமமாம் பதமாய் நிற்பாய். 165

நானொரு சீவ னன்று நற்பரப் பிரம மேநான்
றானெனு நிசச யத்தாற் றள்ளியே யசததை யெல்லா
மூனவா தனைவே கததா லுன்னிடை யுதியா நின்ற
வீனமா மத்தியாச மியாவையு நீயொ ழிப்பாய். 166

சாதுவே பிசசை வாங்கல் சலமலம் விடுத லன்றி
யாதுமே தியானி யார்க்கிங் கியற்றிடுஞ் செய்கை யில்லை
யாதலா லான்ம நிட்டை யனிசமு மடைநத தாலே
மோதிய வத்தி யாச முழுவது நீயொ ழிப்பாய். 167

தத்துவ மசியே யாதி தருமகா வாக்கி யத்தா
னித்தமும் பரசி வைக்கிய நிகழ்த்திய போதங் கொண்டு
வத்துவி லான்ம புத்தி வலியுறக் கிடைப்ப தற்கே
யததியா சத்தை யெல்லா மனகனே யறவொ ழிப்பாய். 168

மூடமா யித்தே கத்தின் முளைத்திடு மகங்கா ரந்தான்
சேடமில் லாது நன்றாய்ச சிதைவுறுங் கால மட்டுஞ்
சீடனே சாவ தானஞ் சேர்ந்துநற றியானி யாகித்
தோடமா மத்தி யாசத தொடர்பினைப் பரிக ரிப்பாய். 169

நிதநிரை யுலக வார்த்தை நீண்டசத் தாதி கட்கு
நிததமா மானம ரூப நினைந்திடா மறநிக் கும்நீ
யிததனை யேனு மெங்கு மிடைவெளி கொடாம லென்றும
புத்திர நினைஞன் மாவைப் புந்தியிற் சிந்தை செய்வாய். 170

குறுகிய கடாகா சத்தைக் கூர்மகா காசத் திற்போற்
சிறுகிய சீவான் மாவைச் சிறகனப பரமான் மாவி
லறிவினாற் பிரவிலா பித்தவ் வகண்டமாம் வதது வாகி
வெறிதிருந திடுவா யென்றும விமலமாம யோகத் தோனாய். 171

அருவவக் கிரிய மாகி யறிவுமெய் யின்ப மாகி
யொருமையா முன்ரு பதனை யொன்றியிப் பொய்யு டம்பை
யரியமேன விடுதி கூத்த னடைநதுதன் னிசரு பத்தை
விரிவுறு வேட ரூபம் விடுத்திடு நீதியே போல், 172

தொநதமாம் பவத்தைச் செய்யுந துட்டமாமபிரதி பந்த
மைநதனே யனேக மேனு மருவிய வவறறிற் கெல்லா
முந்திய விகார மாக முளைத்திடு மகங்கா ரநதான்
சந்தத மூல மத்தைச சருவதா வொழிக்க வேண்டும். 173

பிநதியும் பரமாாத் தத்தைப் பெற்றதாற் காத னீக்கி
நிந்தைசே ரகங்கா ராதி நின்றவிாத் தியினை மீட்டிங்
கந்தவுன் சொரூபா னநத மநுபவித தகண்ட மாகிப்
பநதமி னிருவி கற்ப பதந்தனில வெறிதி ருபபாய். 174

பெருகிய வகந்தை மெத்தப் பெயர்த்திடப் பட்ட போது
வொருகண மேனு மற்று முளததினு னினைக்கப் பட்டால்
விரிவுறப் பின்னு முண்டாய் விட்சேபம் வெகுவாய்ச் செய்யும்
மருவுகாற் றூல லைந்த மழைக்கால மேக மேபோல். 175

பலபலச் சிந்தை யாலிப் பகையகங் காரத் திற்கிங்
கலைவுற வவகா சத்தை யற்பமு மளிக்க வொண்ணு
துலரெனு மிச்சை யுய்ய வூற்றிய நீரை போலிச்
சலவகங் கார முய்யச் சலசிந்தை யேது வன்றோ. 176

தேகாதி சிந்தை யுற்றோன் றிருசியப பாசம் பெற்றோன்
றேகாதி சிந்தை யற்றோன றிருசியப பாசம் விட்டோ
னாகாத சிந்தை தானே யாதலாற பேதங் கொண்டிவ்
வேகாத பவபந் தத்திற கேதுவா யிசையு மைந்தா. 177

காரியம் வளரு மாகிற் காரண மான வித்தும
பாரினில் வளர்ந்த தாகப பாாக்கலா மதுதான் நீங்கிற்
காரண மான வித்துங் கடிதியி னீங்க லாலே
தீரனே காரியத்தைத் தீரத்திட வேணடு முன்னம். 178

காரிய மான சிந்தை கருத்தினில வளரும போது
காரண வாத னைகளோள் கருத்தினில வளரா நிற்கும்
காரண வாத னைகளோள் கருத்தினில வளரும போது
காரிய சிந்தை யுந்தன கருத்தினில வளரு மைந்தா. 179

வந்தவச் சிந்தை யாலே வாகியச் செய்கை யுண்டாந்
தொந்தமாஞ் சிந்தை செய்கைத் தொடாபினுன் முன்னு ரைத்த
வந்தவா தனைவ ளாந்திங் ககிலமாகு சீவ ருககும
பந்தமாஞ் சமசா ரத்தைப் பலவிதம படைககு மன்றே. 180

ஓதிய வேது வாலே யொழிவிலா துதித்த விந்தப்
பேதமாந பவபந தத்தைப பெயாததிட வேண்டி முன்ன
ரோதிய மூனறை யுந்தா னொழித்திட வேண்டு மத்தி
லேதுநல லுபாய மென்னி லிதனை நீ யியம்பக் கேளாய். 181

எவ்வவத் தையிலு மெந்த விடத்திலும் மெக்கா லத்தும்
விவ்விதத தோறறம பெறறு வேறெனக காணப தெல்லாஞ்
செவ்விய பிரம மேயாகு சிறிதுமவே றில்லை யென்னு
மிவ்விதப் பாாவை தானிங கியமபிய நல்லு பாயம. 182

ஓதிய பார்வை யாகு முண்மைவா தனையு ரததாற்
கோதுறு செய்கை முனனாக குவிந்திடும் பின்பு சிந்தை
யாதுமே யிறககும் பின்ன ரேதுவா தனைய டங்கும்
வாதனை யடக்கந தானே வழுவிலாச் சீவன் முத்தி. 183

சர்வமும் பிரம மென்னுஞ் சத்துவா தனைவ ளர்ந்தால்
மருளகங் கார மாதி மலினவா தனைய டங்கும்
கருமையா மெவ்வி டத்துங் கலநதுள வநத கார
மருணனின் காநதி தோன்று மளவிலே யழியு மாபோல். 184

இருளிருட் செய்கை யாக விசைந்துள வனாத்த மெல்லா
மிரவிங்ன றுதிகரும் போதிங் கிறநதிடு நீதி யேபோ
லருவவத் துவிதா னநத வநுபவ முதிக்கும போது
பெருகிய பநத மததாற பெறறதுன் பமுமி லாதாம 185

திரிசியத் தோற்றந் தன்னைத் திருக்குமாத் திரமே யாகப
பிரவிலா பித்து நினைப பிரமமாத திரமாய்ப பாாத்திங்
கரியனே வெளியி லுள்ளி லாவது சமாதி பெற்றுக்
கருமபந தம்வ ரைககுங காலநீ தளளு வாயே. 186

சொரூபநிட் டையையோா காலுஞ சொற்பமுந தவிர வொண்ணு
தரணியி லநத நிட்டை தவிாதலே கால னென்று
பிரியனே பகவா னன பிரமபுத திரவ சிட்டன
பரமவா சிட்ட நூலிற் பலவிதம பகாநதா னன்றோ. 187

ஆதலாற் சொரூப நிட்டை யன்றியுந தவிாதன ஞானிக்
கேதமா மனாத்த மாகு மேதெனிற தவிர்த லாலே
சாதமா மோக மததாற சனிததிடு மகநதை யததாற்
கோததாம் பநத முண்டாங் கூடிடு மவற்றாற றுன்பம. 188

பொருவிலா ஞானி யேனும புலததினோா சென்றோன் றன்னைத
தாணியிற் சொரூப நிட்டை தவிாதலா மறதி புநதிப
புரைகளா லலைககுஞ் சோர புருடனை சோர மாதிங்
கரியனே விவித மாக வலைததிடு நீதி யேபோல 189

தீரனு ஞானி யேனுந திருசியஞ் சென்றோன் றன்னைக
கோரவா வரண சததி குறைவுற மறைககு மனறே
நீரினுட பாசிக கொததை நீககினுங கணததி லநத
வாரியை யதுதான் மறறும வழுவுற மறைபப தேபோல். 190

சலிததடிக் கினற பநது சறறுமே தவறி மாடித
தலத்துள படியில் வீழ்நத தன்மைபோற சொரூப மென்னு
மிலககிய நின்று சிதத மெவளவுந தவிரு மாகிற
புலததினோ் முகமே யாகிப் போய்விழு மங்கன கேகாண். 191

புலனிடைச் சென்ற சித்தம் புலத்தையே நன்றி தென்று
பலவிதஞ் சங்கற் பிக்கும படாநதவச சங்கற பததாற்
றொலைவிலாக் காம முண்டாந் தொடர்நதவக காமந் தன்னாற்
சலமுறு பிரவிர்த்தி யுண்டாகு சார்நதவப் பிரவிர்த்தி யாலே.

அருமையா மானம நிட்டை யகன்றுபோ மற்ற வற்றார்
புருடனுந தீங்கில வீழ்நது போகுவ தன்றி மற்றுஞ்
சொரூபமே சாரா னிஙஙன் சொன்னவிவ் வணர்த்த மெல்லாந்
தருவதாகு சங்கற பததைத் தளளுவான விவேகி யானேன் 193

ஆதலா லான்ம நிட்டை யன்றியுந தவிாத றானே
சாதுவே விவேகி யாககுச சாறறிய கால னுகுஞ்
கோதிலா வான்ம நிட்டை கூடினேன் பேற்றைச சார்வ
னாதலாற சாவ தான மாகவந நிட்டை சாாவாய். 194

கேதமா ருடலி ருநதுங் கேவல னென வன்றான
பேதமா ருடலி லாத பேறறினு ந கேவ லன்காண்
சாதுவே பேதந தன்னைச சறறுமே காணப வர்க்கு
மேதக யசுரு வேத மிகவுமே பயநதைச் சாற்றும. 195

போதவா னெபபோ தேனும் பூரணப் பிரமத் தின்க
ணேதமாம பேதந தன்னை யெவளவுங் காண்ப னேலப்
பேதமே யன்றோ னுககுப பீதியா மாத லாலே
சாதுவே மறநதும பேதஞ் சறறுமே காண வொண்ணா. 196

சுருதிகண் மிருதி நீதி சுததமாய் நிட்டேதஞ் செய்த
திருசியத தானம புநதி செய்பவன் விவேகி யேனும்
விரிவுற மேலு மேலும விவிதமாந துன்பஞ் சார்வ
னரியனே நிட்டேத காததா வாகிய பாவியே போல். 197

சத்திய வனுசந தானஞ் சார்நதவன் முத்த னாகி
மெத்தவு மகதது வததை மேவுவ னித்த மாக
மிதநதையி னனுசந தான மேவினேன் மிகந சிப்பன்
பததனே யசோர சோரா பாவிதைப பார்க்க லானேம். 198

ஆதலாற் சன்னி யாசி யசத்தனு சந்தா னந்தா
னேதமாம பநத வேது வென்றிதை யிகழ்ந்து நன்றாய்ச்
சோதி யானநத சத்தாய்ச சொல்லிய பிரம நானென்
றோதிய பிரம நிட்டை யொழிவற வொன்ற வேண்டும். 199

நீதிலான் மானு பூதித் திகழ்வினாற் றிடமாய்ப் பெற்ற
பேதமில் பிரம நிட்டை பெருகிய சுகஞ்செய் விக்கு
மேதமா மஞ்ஞா னத்தா லெய்திய துயரை யெல்லாஞ்
சாதுவே யந்த நிட்டை சற்றுமில் லாது செய்யும். 200

வாகிய வனுசந் தான மலினவா தனையைத் தானே
பாகனே மேலு மேலும பயனதாய் வளரப் பண்ணு
மாகையால் விவேகி யதனை யறிநதுடன் பாகி யமவிட்
டேகமா மான்ம ரூப மென்றுமே யனுசந திபபான் 201

வாகியம் விட்ட போதே மனது நின்மலமா மைநதா
வாகிய வம்ம னத்தா லடையலா மான்ம ஞான
மேகமா மநத ஞான மிசைநததாற் பவபந தம்போ
மாகையால் பாகி யதனை யடககலே முததி மாககம. 202

சாதுவே முமுட்சு வாகிச சதுரனாயச் சதசத தோர்நது
வேதமே நமபி யான்ம விபுத்துவ மறிநதோ னாதான
கேதமா ரசத்துத் தன்னைக கெடுத்திடு மெனற றிநதும
பேதமா மவ்வ சத்தைப பேணுவன் பால னேம்பால் 203

உடன்முத லபிமா னததை யுடையவன் முததி சாரான்
றிடமுற முத்தி சார்ந்தோன் றேகாதி யபிமா னிக்கான்
சடமுறு துயிலு டைததோன சாககிரனு சாரா னததை
யுடையவன் றுயிலைச சாரா னுபயமும் வெவவேவ றன்றோ. 204

தன்னையே சராச ரங்கள் சகலத்தி னுடபு றததுந
துன்னிய சாட்சி யாயுந் தொடரதிட் டான மாயு
முன்னியிவ் வுபாதி யெல்லா மொழிதவெவ னகண்ட மாகி
மன்னுபூ ரணமாய் நிற்பன் மாசிலா தவனே முத்தன். 205

சகலமாம் விதத்தி னாலுஞ் சம்சாரம் விடுதற் கேது
வகமிலா வகண்ட பாவ மன்றிமற் றேது மிலலைத
துகளிலா வான்ம நிட்டைத் தொடர்பினாற் றிருசி யத்தை
யிகழலவ் வகண்ட பாவ மிசைந்திடு மதிகா ரிககே. 206

மருவுதே கான்ம் புந்தி மன்னிப்பா கியமே யான
பொருளுடை யநுப வத்திற் போகிய மனத்த னாகி
யொருவித மிலாத செய்கை யொழிவிலா துற்றோ னுக்குத்
திருசியந் தன்னை நீக்குந் திறமையெவ் விதத்தி னுண்டாம். 207

அகிலமாந் தர்மங் கர்ம மசத்தியப் புலனை னோத்து
மிகவுமே துறந்து நித்தம மெய்யான நிட்டை சார்ந்து
சுககன சொரூப மோர்ந்தச் சுகத்தையே யிச்சிப் போர்க்கே
திகழ்வுறு முயற்சி யாலே திருசிய நீக்க முண்டாம். 208

திருசிய மியாவு நீக்கித் திடமுற லகண்ட பாவஞ்
சருவதா வடைவ தற்கே சாதுவா மெதிக ளுக்குச்
சிரவண மாதி கன்மஞ் செய்தபின் சுருதி தானே
சருவதா நிருவி கற்ப சமாதியை விதிக்கு மன்றே. 209

இருளுமா வரண சத்தி யாவுமே நசியா தாகின்
மருளும்விட் சேப சத்தி மாசற நசிக்க மாட்டா
பரவுமா வரண நாசம் பாலினீர் பகுப்ப தைப்போற்
திருசியந் திருக்கி ரண்டைத் திகழ்வுறப் பகுத்தா லுண்டாம.

நல்லபோ தத்து தித்த நலத்தாம விவேகந் தானே
சொல்லிய வான்மா னாத்ம சொரூபமன் றுய்ப்ப குத்துத்
தொல்லையா முஞ்ஞா னத்தாற் றொடார்ந்தபந் தஞ்சி தைக்கு
மல்லல்செய் பந்த மற்றோர்க கற்பமும பவமீண் டில்லை 211

செவ்விதா யான்ம ரூப தெரிசனஞ் செய்வ தாலே
யெவ்வவா வரண நீங்கு மிறந்திடு மித்தைஞானம்
விவிதவிட் சே பத்தால் விளைந்துள துன்ப நீங்கு
மிவ்விதஞ் சொன்ன மூன்று மிசைந்தவோர் திருட்டாந் தங்கேள்

தீதற விரசசு ரூப தரிசனஞ் செய்வ தாலே
மோதுமா வரண மாதி மூன்றுமே முடிந்த வன்றே
வாதலாற் பந்த நீக்க மடைந்திட விவேகி யானோ
னாதியா மான்ம ரூப மவசிய மறிய வேண்டும். 213

இத்திற நித்தா நித்த வியல்பினிற் பகுத்த வற்றி
னித்தமாந் தன்னை மாவை நிச்சயித் தறிவாங் கண்ணோ
லத்திற மான நானே யகண்டசிற் பிரம மென்று
தத்துவ மறிந்தோ னியாவுந் தவிர்ந்துதான் சாந்த னாவன். 214

நிருவிகற் பகமே யாக நிகழ்ந்திடுஞ் சமாதி யாலே
யொருமையாந் தன்னான் மாவி னுண்மையை யெந்தப் போது
புருடனிங் கறிவ னந்தப் போதுதா னஞ்ஞா னத்தா
மருவிய சகல மான மனமுடிச் சிறந்து போகும். 215

பத்தனே நிருவி கற்பப் பரமவத் துவிதான் மாவிற்
புத்தியின் றோடத் தாலே பொருந்திநீ நானி தென்று
நித்தமு விகறப முண்டா நிமலமாஞ் சமாதி தோன்றிற்
றத்துவ வனுப வத்தாற் றவிருமவ் விகற்ப மெல்லாம். 216

சமதமா தியைய டைந்த சதுரனுஞ் சங்கி யாசி
யமலமாஞ் சமாதி யாற்றன் னகண்டபா வம்பொ ருந்தித்
தமசினால் வருவி கற்பந் தள்ளிநிர் விகற்ப னேயா
யகலமாம் பிரமா கார மாகவே சுகித்து நிற்பன். 217

எவர்கடஞ் சுரோத்தி ராதி யிந்திய மிதய மியாவுஞ்
சுவமதா ஞானன் மாவிற் சுத்தமாய்ப் பிரவிலா பித்தங்
கவமிலாச் சமாதி பெற்றோ ரவர்களே முத்த ரானோர்
விவிதமாம் பரோட்ச வார்த்தை விளம்புவோா முத்த ரன்றால்.

பேதமா முபாதி யாலே பின்னனு மொருவன் றானே
யேதமா முபாதி தீர்த்தா லேகனு மவனே மற்று
மாதலா லுபாதி தீர்க்க வனிசமும் விவேகி யானோன்
சாதக நிருவி கற்ப சமாதியே செய்ய வேண்டும். 219

ஏகமா நிட்டை யாலே யென்றுமே பிரமத் தின்க
ணுகுமா சக்தி யுள்ளோ னகண்டகற் பிரம மாவன்
சோகமே யுற்ற கீடஞ் சுற்றிய பிரம ரத்தை
யேகமாய்ப் பாவித் துத்தா னென்றுமே யஃதா யிற்றே. 220

கிரியைக ளியாவும் விட்டுக் கீடகம் பிரம ரத்தை
மருவியே தியானஞ் செய்து மற்றதே யாகு மாபோ
லொருமையா நிட்டை யாலே யுண்மையாம் பிரமந் தன்னைச்
சருவதாத் தியானிப் போனுஞ் சத்தியம் பிரம மாவன். 221

மிகவுமே நுண்மை யான மெய்ப்பரப் பிரமந் தன்னைத்
தகவிலாத் தூல திட்டி தன்னினு லெவருங் காணா
நிகழ்மதி நுண்மை யுள்ள நிமலரே சமாதி யாலே
மிகவுமே சூக்க மான விருத்தியாங் கண்ணாற் காண்பர். 222

மெத்தவும் புடபா கத்தான் மேவிய மலத்தை விட்டுச்
சுத்தமாந் தன்கு ணத்தைச் சொன்னமே வுவதே போலச்
சித்தமுந் தியானத் தாலே சேர்ந்தமுக் குணம லத்தைச்
சுத்தமாய் விட்டுத் தன்னின் சுபாவமாஞ் சொரூப மேவும். 223

இடைவிடாத் தியானத் தாலே யிருதயஞ் சுத்த மாகித்
திடமுறப் பிரமத் தின்கண் டியங்கிடா தடங்கு மெப்போ
தடர்மிகு மகண்டா னந்த வநுபவ வேது வான
சடமிலா நிருவி கற்ப சமாதியப் பொழுதே யுண்டாம். 224

ஆனவச் சமாதி யாலே யகிலவா சனை முடிச்சும்
போனதாம் விவித மாகப் பொருந்திய கன்மம் பொன்று
மேனையுள் வெளியி லெங்கு மென்றுமோர் முயற்சி யின்றி
யுனமில் சொரூபத் தோறற மொருமையா யொளிரா நிற்கும்.

பலிப்பினுற் பார்க்கும் போது பாங்கான சிரவ ணத்தின்
சலிப்பிலா மனனந் தானே சதகுண மேலா மத்தி
னிலைப்பிலா நிதித்தி யாச மிலக்கமாங் குணமே லாகு
மனுப்பிலா நிருவி கற்ப மளவிலாப பலனு டைத்தாம். 226

பிரிவிலாச் சமாதி யாலே பிரதிபந் தங்க ளின்றி
யொருமையாய்ப் பிரம ரூப முணரலா மஃதி லாதேற்
சருவதா மனவி ருத்தி சஞ்சல மாத லாலே
விரிவுற விரோத மான விருத்தியோ டேக லக்கும். 227

ஆதலாற் பொறிகள் புந்தி யடக்கிநீ நின்னுன் மாவிற்
சாதுவே சமாதி பெற்றுச் சந்ததம் பிரம ஞானச்
சோதிகொண் டவிசா ரத்தாற் சுழல்வுறு மிருளை யெல்லா
மீதியில் லாது நீக்கி மிஞ்சிய வடிவாய் நிற்பாய். 228

ஏதுமே பேசாத் தன்மை யெவளவும் வாங்காத் தன்மை
கோதுறு மாசை யின்மை குறைவுசெய் கிரியை யின்மை
சாதுவே யேகாந் தத்திற் சந்ததம வாசஞ் செய்கை
யீதெலாஞ் சமாதி தன்னை யிசைந்திட முந்து மார்க்கம். 229

ஏகாந்த தேச வாச மிந்திய மடங்க வேது
போகாத வவ்வ டக்கம் புரைமன மடங்க வேது
வேகாத வவ்வ டக்க மிவ்வுட லாதி நானென்
ருகாத வாத னைக்கோ ளடங்குதற் கேது வாமே. 230

வாதனை யடக்கத் தாலே வரையிலாப் பிரமா னந்தத்
தேதமி லறுப வந்தா னென்றுமே தியானிக் கெய்து
மாதலால் விவேகி யானோ னலைமன வடக்கந் தன்னைச்
சாதுவே முயற்சி யாலே சாதிக்க வேண்டு மென்றும். 231

அரியனே மனதில் வாக்கை யடக்கதைப் பத்தி யின்கண்
பிரிவற வடக்க வற்றைப் பிறங்குசாட் சியில டக்கு
புரையிலாச் சாட்சி தன்னைப் பூரண நிருவி கற்பப்
பிரமமாய்த் தானே பார்த்துப் பெருகிய சாந்தி சார்வாய். 232

ஏதமாந் தேகம் பிராண னிந்திய மனது புந்தி
யாதியா முபாதி கட்கு ளலெமென மெந்த வெந்தக்
கோததா முபாதி யோடே கூடமம் மயமே யாக
வோதிய தியானி யாவ னொழிவிலா னந்த மொன்றான். 233

ஆதலா லந்த வந்த வனர்த்தமா முபாதி சேர்ந்த
வேதமாந் தன்மனத்தை யேகாது மீட்க வேண்டிச்
சாதுவே தியானி யானோன் சகலமு நன்றாய்த் தள்ளி
யோதிய பிரமத் தின்க ணோய்வதே யொழியா வின்பம். 234

பாகனே விரக்தன் றானே பரமோட்ச விச்சை யாலே
வாகியாந் தாத்தி னாலே வருவதாம் பற்றி ரண்டு
மேகமாய் விடுவ தாலே யியம்பிய விரக்த னுக்கே
வாகியாந் தரமி ரண்டாய் வருத்தநற் றுறவு கூடும். 235

பரவிய புலன்க ளோடே பற்றுதல் வெளிப்பற் றாகு
முரவகங் கார மாதி யோடேபற் றுட்பற் றாகும்
பெருகிய விரதி பெற்றோன் பிரமநிட் டையைய டைந்திவ்
விருவிதப் பற்றை யுந்தா னேகமாய் விடுக்க வல்லோன். 236

பரவிடு மோர்பட் சிக்குப் பறந்திட விருபட் சம்போன்
மருவிடு மோட்ச மாகு மாடிமேற் சீவ னேற
விரதிநல் விவேக மென்ன வேண்டிய திரண்டு பட்ச
மிருமையி லொன்றி லாதே வீதின்மீ தேற வொண்ணா. 237

மிகவுமே விரக்த னானோன் மேவுவன் சமாதி தன்னைப்
புகழ்சமா தியை யடைந்தோன் பொருந்துவன் றிடபோ தத்தை
யிகழ்விலாப் போத முற்றோ னெய்துவன் முத்தி தன்னைத்
தகமைசேர் முத்த னென்றுந் தடையிலா னந்த முண்பன். 238

விரதியை விடவே றொன்றும் விமலமாஞ் சுகம ளிக்கக்
கருதிய வேது வாகக் காண்கிலேன் றியானிக் கெங்கு
மரியனே யவ்வி ரக்தி யமலமா ஞானத் தோடே
மருவுமேற் பேரா னந்த மாறும ளிக்கு மென்றும். 239

யாதினுன் முத்தி யென்னு மிலங்கிய மாதைச் சேர
வோதிய விரக்தி தானே யுத்தம மார்க்க மாகு
மாதலா லகில மான வாசையு மறவே விட்டுச்
சாதுவே நின்னுன் மாவிற் சநததங் கருத்தை வைப்பாய். 240

விடசம விடயத் தின்கண் விடுதிநீ யாசை யெல்லா
மடமைசெய் யாசை தானே மரணாதி மாக்க மன்றோ
படர்குலஞ் சாதி யாதி பற்றிய வபிமா னத்தோ
டிடர்தருங் கன்ம மெல்லா மெவளவு மிலாது தீர்வாய். 241

மித்தையாந் தேக மாதி மிசையக மதியைத் தள்ளிச்
சத்திய வான்மா வின்கண் சாலவம் மதியைச் செய்வாம்
நித்தமும் சாட்சி நீயே நிமலநிர்ப் பயமாய் நின்ற
வுத்தமப் பிரம நீயே யுள்ளவா றோருங் காலை. 242

இலக்கியப் பிரமத் தினக ணிதயதனை யூனற வைத்துச்
சலித்திடு மிந்தி யத்தைத் தனதுகோ ளகத்தி ருத்தி
யலைதிடா வாக்கை யோடு யதனிலே யுபேட்சை செய்து
நிலைத்துள பரசீ வைகஙிய நித்தநீ யடைதி மைந்தா. 243

அந்தவைக் கியம டைந்த வகண்டமாம விருத்தி யாலே
சுந்தரப் பிரமா னந்தச் சுதையினை மகிழ்சசி யோடே
சந்ததம் பானஞ் செய்வாய் சாரமில் சகத்தைப் பற்றிச்
சிந்தைசெய் மயலக ளாலே சேர்பய னுண்டோ சொல்வாய்.

கருதொணாத் துயருக கெல்லாங் காரண மாகா நின்ற
மருளுறு மனன்ம சிந்தை மாசற விடுத்து நித்த
மரியனே யின்ப முத்தி யடைவதற் கேது வான
பிரியமா மான்ம சிநதை பிரிவறச் செய்தி யென்றும். 245

நிகழ்சுயஞ் சோதி யாகி நிகிலசாட் சியுமா மான்மா
புகலும்விஞ் ஞான கோசம் பொருநதியே விளங்கு மென்று
மிகழ்விலா விவ்வான் மாவை யிலககிய மாகப் பற்றி
யகமென வநுபவிபபா யகண்டமாம விருத்தி யாலே. 246

இகழ்விசா திகவி ருத்தி யாதுமே யில்லா தென்றுந்
தகமையாய்ப் பழகா நின்ற சந்தத விருத்தி யாலே
சுக்கன மான வான்ம சோதியைச் செவ்வி தாக
வகமெனக் கோச ரித்திங் கனிசமு மறிய வேண்டும். 247

பகருமிப் பரமான் மாவிற் பாங்குற வான்ம புந்தி
மிகவுமே திடமாய்ச் செய்து மித்தையா மகங்கா ராதிப்
பகையிலாப் புந்தி விட்டுப் பலவுமா மவற்றி லென்றும்
புகல்கட படாதி யிற்போற் புத்திர வுபேட்சை செய்வாய். 248

போதமாத் திரமே யாகப் பொருந்திய சாட்சி யின்க
ணேதமின் மனத்தை நன்று யிருத்திநற் பழக்கத் தாலே
சாதுவே மெள்ள மெள்ளச் சலனமில லாது செய்து
தீதிலாப் பூர ணத்தைத் திகழவே நோக்க வேண்டும் 249

ஏதமாந் தேகம் பிராண னிந்திய மனத கந்தை
யாதியஞ் ஞானத் தாலே யாக்கிய் வுபாதிக கூட்ட
மேதுவி லகண்ட போத வின்பமாந் தன்னுன் மாவை
யோதிய மகாகா சம்போ லொன்றென வுணர வேண்டும். 250

ஓதிய கடமகு தூல மூசம்ய முதலாய வநத
பேதமா முபாதி போனுற் பெரியவா காச மொன்றே
யீதுபோ லகங்கா ராதி யீனமா முபாதி போனுற்
போதவா னந்த சுத்த பூரண வான்மா வொன்றே. 251

யாதினு லயனே யாதி யீனமாக தம்ப மீறு
யோதிய வுபாதி யெல்லா முண்மையில் லாத தாகு
மாதலா லேக ரூப மாகிய தன்னுன் மாவைப்
பேதமில் புரண மாகப் பேணியே பாரக்க வேண்டுமே. 252

எதிலெது மயக்கத் தாலே யீங்குக் கற்பிதமா யிற்றோ
வதுவது வாகு மனறி யறிநதிடி லதிலவே றுகா
திதமுறு ஞானத் தாலே திகழ்மய னசிக்கும் போதிங்
கெதிரவே கண்ட சர்பப மிரச்சுவே யன்றி வேறோ. 553

ஈதும்பா லான்மா வின்க ணிலங்கிய யாவு மான்மா
வாதலா லான்மாத் தானே யயனரி யரனு மாகு
மோதுமிந் திரனு மாகு முயர்சுரர் நரரு மாகு
மேதுமே யான்மா வன்றி யெவளவு மதில்லை யில்லை. 254

அலைநுரை குமிழி மற்று மாகிய சுழலே யாதி
பலபல வுருவ மெல்லாம் பார்க்கிலோர் சலமே போல
வலைவுறு தேக மாதி யகங்கர மீறு யாவு
நிலையுறு சித்தே யாகு நிமலமாஞ் சித்த தொன்றே. 255

வானிகர் மலமி லாதாய் வருவிகற் பமுமி லாதா
பூனமா மளவி யங்க லோர்விகா ரமுமி லாதா
யானவுள் வெளிவி லாதா யபினவத் துவித மான
வீனமில் பிரம மோநா மினியெதை யுணர வேண்டும். 256

விரிவதா யிங்கு ரைக்க வேண்டிய தொன்று மில்லை
பிரமமே சிவ ரியாவும் பிரமமே பரவு மீசன்
பிரமமே யனுவீ ருகப் பிறங்கிய சகம னைத்தும்
பிரமமே யேக மென்று பேசலாற் சுருதி யெல்லாம். 257

பிரமமே நாமென் றிந்தப் பெரிதான ஞானம் பெற்றோர்
பரவிய பாகி யத்தைப் பற்றாது நன்றாய் விட்டே
யொருமை யானந்த சித்தா யுண்மையா யுள்ள வந்தப்
பிரமமே யாகி யென்றும் பிறங்குவ ருறுதி யீதே. 258

மலமய தூல மீது மற்றுமே வாயு வைப்போ
லலைவுறு சூக்க மீது மகமபி மானம் விட்டுப்
பலமறை புகமூா னந்தப் படிவமாம் பராா னென்றே
சலனமில் பழக்கத் தாலே தற்பர வடிவாய் நிற்பாய். 259

தன்னுடை மனவி ருத்தி தன்னுடைச் சொரூப மாகப்
பன்னிய நிருவி கற்பப் பரமமாம் பூர ணத்தின்
மன்னியே சமாதி பெற்றான் மற்றொரு விகற்ப முந்தான்
றன்னெதிர் காணு தத்தாற் றத்வமாய் விகற்ப மில்லை. 260

சித்தமே மூல மாகச் செறிந்தன விகற்ப மெல்லாஞ்
சித்தமில் லாத போது சிறிதுமே விகற்ப மில்லைப்
புத்திர வாத லாலே புகன்றசித் தமுந சிக்க
நித்தமும் பூர ணத்தி னிலைமையாய்ச் சமாதி செவ்வாய். 261

பகுதியின் விகார மின்றிப் பாவனு தீத மாகித்
திகழுமோ ருவமை யின்றித் திரசம ரசமே யாகிப்
புகழ்பரி புரண மான பொருளினை வித்து வான்று
னிகழ்வுறு சமாதி யாலே நித்தமு மனுப விப்பன். 262

வளமுறு சமாதி பெற்று வழுவிலா மனத்த னாகி
யளவிலா மகிமை யுள்ள வகண்டமே யறுப வித்துத்
தளர்விலா முயற்சி யாலே சம்சார பந்தந் தள்ளி
வெளியிலா வாண்மை தன்னை யின்றுநீ சபலஞ் செய்வாய். 263

சருவமா முபாதி யின்றிச் சச்சிதா னந்த மாகி
யொருமையா யுள்ளந் தன்னி னுன்வடி வாக நின்ற
பொருவிலாப் பிரமந் தன்னைப் பொருந்திநீ பாவிப் பாயேன்
மருவிய சம்சா ரத்தின் மார்க்கமே மற்றுஞ் செல்வாய். 264

சச்சிதா னந்த மான சாந்தமாம் பிரமத் தியி
லிச்சட வுபாதிப் பஞ்ச யாவையு மெரித்துப் பின்பிவ்
வுச்சமாய்ப் போதா னந்த வுண்மையாய்த் தூய்தாய் நின்ற
துச்சமில் பிரம மாகத் துலங்குவன் ஞானி யென்றும். 265

மிகுந்துள விராகத் திற்கு மேவிய பயனும் போதம்
பகர்ந்தவப் போதத் திற்குப் பயனுப ரதியே யாகுஞ்
சுகந்தனி னனுப வத்தாற் றொடர்வுறு சாந்தி தானே
பகர்ந்தவவ் வுபர திக்குப் பரமான பயனு மைந்தா. 266

வகுத்துள போக்கி யத்தின் வாதனை யுண்டா காமை
மிகுத்துள விராகத் திற்கு மேவிய வவதி யாகும
பகுத்துள தேக மாதி பற்றிய வகந்தை பின்பு
மகத்தினு ளுண்டா காமை யவதியாம் போகத் திற்கே. 267

சந்தத முயற்சி யாலே சச்சிதா னந்த மான
சுந்தரப் பிரமத் தின்கண் சூக்கமாய் லீன மான
சிந்தையின் விருத்தி மற்றுஞ் சிறிதுமே யுண்டா காமை
மைந்தனே யவதி யாகு மாசிலா வுபர திக்கே. 268

நித்தமும் பிரமா கார நிலைமையாய் நிற்ப தாலே
யத்திர வாகி யங்க ளறிந்திடா மனத்த னாகி
நித்திரை யுற்றோன் போலு நினைவிலாப் பாலன் போலு
மத்திர விடய போக மனியரா லறிநதோ னாகி. 269

சொப்பனந் தன்னிற் கண்ட சொரூபமில் சகத்தைப் போலிக்
கற்பித சகத்தை யோரோர் காலமே காண்போ னாகி
யிப்படி யுள்ள ஞானி யாவனோ வவனே தன்னிய
னற்பமில் புண்ணி யப்பே றடைந்தவ னவனே பூச்சியன். 270

யாதொரு சந்நி யாசி யேகமாம் பிரமத் தின்கண்
டீதர லீன மான சித்தனாய்ச் செய்கை யின்றி
யேதுமே விகார மின்றி யென்றுமே யின்பஞ் சார்வ
னோதிய வன்ன வன்றா னொளிர்திடப் பிரக்ஞ னானேன். 271

சுத்தநற் பிரம சீவர் சொரூபமா மைக்கி யத்தை
நித்தமுங் கோச ரித்து நிருவிகற் பகமே யான
சித்துமாத் திரவி ருத்தி சிரபெறும் பிரக்ஞை யிதனை
நித்தமும்பற்றி நின்றோ னிமலமாஞ் சீவன் முத்தன். 272

தேகவிந் திரிய மாதித் திரளிலே யகந்தை யும்பற்
றாகிய பொருள்க டமமி லமைவுறு மமதை யுந்தா
னேகமா யாவ னுக்கிங் கெங்குமே யிலாத தாகு
மோகமி லவனே சீவன முததனென் றுரைக்க லாவன் 273

நிலைபெறு ஞான முற்று நிரந்தர வின்பம் பெற்று
வலைவுறு சகம றந்திங் கமர்ந்தவன் சீவன் முத்தன்
சலமென விருத்தி கெட்டுஞ் சாக்கிர முற்றோ னாகி
யிலகுசாக் கிரமு மின்றி யிருப்பவன் சீவன் முத்தன். 274

எவனிகழ் வாத னைக்கோ ளிலாத நல் ஞானமுற்றோ
னெவன்வெகு விகற்ப மான விப்பவ மியாவும் விட்டோ
னெவன்கலை யுற்றோ னாயு மேதுமே கலையற் றோனு
மவனிடர் பந்த மற்ற வமலனாஞ் சீவன் முததன். 275

பூதகா லத்தி றந்த பொருளினைச் சிந்தி யாமை
யோதிய வருகா லத்தி லுறுபொரு ளோர்ந்தி டாமை
யேதுமே நிகழ் காலத்தி லெய்தினு மதினு பேட்டை
யீதெலாஞ் சீவன முத்த னிலக்கண மாகு மைந்தா. 276

ஏதமுங் குணமுஞ் சேர்ந்த வியல்பினால் வெவ்வே றான
யாதினுஞ் சமமாம பார்வை யெய்தினோன் சீவன் முத்த
னோதிய பார்வை யாலே யொன்றிய விட்டா நிட்ட
மேதினும் விகார மற்றோ னிலங்கிய சீவன் முத்தன். 277

பிரத்திய கபின்ன மான பிரமவா னந்தந் தன்னைக்
கருத்திலே யநுப விக்கக் காதலுண் டான சித்த
விருத்தியைப் பற்ற லாலே வெளியினு முளினும் வேறு
கருத்துறு ஞான மற்றோன் களங்கமில் சீவன் முத்தன். 278

விரித்துள சகத்தி னுக்கும் விமலமாம் பிரமத் திற்கும்
பிரத்திய கான்மா விற்கும் பேசிய பிரமத் திற்கும்
விருத்தமாம் பேதந் தன்னை விருத்தியி லோர்கா லேனுந்
தரித்திடு ஞான மற்றோன் றகைமையுள் சீவன் முத்தன். 279

சடமான விக்ஷேபத்தைச் சாதுக்களர்சித் தாலுந்
தொடர்வான விதனை மற்றோர் துட்டர்கள் பீடித் தாலுந்
திடமான ஞான நிட்டை சேர்ந்துள திறமை யாலே
பிடராத சமபா வத்தை யெய்தினோன் சீவன் முத்தன். 280

சுருதியின் பலத்தி னாலே சூக்கும வான்மா விற்குப்
பிரமபா வத்தை நன்றாய்ப் பேணியிங் கறிந்த வன்றான்
மருவிய பவபந் தத்தை மாசற விடுத்தோ னாகி
யருமையாங் கைவல் யத்தை யடைகுவ னைய மில்லை. 281

பேதமாய் நதியில் வந்த பிரவாகம் வாரியிற் போல்
யாதொரு வெதியி டத்தி லெய்திய விடய மெல்லாங்
கோதிலாச் சொரூப மாகக் கூடியே லயிக்கு மற்று
மேதுமே கலக்கஞ் செய்யா தின்னவன் சீவன் முத்தன் 282

மெத்தவும் பெண் மயக்க மேவிய மூடன் றன்னின்
சித்தமுந் தாயிடத்திற் செல்லாது நிற்குமா போற்
சுத்தவா னந்த மான சொரூபமே யுணர்ந்தோ னுக்குஞ்
சித்தமிவ் விடயா னந்தஞ் செல்லாது நிற்கு மன்றே. 283

பிரமமே நாமென் றிங்ஙன் பெற்றுள ஞானத் தாலே
சருவதாக் கற்ப கோடி சஞ்சித வினை நசிக்கு
மருளறு சாக்கி ரத்தான் மயக்கமாஞ் சொப்ப னத்திற்
கருதிய கன்ம மெல்லாங் காணாது நசிக்கு மாபோல். 284

சங்கமில் லாம லென்றுஞ் சாந்தமாம் தத்து வத்தைப
பங்கமில் லாது தானாய்ப் பார்த்து நன்றா யறிந்த
துங்கமாஞ் சன்னி யாசி தூரவா காமி யத்தை
யெங்குமே யெவள வேனு மென்றுமே யிசையான் விண்போல்.

சித்தமு வாக்கு யாவுஞ் சென்றுகோ சரிக்க வொண்ணாச்
சத்ததாய்ச் சுத்த சித்தாய்ச் சாருமோ ருவமை யின்றி
நித்தமா னந்த மாகி நிகழ்சொரூ சித்த மான
வத்வயப் பிரமத் தின்க ணணுவுமே பேத மில்லை. 286

நிருவிகற் பகமே யான நிருமலச் சமாதி கொண்டே
யொருமையா முன்சொ ரூப முணர்வதாந் திட்டி யாலே
மருடரு மைய மின்று மாசற நோக்கு வாயேற்
பிரியநீ கேட்ட வத்து பின்னரும் பேதி யாதால். 287

சுருதிகள் பொதுவே யாகச் சொல்லிடு மெப்ப டித்தாய்க்
குரவரு மப்ப டித்தே கூறுவர் சீட னேநம்
பரசிவ னருளாற் றந்த பரமுணர் ரநுபவத்தால்
வரையிலாப் பவமா கின்ற வாரிதி கடக்க வேண்டும். 288

சகலவே தாந்த நூலிற் சாரமாய்த் திட்டி மூன்று
திகழுமத் திட்டி யாலே திருசிய மியாவு நீக்கி
நிகழுமத் துவிதா கண்ட நிரு மலப் பிரமந் தன்னை
யகமென வறிந்த வன்று னகண்டனாய் முத்த னுவன். 289

பரவிய திட்டி மூன்றின் பகுப்பினைப் பகரக் கேளாய்
விரிவுறு வாத திட்டி மித்தியா திட்டி மற்றும்
பிரிவெலா நீக்கா நின்ற பிரவிலா பதிட்டி மூன்று
மிருமைதீ ரிவைக டமமி னிலக்கண மியம்பு வாமே. 290

மருவிய சுழுத்தி போலு மகத்தான தானு போலும்
பிரமமா மென்னி டத்திற பிறிதுபோற் காண்ப தெல்லா
மொருவனு வேனு மில்லை யுள்ளவ னேனே யென்று
நிருமலப் பார்வை தானே நிகழ்ததிய வாததிட்டி. 291

இருமைசேர் கனவு போலு மிந்திரசாலம் போலும்
பிரமமா மென்னி டத்திற் பிறிதுபோற் காணப் பட்ட
சருவமும் மித்தை யாகுஞ் சத்திய நானே யென்று
விரிவுறும் பார்வை தானே மித்தியா திட்டி யாகும். 292

பரவிய வாழி போலும் பார்த்திடுங் கனவு போலு
மொருசிதா காச மான முருவமா மென்னி டததிற்
பிரிவுபோற் காண்ப தெலலாம் பிரமமா நானே யென்று
பிரிவிலாப் பார்வை தானே பிரவிலாப திட்டி யாகும் 293

ஓதிய திட்டி மூன்றி லுளத்தினு ளிசைநத தான
வேதொரு திட்டி யாலு மிருமையாந் திருசி யத்தைத்
தீதற நீககி நித்தந் திருக்குமாத் திரமாய் நின்ற
பேதமில் பரமு ணர்ந்து பேற்றினை யடைய வேண்டும். 294

பரமமாம் வேதாந் தத்தின் பரம சிததாநத மீதே
பிரமமே சீவர் யாவும் பிரமமே சகம னைத்தும்
பிரியனே பிரம மாகப் பிரிவற விருத்தன் மோட்சஞ்
சுருதியின் முடிவ னைத்துஞ் சொன்னதிற் பிரமா ணங்காண். 295

பிரமசீ வைக்கி யத்தைப் பேணினு னறிந்த தாலே
பிரிவுசெய் புந்தி யும்போய்ப் பிரவிர்த்தி யாவு நீங்கி
யுருவிது வுருவிதன்றென் றென்றையு முணாகி லேனியா
னொருமையா மிச்சு கத்திற் குற்றவோர் கரையுங் காணேன்.

தெரிந்திடும் பொருளு னன்று தெரிந்திடாப் பொருளு னன்று
விரிந்துள வினைக ளெல்லாம விளக்கிநற் சுதத மாகி
நிரநதரமாக வெங்கு நிரம்பியுள் வெளிக ளின்றிய
பொருநதிய வகண்டா னநத போதமாம் பிரம மேநான். 297

அகண்டமாம் பிரமத் தோற்ற மகிலமு மாத லாலே
சகமிது வென்னுந் தோற்றஞ் சத்தியப பிரம மேயென்
றகத்துறு மான்ம நோக்கா லறிய சித்த னுய்நீ
யிகபர மெவ்வி டத்து மேகமா யென்றும் பார்ப்பாய 298

ஏதமாம் பதிபந தஙக ளினறிய விருத்தி யாகிப
பேதமில் பிரம ஞானம் பெற்றுள பெரியோ ருககு
யாதொரு தேசங் கால மிலக்கிய திட்டி யாதி
யோதுமா சனமே யாதி யொன்றுமே தேவை யில்லை. 299

தன்னினை யறிவ தற்குத் தானொரு நியமம் வேண்டா
மன்னிய கடமி தென்று மறைவற வறிவ தற்குத்
துன்னிய பொருள் விளக்கந் தோடமில் சட்சு வன்றிப்
பின்னொரு நியமந் தன்னைப் பேணுவ தெங்கு முண்டோ. 300

அந்தவா நித்த சித்த மாகிய வவ்வா ன்மாவுஞ்
சொந்தமா மனவி ருத்தி சுத்தமா யிருக்கும் போது
சந்ததந் தானே தோன்றுஞ் சாருமோர் தேசங் காலம்
பிநதியோர் சுத்தி யாதி பேணுவ தொன்று மில்லை. 301

பிரிவிலா னந்த திருப்தி பெற்றுள பரம வித்து
மருவிய விடயத் தாலே மகிழ்வு சோர் வடையா னத்தி
துரவிய காம மாதி யுற்றிடான் றன்னி டத்தே
சருவதா ரமிப்போ னுகிச் சநதத மகிழ்ச்சி சார்வன். 302

சிந்தை தைனிய மிலாமற் செறிபலி யன்ன முண்டு
வந்துறு குளமே யாதி வாரியைப பானஞ் செய்து
பந்தமா நியம மற்றுப் பயமற வனம யான
வெந்தவோ ரிடத்து ஞானி யேகனுய்த் துயில்செய் வானல்.

சுத்தமாய்த் தோய்த்து லர்த்தாத் துகிறரித் தலது திக்கை
வத்திர மாயு டுத்தி வநதபூ மியி னடநது
வித்தர வேதாந் தத்தின் வீதியிற் சஞ் சரித்து
வித்துவான் பிரமத் தின்கண் விமலமாய் ரமிப்ப னென்றும். 304

இன்ன வென் றுணர வொண்ணு விலக்கண முடையோ னுகிப்
பன்னிய பாகிய த்தைப் பற்றிடா வான்ம ஞானி
யன்னிய ரிச்சை யாலே யமைவதைப் பால னேபோற்
றுன்னுதே காபி மானத் துகளிறந் தவனுய்த் துய்ப்பன். 305

அகண்டமாஞ் சிதம்ப ரத்தி லமர்ந்துள பிரம ஞானி
திகம்பர மலது மற்ரோ திவ்விய வம்ப ரந்தான்
வகுத்தவோர் வற்க லாதி வத்திரந் தானு டுத்திப்
பகுப்பிலாப் பாலன் பித்தன் பசாசெனச் சஞ்ச ரிப்பன். 306

தத்துவ மறிந்த யோகி தன்னிலே தான்ம கிழ்ந்து
நித்தமுஞ் சருவான் மாவாய் நிகழ்ந்துதன் னிச்சை வாறே
யெத்தனை யுருவோ வாகி யேதுமே தான்பு சித்தங்
கித்திற மேக னுகி யெங்குமே சஞ்ச ரிப்பான். 307

ஒருமையாம் பரமா னந்த முற்றுள பிரம ஞானி
யொருவிட மூட னேபோ லொருவிடம் வித்து வான்போ
லொருவிட மன்ன னேபோ லொருவிடம் பித்த னேபோ
லொருவிடம் சாந்த னேபோ னுலகினிற் சஞ்ச ரிப்பன். 308

ஒருவிடஞ் சாக ரத்தோ டொத்தவா சார னுகி
யொருவிட நேய னுகி யொருவிட நேய னன்றி
யொருவிட மறையோ னுகி யொருவிடந தெரிவோ னுகி
யுரைதரு மிவ்வா றெல்லா மொருவனே சஞ்ச ரிப்பன். 309

அருத்தமில் லாதி ருந்து மனிசமு மகிழ்ச்சி சார்வ
னொருத்தரின் சகாய மற்று முரவிய பலமே சேர்வன்
திருப்திசெய் புசித்த லற்றுந் திருப்தியே நித்தஞ் சேர்வன் [ன்.
பொருத்தலில் விடம மெல்லாம் பொருந்திய சமமாய்ப் பார்ப்ப

சததஞ் சீவன் முத்தன் சக்கர மூலமே போற்
கர்த்துரு கரண மாதி கற்பனை யாவு மற்றுச்
சுத்திய விநதியத் தைச் சுழல் புலன் றன்னிற் சேரா
னதனின் றுந்தி ருப்பா னவனுதா சீன னவன். 311

ஒருகட ளொரு வேடத்தை யொன்றினு மொன்றுப் போதும்
புருடனே யாகுமா போற் பூரணப் பிரம வித்து
மொருமையி லுபாதி தன்னை யொன்றினு மொன்றுப் போதும
பிரமமே யாவ னன்றிப் பிறிதெது மாக மாட்டான். 312

ஏதெனி லிந்தத் தேக மிறந்திடன் மோட்ச மன்றே
யோதிய கடதண் டாதி யொழித்தலு மோட்ச மன்றே
யேதமா மவித்தை யாலே யெய்திய மனமு டிசக
யாதுமே யொழிவ தன்றோ வெதிகளுக் கிசைந்த மோட்சம

ஆதலா லெவணின் ஞானி யாக்கைதான் வீழ்நத தாலே
ேேறிய தருவின் பன்ன மொருநதி வாய்க்கால் வீதி
மேதகு சிவா லயாதி மீதுதான் வீழ்ந்த தாலே
யேதுமே சுபா சுபந்தா னிசைவது தருவுக் குண்டோ. 314

சகலவா சையுமே யற்றுச் சாரமாம் புத்தி பெற்றுப்
புகல்கவி தோட மொன்றும் பொருநதிடா முமுட்சுத் தன்னை
சகமிதி னீசோ தித்துச் சாற்றுமிப பொருளை யெல்லாம்
மகனே யவ் வதிகா ரிக்கே மயலற வுபதேசிப்பாய். 315

மெத்தவுங் கிட்டி நின்ற மெய்யுணர் வனந்தா னந்த
வத்வயப் பிரம மாகு மமிர்தவா ரிதியைக் காட்ட
வுத்தமச் சங்க ராசா னுரைத்திடு மிநத நன்னூல்
நித்தமு முத்தி யின்ப நிலைமையாய் நிகழா நிற்கும. 316

மகிழ் தரு விவேக சூடா மணியெனு மிந்த நூலை
யகமுற வாசான் முன்பா யமலமாய்ப் படித்த நிநதோன்
சுககன வடிவாய் நித்த சுத்தமாம் பரமான் மாவே
யகமென வறிந்து நன்று யகண்டமா யிலங்கா நிற்பன். 317

பஞ்ச தசப் பிரகரணம்.

தன்னிடத்திற் கற்பனையாஞ் சீவனுற்ற சமுசார மவனை யுந் தன் சுபாவ மாக, வுன்னுகின்ற மயக்கமதே யஞ்ஞானத் தா னொருபோதுஞ் சமுசார மடைய வில்லை, யன்ன சமுசாரி சமுசாரம் பொய்யென் றறிகின்ற விவேகமதே யஞ்ஞா னத் தைப், பின்னமுறத் தள்ளுகின்ற வுபாய மோர்வாய் பிறங்கு மந்த விவேகமெது செய்தாற் கூடும். 1

மேலுரைத்த வபரோட்ச ஞானம் வந்தால் விசார முடிவா மறியிவ்விரு ஞானத்துக், கோலமிடு மிலக்கணமே தென்னிற் பிர மமொன்றே யுண்டென வறிதல பரோட்ச ஞானந், தூல மிலப் பிரமோனா மென்கின்ற துணிவபரோட் சக்ஞான மறிவா யிந்தக், கோலமுள வபரோட்ச ஞானந் தனைக் கொடுக்கின்ற விசார மேதென் னிற்சொல்வாம 2

வேதாந்த ஞானிகடான் பகுத்தறிந்து விமல முத்த ராவ ரெனல் சித்தாந்தங் காண், வேதாந்த மல்லாத சாத்தி ரத்தால் வேறாகா முத்தியது வில்லையோ வென்னிற், பேதானமற்ற சாத்தி ரங்க ளெல்லாம் பிராந்தர்களைக் குறித்துமே செய்த தாலே, கோதான கலக்கமேற் கலக்கமாகக் குழம்புமலாற் பிராந்தி யதைப் போக்கா தோர்வாய். 3

பின்னமுற வெவ்வளவும் விரோத மிலையென வறிதிபிரம மொன்றுண்மை மற்றுச்,சொன்ன பொருள் சகலமு மாயை மய மென்பதிற் றோன்றுமள வென்ன வென்னி, லுன்ன லுறு மிவ் விதத்தோ துமுப்பதது ரெண்டுபடிடத மளவையோர் வாய், பன்னுமிது வரை சொனது சிததிலக்க ணமதாம் பகரும் வேதா ந்த மதிலே. 4

செகசீவ பரமெலா முண்மையாய் வருவதைத் திகழ் மாயை யென்ப தெங்ஙன, னிகரிலா மாயை கற்பித மெலாம் லௌகீகர் நினைவதனி லுண்மை யெனவு, முகமான யுத்தியினி லநிர் வாச் சிய மெனவு மோதும் வேதாந்த ஞானிக், கிகலான மூன்று கா லத் தினு மிலாதா யிருக்கு மென்ற றிகுவாயே. 5

செகத்து மாயா மயமென் பதனை யாவருந் தெரியாத வித மே னெனிற், றெருகுத்த விநதிர சாலமுடை யவனை யறியும்வரை

தோன்று மவை யுளதுபோல, வகுத்த மாயையின திட்டான ம
தை யறியும்வரை மாயை யுளதாக வெய்தும், பகுத்ததி னதிட்
டான மோர்ந் திடிற பொய்யெனப் பயிலுமென வறிகுவாயே. 6

உரையான மேகம்போ லிருக்கு மாயை யோதுமதன் றிவ
லைபோ லிருககும் புததி, பிரியாத வாசனைக டிவலை தன்னிற பிரு
திவிம் பாகாச மதுபோ லிருக்கு, மிரியாத சிதாபாசன் மேக வா
ன்போ லிருப்ப ரீசுர னெனவேயறி வாயானற், பரிவான மாயை
புத்தி யதனில்வந்த பரசிவர் தலையெங்ஙன் பகுததுக் காண்டல்

படமதனி னூலுபாதா னமாகப் பரவுதல,போற் சகமதனி
லிவனே நானு, மடருபாதான மதாற் செகங்க ளியாவு மவனுக்
குசசரீர மது சகலசிவ,ரிடமதினு மிருந தபிமானக கயிற்றை யி
சைத்துமே தேகாதிப பாவை தனைடைப,படரும் விதிவிடேத வழி
யாட்டி விப்பன் பரசிவ னெனுங்கீதா வசனந தானும் 8

பிரமான்ம விசாரமதா லன்றி மோட்சம் பின்னென்று
யறிவாய் பிரம ஞான, வுரமன்றி மறறொன்றுற சமுராரந் தா
னொழியாதோவென்னிற் றுன் விழிதத லனறித, திரமுள தன்
சொற்பனம்போ காதுபோலச சித்தி னிடத் தஞ்ஞான முதவு
ஞ் சீவேசு ராதி, சகத் தென்னுங் கனவுதானுஞ் சொனுமான்ம
ஞானமதாற் போகு மோர்வாய். 9

அறிவதெலா மித்தையெனக் கண்டுசெய்வா னவனினை
வின்படி பலனும் வருமென் றோர்வா, யறியுமத துவிதம் பிரத்தி
யட்ச மாமோ வறையெனி னீயறிவுறுவோ வலவோ சொல்வா,
யறிவுள்ளபடி தோற்றவில்லை யென்னி லது துவிதந் தனிலுமே
சரியா மந்த, வறிபொருள்கள் சித்திககு மதுபோலத் துவிதந்
தானுஞ் சிததிக்கு மறிதி யன்றே 10

கடமறி யத்தீபமு நேததிரமும் வேண்டுங் கருதுகின்ற விள
க்கறியக் கண் போதுமபோல், விடமான விடயத்தை யறியும்
போது விடையாக் ஞானம்போகக விருததி வேண்டுக், தொடர்
பாகி வதையறியச் சீவன் வேண்டுஞ் சுயம்பிரகாசப பிரம மறி
யும் போதி, லடருமஞ் ஞானம் போக்க விருத்தி போது மாபா
சன் றேவையிலை யிருந்தபோதும். 11

பகுத்தறிந்து தான் சச்சிதானந்த மென்று பரமாக யிப்போன் முத்தனென வேதம், வகுத்துரைக்குதறிதானே சி.தானந்தமா யிருபபதற கடையாளக தானே தென்னிற், குத்திடு மாயா விருததி மனோ விருத்திதோன்ற றிகழ்த லது தற்குமே சாட்சியாயிருக்கு, மிகுத்திடு மான்மாவுமே சத்தெ ன்ப தொக்கு மேவுமெலா மறிகையினுற சித்தென்ப தொக்கும்.

கற்ற போதம் பின்னையெதனுற் போமென்னிற் கழறும் வே தாந்தத்தின் மேற பிரமாணமதா, யுறறிடு மொன் றுண்டானு ல தனுற் போமல்லா லுறுசுழுததி மூாசசையிலே போவ தலவத னை, மற்று மத்துவித ஞானந தனக் கொன்றினுலும வாதை யிலையறி பஞ்சபூத விவேகததை, யறறமற வராய்நது சகஞ்சின் மாத்திரமா யறிநதத்து விதமான நிலைபெற்றோன் முததன். 13

செனன மரணுதிககு மூலமென வறிநது தினமுமனோ ராச் சியததை முநநி விடவேணடு, மனவரத மிபபடியே யிருமபைக் கொண்டிருமபை யராவுகல்போற் சாத்திரிகப பிரபஞ்ச மத னுற, பினமான வசாததிரிக மிரண்டையுமே தள்ளிபபின்பு பிண ஞ்சுடு தடிபோற் சாததிரிக மதையும, வனமாக விட்டொழிநது தானே தானுக வதிந்து திடப்பட்டதுவே சீவன் முத்தியாமால்.

இவ்வாறுத் ததுவசித தாநத மரியாதை யெல்லாமு மிநத விநத விதங்கூடா தென்று, கவ்வலறத தள்ளுகின்ற சீவன் முத தியுடைய கருதுமிலககண மெல்லாஞ் சாத்திரிக மதனை, யெவ் வமறத் தளளுகினற வழியென்றே யுணாவா யிவ்வாறு சாததிரி காசாத திரிகமான, வவவிரண டையுக தவிாநது தானேதானுக வலைச்சலற நின்றவிடஞ் சீவன் முததியாமால. 15

பிரம வானந்தமதை யறிந்தாலோ காலும் பிறங்கு மொ ரு நிமிததமாயும பயமேயில்லை, வரஞானி தனைக் கருமவக்கி னி கிட்டாது வருபிரம மறிநதவுடன் பாசமெலா நசிக்குந், தர மிலபா மதையறிநதா விருதயத்தின் முடிச்சுஞ் சகல சநதேகங் களுமே வெநது போஞானிக, கொருபொழுதுஞ் செனன மர ணுதியிலைப் பிரம முறவறிவோன் பிரமமே யாவனென விங்ஙன்.

வைராக்கிய சதகம்.

நவிலி னிம்மனை மக்களுக் கொருதுணை
நாமல தில்லையென்றே
கவலை யுற்றரன் றுண்மறந் தனையுனைக்
காலனார் கொடுபோயிற்
குவல யத்தடைந் திவரைநா டொறுமபுரந்
திடுவையோ குறிக்குங்காற்
சவலை நெஞ்சமே சிவனலா துயிர்க்குயிர்
தானுமோர் துணையாமே.

கெடுவ தாம்பொருள் செல்வமே பல்வகைக்
கிலேசமற் றதுதன்னை
விடுவ தேசுக மெனவுமோர்ந் திலைமுனம்
விடுத்துளோர்க் குணைப்போலு
நெடிய யூகம தில்லையோ சொல்லுதி
நெஞ்சமே யினிப்பற்றற்
றடைது மேலர னருளையே பொருளென
வருஞ்செல்வ மதுதானே.

தானை சூழமண் ணுலகையாண் டழிபவர்
தங்கள்வாழ் வினிதென்றே
நீ நினைத்தியோ நெஞ்சமே யெஞ்சுறு
நிமலனா னமதுற்றால்
வானும் வையமும் வந்துதாள் வணங்குமெய்
வாழ்வுகாண் டலும்வீண்முற்
போன நாட்கிரங் கவுமவரு மெனநலோர்
புகன்றதோர்ந் திலைகாணே

ஆமு னிச்சையே மேலுமே லும்பிறப்
பளிக்குமவித் தெனநெஞ்சே
நீம றித்திடா சைக்கடல் சுவறுமே
நினைவெனுந் திரைமாயும

போயி றந்தெலா நினைவுமெய் பொழுதிலப்
பொழுது பூரணமாய
சோம சேகரத் தெநதைபொற் கழலையுந
தொழலைய மிலைநாமே.

நீமெஞ் ஞானநன் னிட்டைசா ருதலரி
தெனவுநெஞ சகமேசற
றேய்வி லாதுசெய் தியானமா திகளெளி
தெனவுமுன் றுநின்றாய
நேய்க டமமினத தாய்கொல்சும் மாவிருக்
குதல்செயற் கரிதாகிப்
போயு ழைப்புனக் கெளியதா யிருந்தவிப்
புதுமையென் புகனின்றே.

நினறு ளுதலே குதல்விருப புனக்கதை
நீத்திருக் குதநெஞ்சே
யென்ற னக்குநல விருபபுவா ளாவிவ
ணிருத்தநீ துயாவீடு
சென்று காண்குவ லெனநினைந தலேதியோ
சிவன்றிரி சயமன்று
லொன்று நீயுளு திருப்பதே யனைத்தொட
ருபாயமென் றறிகண்டாய்.

கண்ட வைம்புலக் காட்சிபோய்க் காட்சியாற்
கலநதவா தனையாவும
விண்டு மூடமற் றலையிலாக் கடலென
விளங்கினை யெனிநெஞ்சே
யுண்டு கொன்னமக் கொருதுய ராங்குளி
ளெங்கையிற் கனியேயாம
பண்டை மேவிய பயமெலா மறுக்குரு
பதத்திலும் புகலாமே.

புகல ரும்பரப் பிரமமாங் கடறனிற்
புணர்பரைத் திரையீசன்
சகமொ டாருயி ரெனுநுரை யாதிக
டநதுமாற் றிடுமென்றே

பகரு நான்மறை யெனினதி லதையெதைப்
  பற்றுவாம் விடுகிற்பாஞ்
புகவிட்டுப் பொழிநத புண்ணோ புண்ணிடை
யூறு முதிரப் புனலோ கூறுசெய்
திடையிடை நிற்கு மெலும்போ வெலுமபிடை
முடைகெழு மூளை விழுதோ வழுவழுத்

துள்ளிடை யொழுகும் வழும்போ மெள்ளநின்
றூறும் புழுவி னெழுங்கோ நீரிடை
வைத்த மலத்தின் குவையோ வைததுக்
கட்டிய நரம்பின் கயிறோ வுடம்பிற்குட
பிரியா தொருக்கும் பிணியோ தெரியா
தின்ன தியானென் றறியே னென்னை
யேதினுந் தேடினன் யாதினுங் காணேன
முன்னம்
வரைததனி வில்லாற புரத்தை யழலூட்டிக
கண்படை யாகக காமனை யொருநா
ளுண்பொடி யாக நோக்கி யணடத்து
வீயா வமரர் வியவந் தெழுந்த
தீவாய் நஞ்சைத திருவமு தாக்கி
யிருவா தேடி வெருவர நிமிர்ந்து
பாலனுக் காகக காலனைக காய்ந்து
சந்தன சரள சண்பக வகுள
நந்தன வனததிடை ஞாயிறு வழங்காது
நவமணி முகிழ்தத புதுவெயி லெறிபப
வெண்ணருங் கோடி யிருடி கணங்கட்குப
புண்ணியம புரக்கும பொன்னி சூழ்ந்த
திருவிடை மருத! பொருவிடைப பாக!
மங்கை பங்க! கங்கைநா யக! நின்
றெய்வத திருவருள் கைவந்து கிடைததலின்
மாயப் படலங் கீறித தூய
ஞான நாட்டம பெற்றனன் பெறறபின
னின்பெருந தன்மையுங கண்டேன் காண்டலு
மென்னையுங் கண்டேன் பிறரையுங் கணடே
னின்னிலை யனைததினுங் கண்டே னென்னை
நின்னைக காணு மாந்தர
தன்னையுங் காணாத் தன்மை யோரே. 2

சூதற்ற கொங்கையும மானார் கலவியுஞ் சூழ்பொருளும
போதுற்ற பூசலுக் கென்செயலாஞ் செய்த புண்ணியத்தால்
தீதற்ற மன்னவன் சிந்தையி னின்று தெளிவதற்கோ
காதற்ற வூசியைத தந்துவிட் டானென்றன் கைதனிலே. 3

வாதுற்ற திண்புய ரண்ணாமலையர் மலர்ப் பதத்தைப்
போதுற் றெப்போதும் புகலுநெஞ்சே யிந்தப் பூதலத்திற்
றீதுற்ற செல்வமென் றேடிப் புதைத்த திரவியமென்
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 4

வேதத்தி னுட்பொருண் மண்ணாசை மங்கையை விட்டுவிடப்
போதித்த வன்மொழி கேட்டிலையோ செய்த புண்ணியத்தா
லாதித்தன சந்திரன் போலே வெளிச்சம தாமபொழுது
காதற்ற வூசியும் வாராது காணுங் கடைவழிக்கே. 5

மாடுண்டு கன்றுண்டு மக்களுண் டென்று மகிழ்வதெல்லாங்
கேடுண் டெனும்படி கேட்டுவிட்டோ மினிக் கேண்மனமே
யோடுண்டு கந்தையுண் டுள்ளே யெழுத்தைந்து மோதவுண்டு
தோடுண்ட கண்ட னடியார் நமக்குத் துணையுமுண்டே. 6

ஆறுண்டு தோப்புண் டணிவீதி யம்பலந் தானுமுண்டு
நீறுண்டு கந்தை நெடுங்கோ வணமுண்டு நித்தநித்த
மாறுண் டலாவி மயங்கு நெஞ்சே மனைதோறுஞ் சென்று
சோறுண்டு தூங்கிப்பின் சும்மா விருக்கச் சுகமுமுண்டே 7

உடுக்கக் கவிக்கக் குளிர்காற்று வெய்யி லுடங்கிவந்தாற்
றடுக்கப் பழைய வொரு வேட்டியுண்டு சகமுழுதும்
படுக்கப் புறந்திண்ணை யெங்கெங்கு முண்டு பசித்துவந்தாற்
கொடுக்கச் சிவனுண்டு நெஞ்சே நமக்குக் குறைவில்லையே. 8

நாட்ட மென்றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்ட மென்றேயிரு பொல்லாவுடலை யடர்ந்த சந்தைக்
கூட்ட மென்றேயிரு சுற்றத்தை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்ட மென்றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே. 9

ஒன்றென் றிரு தெய்வ முண்டென் றிருவுயர் செல்வமெல்லா
மன்றென் றிரு பசித்தோர் முகம்பார் நல்லறமு நட்பு
நன்றென் றிரு நடு நீங்காமலே நமக் கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே. 10

கண்ணுண்டு காணக் கருத்துண்டு நோக்கக் கசிந்துருகிப்
பண்ணுண்டு பாடச் செவியுண்டு கேட்கப் பல்பச்சிலையா

லெண்ணுண்டு சாத்த வெதிர்நிற்க வீசனிருக கையிலே
மண்ணுண்டு போகுதை யோகெடுவீ ரிநத மானிடமே. 11

கோயில் நான்மணி மாலை.

நினையார் மெலியார் நிறையழியா வாளாப
புனைவார்க்குக் கொன்றை பொதுமேவா-வனைவீரு
மெசசியே காண வியனறிலலை யானருளென
பிசசியே நாளைப பெறும. 12

திருக்கழுமல மும்மணிக் கோவை

பொருளாசை பெண்ணாசை பூவாசை யெனனு
மருளாசை யாமாசை மாறறித்-தெருணஞான
வேநதராய் வாழலா மெய்யனபா னனனெஞ்சே
பூந்தராய் நாதரைநீ போறறு. 13

கண்டேன் புகலிக கருததனைத்தன் மெய்ஞஞான
வண்டேனுண் டேமகிழும வணடாமேனன-பண்டே
யளியனுமா னேன்மனமெய யார்பதம்வே றினறிக்
குளிர்சிவா னந்தமிலங் கும. 14

விடையம் பொருளென் றுணராத மாாககம விருமபுமழுப
படையம் புயக்காத தெநதாதை ஞான பாமவெனறெண்
சடையம் புனலணி வேணு புரேசனாந தானமலாது
விடையம் பொருளென் றிருநீ யெனறுண்மை விளமபினனே.15

திருவிடைமருதூர் மும்மணிக் கோவை.

வருந்தே னிறந்தும் பிறநது மயககும புலன்வழிபோய்ப்
பொருந்தே னாகிற் புகுகின்றி லெனபுகழ மாமருதிற
பெருந்தேன் முகந்து கொண்டுண்டு பிறிதொனறு லாசையின்றி
யிருந்தே னினிச்சென் றிரவே னொருவரை யாதொன்றுமே. 16

இருக்கு மருதினுக் குள்ளிமை யோாகளு நான்மறையு
நெருக்கு நெருக்கத்து நீளகத்துச சென்று மீளவொட்டாத்
திருக்கு மறுத்தைவர் தீமையுந தீாத்துச செவ்வே மனத்தை
யொருக்கு மொருக்கத்தி னுள்ளே முளைக்கினற வொண்சுடரே.

திருவேகம்ப மாலை.

அறந்தா னியற்று மவனிலுங் கோடி யதிகமில்லந்
துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன்
மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற் [னே.
றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம்ப

நல்லா ரிணக்கமு நின்பூசை நேசமு ஞானமுமே
யல்லாது வேறு நிலையுளதோ வகமும் பொருளு
மில்லாளுஞ் சுற்றமு மைந்தரும் வாழ்வு மெழிலுடம்பு
மெல்லாம் வெளிமயக்கே யிறைவா கச்சி யேகம்பனே 19

மாயநட் போரையு மாயா மலமெனு மாதரையும்
வீயவிட் டோட்டி வெளியே புறப்பட்டு மெய்யருளாந்
தாயுடன் சென்றுபின் றாதையைக் கூடிப்பின் றாயைமறந்
தேயுமதே நிட்டை யென்றா னெழிற்கச்சி யேகம்பனே. 20

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்துந்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோ
லருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளி லன்பி
லிருளறு சொல்லினுங் காணத்தகுங்கச்சி யேகம்பனே. 21

அப்பென்றும் வெண்மைய தாயினு மாங்கந் நிலத்தியல்பாய்த்
தப்பின்றி யேகுண வேற்றுமை தானபல சாதலினாற்
செப்பி லபக்குவம் பக்குவமா யுள்ள சீவரிலு
மிப்படி யேநிற்ப னெந்தை பிரானகச்சி யேகம்பனே. 22

பூதங்க ளற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங் குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்னற்றுக்
காதங் கரணங் களுமற்ற வானந்தக் காட்சியிலே
யேதங் களைந்திருப் பேனிறைவா கச்சி யேகம்பனே. 23

திருத்தில்லை

ஓடாமற் பாழுக் குழையாம லோர முரைப்பவர்பாற்
கூடாம னல்லவர் கூட்டம் விடாமல்வெங் கோபநெஞ்சி
னூடாம னன்மை வழுவாம லின்றைக்கு நாளைக்கென்று
தேடாமற் செல்வந் தருவாய் சிதம்பர தேசிகனே. 24

பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்துவிட்டா
லிறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
வறமார் புகழ்த்தில்லை யம்பல வாண ரடிக்கமல
மறவா திருமன மேயது காணன் மருந்துனக்கே 25

திருவெண்காட்டுத் திருவிசைப்பா

பூதமுங் கரணமும் பொறிகளும் புலனும் பொருந்திய குணங்களோர் மூன்றும், நாதமுங் கடந்த வெளியிலே நீயுநானுமாய் நிற்குநா ளுளதோ, வாதமுஞ் சமய பேதமுங் கடந்த மனோலய வின்பசா கரனே, ஏதுமொன் றறியேன் யாதுநின் செயலே யிறைவனே யேகநாயகனே 26

திருவிடைமருதூர்

சுடப்படு வாரறி யாரபுர மூன்றையுஞ் சுட்டபிரான்
றிடப்படு மாமதிற் றென்னிடை மருதூரன் றெருப்பரப்பி
னடப்பவர் பொற்பத நந்தலை மேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மன மேவிதி யேட்டைக் கிழிப்பதுவே. 27

கைலாயம்.

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துநின்று
பல்லுங் கறையற்று வெள்வாயு மாயொன் றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென் றோகயி லாயத்தனே. 28

சினந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
வனந்தனி லென்றிருப் பேனத்த னேகயி லாயத்தனே 29

நீறார்ந்த மேனியு ரோமஞ் சிலிர்த்துள நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகிநின் சீரடிக்கே
மாறாத தியானமுற் றூனந்த மேற்கொண்டு மாயிற்கண்ணீ
ராறாய்ப் பெருகக் கிடப்பதென் றோகயி லாயத்தனே. 30

பொது.

வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை தானொழிந்தாற்
றினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை

நினைப்போரை மேவு நினையாரை நீங்கி நெறியினின்று
னுனைப்போ லொருவருண் டோமனமே யெனக் குற்றவரே. 31

ஒன்றென் றிருதெய்வ முண்டென் றிருவுயிர் செல்வமெல்லா
மன்றென் றிருபசித் தோர்முகம பார்நல் லறமுநட்பு
நன்றென் றிருநடு நீங்காமலே நமக கிட்டபடி
யென்றென் றிருமன மேயுனக் கேயுப தேசமிதே. 32

நாட்டமென் றேயிரு சற்குரு பாதத்தை நம்புபொம்ம
லாட்டமென் றேயிரு பொல்லாவுடலை யடர்ந்த சநதைக்
கூட்டமென் றேயிரு சற்றதனை வாழ்வைக் குடங்கவிழ்நீ
ரோட்டமென் றேயிரு நெஞ்சே யுனக்குப தேசமிதே 33

விட்டே னுலகம் விருமபே னிருவினை வீணருடன்
கிட்டே னவருரை கேட்டுமி ரேனமெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்க மற்றுவிட் டேன்றொல்லை நான்மறைக்கு
மெட்டே னெனுமபர மௌனிடததே வநதிங் கெய்தியதே. 34

அட்டாங்க யோகமு மாதார மாறு மவத்தையைந்தும்
விட்டேறிப போன வெளிதனி லேவியப பொன்றுகண்டேன்
வட்டாகிச செம்மதிப் பாலூற லுண்டு மகிழ்ந்திருக்க .
வெட்டாத பேரினப மென்னை விழுங்கி யிருக்கின்றதே. 35

சுரப்பற்று வலவினை சுறறமு மற்றுத தொழில்களற்றுக்
கரப்பறறு மஙகையா கையிணக் கற்றுக கவலையற்று
வரப்பற்று நாதனை வாயார வாழ்த்தி மனமடங்கப்
பரப்பற் றிருப்ப தன்றோ பரமாபர மானந்தமே. 36

செல்வரைப பின்சென் றுபசாரம பேசித் தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவி யாமற் பரானந்தத்தி
னெல்லையிற் புககுநல் லேகாநத மாயெனக் காமிடத்தே
யல்லலற் றென்றிருப் பேனால் நீழ லரும்பொருளே. 37

ஓங்கார மாய்நின்ற வத்துவி லேயொரு வித்துவந்து
பாங்காய் முளைத்த பயனறிந் தாற்பதி னாலுலகு
நீங்கா மனீஙகி நிறையா நிறைந்து நிறையுருவா
யாங்கார மானவர்க் கெட்டாக் கனிவநத மர்ந்திடுமே. 38

விதியார் படைப்பு மரியா ரளிப்பும் வியன்கயிலைப்
பதியார் துடைப்பு நம்பாலணு காதுப ரானந்தமே
கதியாகக் கொண்டுமற் றெல்லாந் துயிலிற் கனவெனநீ
மதியா திருமன மேயிது காணன் மருந்துனக்கே. 39

அஞ்சக் கரமெனுங் கோடாலி கொண்டிந்த வைம்புலனும்
வஞ்சப் புலக்கட்டை வேரற வெட்டி வளங்களசெய்து
விஞ்சத் திருத்திச் சதாசிவ மென்கின்ற வித்தையிட்டுப்
புஞ்சக் களைபறித் தேன்வளர்ந் தேன்சிவ போகத்தையே 40

வெட்டாத சக்கரம் பேசாத மந்திரம் வேறொருவர்க்
கெட்டாத புட்ப மிறையாத தீர்த்த மினிமுடிந்து
கட்டாத லிங்கங் கருதாத நெஞ்சங் கருத்தினுள்ளே
முட்டாத பூசையன் றோகுரு நாதன் மொழிந்ததுவே. 41

உளியிட்ட கல்லையு மொப்பிட்ட சாந்தையு மூத்தையற்ப
புளியிட்ட செம்பையும் போற்றுகி லேனுயர் பொன்னெனவே
யொளியிட்ட தாளிரண் டுள்ளே யிருத்துவ துண்மையென்று
வெளியிட்டடைத்துவைத்தேனினிமேலொன்றும்வேண்டிலனே.

திருவாரூர்

ஆரூர ரிங்கிருக்க வவ்வூர்த் திருநாளென்
றாரூர்க டோறு முழலுவீர்—நேரே
யுளக்குறிப்பை நாடாத வூமர்கா ணீவிர்
விளக்கிருக்கத் தீத்தேடு வீர். 43

எத்தனைநாள் கூடி யெடுத்த சரீரமிவை
யத்தனையு மண்டின்ப தல்லவோ—வித்தகனார்
காலைப் பிடித்துமெள்ளக் கங்குல்பக லற்றிடத்தே
மேலைக் குடியிருப் போமே. 44

எச்சிலென்று சொல்லி யிதமகிதம் பேசாதீர்
யெச்சி லிருக்கு மிடமறியீ—ரெச்சிறனை
யுய்த்திருந்து பார்த்தா லொருமை வெளிப்படும்பின்
சித்த நிராமய மாமே. 45

நெஞ்சோடு புலம்பல்.

அஞ்சருளைப் போற்றி யைந்துபுல னைத்துறக்க
நெஞ்சே யுனக்கு நினைவுநான் சொல்லுகிறேன்
வஞ்சகத்தை நீக்கி மறுநினைவு வாராமல்
செஞ்சரணத் தாளைச் சிந்தைசெய்வாய் நெஞ்சமே. 46

ஓட்டைத் துருத்தியை யுடையும் புழுக்கூட்டை
ஆட்டுஞ் சிவசித்த ரருளைமிகப் போற்றியே
வீட்டைத் திறந்து வெளியையொளி யாலழைத்துக்
காட்டும் பொருளிதென்று கருதிலையே நெஞ்சமே. 47

ஊனை முடனே யுடையும் புழுக்கூட்டை
மானமுட னேசுமந்து மண்ணுலகின் மாளாமல்
ஆனதொரு பஞ்சவாக ளாண்டிருந்த தேசம்விட்டுப்
போனது போலேநாம் போய்ப்பிழைத்தோ மில்லையே. 48

பூரணமாலை

ஊனுக்கு ணீநின்று லாவினதைக் காணாமல்
நானென் றிருந்து நலனழிந்தேன் பூரணமே 1

தனிமுதலைப் பார்த்துத் தனித்திருந்து வாழாமல்
அநியாய மாய்ப்பிறந்திங் கலைந்துநின்றேன் பூரணமே. 2

உடலுக்கு ணீநின் றுலாவினதைக் காணாமல்
கடமலைதோ றுந்திரிந்து காலலுத்தேன் பூரணமே 3

என்னை யறியாம லெனக்குள்ளே நீயிருக்க
உன்னை யறியாம லுடலிழந்தேன் பூரணமே. 4

எனக்குள்ளே நீயிருக்க வுனக்குள்ளே நானிருக்க
மனக்கவலை தீர வரமருள்வாய் பூரணமே. 5

எழுவகைத் தோற்றத் திருந்துவிளை யாடினதைப்
பழுதறவே பாராமற் பயனிழந்தேன் பூரணமே. 6

அண்டபிண்ட மெல்லா மணுவுக் கணுவாகநீ
கொண்ட வடிவின் குறிப்பறியேன் பூரணமே. 7

ஐந்து பொறியை யடக்கியுனைப் போற்றாமல்
நைந்துருகி நெஞ்ச நடுங்கினேன் பூரணமே. 8

ஒன்று முயிரா யுடல்தோறு நீயிருந்தும்
என்று மறியார்க ளேழைகள்தாம பூரணமே. 9

நானேநீ நீயேநா னுமிரண்டு மொன்றானால்
தேனின் ருசியதுபோற் றெவிட்டாய்நீ பூரணமே. 10

முடிவிலொரு சூனியத்தை முடித்துநின்று பாராமல்
அடியிலொரு சூனியத்தி லலைந்தேனே பூரணமே. 11

நெஞ்சோடுமேகிழ்தல்.

பாராமற் பதையாமற் பருகாமல யாதென்றும்
ஓரா துணர்வுடனே யொன்றினையே நெஞ்சமே. 1

களவிறந்து கொலையிறநது காண்பனவுங் காட்சியுமபோ
யளவிறந்து நின்றதிலே யன்புற்றாய் நெஞ்சமே 2

பேச்சிறந்து சுட்டிறநது பின்னிறந்து முன்னிறநது
நீச்சிறந்து நின்றதிலே நேசமுற்றாய் நெஞ்சமே. 3

விண்ணிறநது மண்ணிறந்து வெளியிறந்து வொளியிறந்து
எண்ணிறநது நின்றதிலே யேகரிததாய் நெஞ்சமே 4

பார்த்தவிட மெங்கும் பரமெனவே யுட்புறம்புங
கோததபடி யுணமையெனக கொணடனையே நெஞ்சமே. 5

ஊரிறநது பேரிறநது வொளியிறநது வெளியிறநது
சீரிறநது நின்றதிலே சேர்நதனையே நெஞ்சமே. 6

விருப்புவெறுப் பிலலாத வெட்ட வெளியதனில
இருப்பே சுகமென் றிருந்தனையே நெஞ்சமே. 7

நீரொடுதண் ணுலிவிண்டு நீரான வாறேபோல்
ஊரொடு பேரிலலாநே டொன்றினையே நெஞ்சமே. 8

மேலாம் பதங்களெல்லாம விட்டுவிட் டாராய்ந்து
நாலாம் பதததி னடநதனையே நெஞ்சமே. 9

உள்ளும் புறமபு முவட்டாத வானநதக
கள்ளருந்தி நின்றதிலே கண்ணுற்றாய் நெஞ்சமே. 10

கோயிற்றிருவகவல்.

நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
அலகைத் தேரி னலமரு காலின்
உலகப் பொய்வாழ்க்கையை யுடலை யோம்பற்க
பிறந்தன விறக்கு மிறந்தன பிறக்கும்
தோன்றின மறையு மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்குஞ் சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கு மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும் பிரிந்தன புணரும்
அருந்தின மலமா மணிந்தன வழுக்காம்
உவப்பன வெறுப்பாம் வெறுப்பன வுவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை யன்றியும்
பிறந்தனை பிறந்தனை பிறவிக டோறும்
கொன்றனை யனைத்து மனைத்து நினைக்கொன்றன
தின்றனை யனைத்து மனைத்து நினைத்தின்றன
பெற்றனை யனைத்து மனைத்து நினைப்பெற்றன
ஓம்பினை யனைத்து மனைத்து நினையோம்பின
செல்வத்துக் களித்தனை தரித்திரத் தழுங்கினை
சுவர்க்கத் திருந்தனை நரகிற் கிடந்தனை
இன்பமுந் துன்பமு மிருநிலத் தருந்தினை
ஒன்றொன் றொழியா துற்றனை யன்றியும்
புற்புதக் குரம்பைத் துச்சி லொதுக்கிட
மென்னநின் றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை யிதனுள்
பீளையு நீரும் புறப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யொழுகு மொருபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி
சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளுறத் தொடங்கி வெளிப்பட நாறுஞ்

சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து
கடிமலர்க் கொன்றைச் சடைமுடிக் கடவுளை
ஒழிவருஞ் சிவபெரும் போக வின்பத்தை
நிழலெனக் கடவா நீர்மையொடு பொருந்தி
எனைத்தற நினைவற விருவினை மலமற
வரவொடு செலவற மருளற விருளற
இரவொடு பகலற விகபர மறவொரு
முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை யானந்தக் கூத்தனை
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே நினைமின் மனனே
சிவபெரு மானைச் செம்பொன் னம்பலவனை
நினைமின் மனனே நினைமின் மனனே.

பத்திரகிரியார் அருளிச்செய்த

மெய்ஞ்ஞானப் புலம்பல்.

ஆங்கார மும்மடக்கி ஐம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம். 1

நீங்காச் சிவயோக நித்திரைகொண் டேயிருந்து
தேங்காக் கருணைவெள்ளந் தேக்குவது மெக்காலம். 2

சேயாய்ச் சமைந்து செவிடூமை போற்றிரிந்து
பேய்போ லிருந்துன் பிரமைகொள்வ தெக்காலம். 3

பேய்போற் றிரிந்து பிணம்போற் கிடந்துபெண்ணைத்
தாய்போல் னினைத்துத் தவமுடிப்ப தெக்காலம். 4

ஆமை வருமாட்கண் டைந்தடக்கஞ் செய்தாற்போல்
ஊமை யுருக்கொண் டொடுங்குவது மெக்காலம். 5

அத்த னிருப்பிடத்தை ஆராய்ந்து பார்த்துநிதஞ்
செத்த சவம்போற் றிரிவதினி யெக்காலம். 6

வேதாந்த வேதமெல்லாம் விடடொழிநதே நிட்டையிலே
ஏகாந்த மாக யிருப்பதினி யெக்காலம். 7

மற்றிடத்தைத் தேடியென்றன் வாழ்நாளைப் போக்காமல்
உற்றிடத்தைத் தேடி யுறங்குவது மெக்காலம். 8

கூறியநால் வேதங் கூப்பிட்டுங் காணாத
பாராரகசியததைப் பார்த்திருப்ப தெக்காலம் 9

தெளியத் தெளியத் தெளிந்தசிவா னநதத்தேன்
பொழியப பொழியமனம பூண்டிருப்ப தெக்காலம். 10

கட்டறுகக வொண்ணாக கருவிகர ணாதியெல்லாம
சுட்டறுத்து நிட்டையிலே தூங்குவது மெக்காலம். 11

கள்ளக் கருததைபெல்லாங கட்டோடு வேறறுத்திங்
குள்ளக் கருத்தை யுணர்நதிருப்ப தெககாலம் 12

தோன்றாசை மூன்றுந் தொடாநதுவநது சுற்றாமல்
ஊன்றாசை வேரையடி யூடறுப்ப தெக்காலம். 13

ஐந்து பொறிவழிபோ யலைந்துமிநதப் பாழ்மனதை
வெநது விழபபாாதது விழிபபதினி யெககாலம். 14

இனமாண்டு சேர்நதிருநதோ ரெல்லாருந தான்வரண்டு
சினமாணடு போகவருள் சேரநதிருபப தெககாலம். 15

அமையா மனதமையு மானநத வீடுகண்டால்
இமையாம நோககி யிருப்பதினி யெக்காலம் 16

கூண்டுவிடடு சீவன்மௌளக கொடடாவி கொண்டாற்போல்
மாண்டுவிடடு முன்னானன் மாண்டிருப்ப தெக்காலம். 17

ஆக வெளிககுள்ளே யடங்காப் புரவிசெலல
ஏக வெளியி லிருப்பதினி யெக்காலம். 18

ஓடாம லோடி யுலகவலம வநதுசுற்றித்
தேடாம லென்னிடமாய்த் தெரிசிப்ப தெக்காலம. 19

மலமுஞ சலமுமற்று மாயையற்று மானமற்று
நலமுங் குலமுமற்று நானிருப்ப தெக்காலம 20

வெல்லுமட்டும் பார்த்து வெகுளியெல்லாம விட்டகன்று
செல்லுமட்டுஞ் சிநதை செலுததுவது மெககாலம. 21

கனவுகண்டார் போலெனக்குக் காட்டிமணந் தேயிருந்த
நினைவைப் பரவெளிமேல் நிறுத்துவது மெக்காலம். 22

மும்பாழும் பாழாய் முதற்பாழுஞ் சூனியமா
யப்பாழும் பாழா யன்புசெய்வ தெக்காலம். 23

என்மயமாய்க்கண்டதெல்லாமெண்ணியெண்ணிபார்த்ததற்பின்
தன்மயமாய்க் கொண்டதிலே சார்ந்திருப்ப தெக்காலம். 24

ஒளியிட்ட மெய்ப்பொருளை யுள்வழியி லேயடைந்து
வெளியிட்டு சாததிவைத்து வீடுறுவ தெக்காலம் 25

பிதத்தாயங் கொண்டு பிரணவ்தைத யூடறுததுச
செத்தாரைப போல திரிவதினி யெக்காலம். 26

சாவாமற செத்திருந்து சற்குருவின் பொன்னடிககீழ்
வேவாமல் வெந்திருக்க வேணடுவது மெக்காலம் 27

வாசிததுங் காணுமல் வாய்விட்டும் பேசாமல்
பூசித்துத் தோன்றுப பொருளகாண்ப தெக்காலம் 28

வேதாந்த வேதமெல்லாம் விட்டேறி யேகடந்து
நாதாந்த மூல நடுவிருப்ப தெக்காலம் 29

அல்லும் பகலுமென்ற னறிவையறி வாலறிந்து
சொல்லு முரையிறந்து தூங்குவது மெக்காலம். 30

என்னைவிட்டு நீங்காம லென்னிடததி னீயிருக்க
வுன்னைவிட்டு நீங்கா தொருப்படுவ தெககாலம் 31

மனதை யொரு வில்லாககி வான்பொறியை நாணுக்கி
யெனதறிவை யம்பாக்கி யெய்வதினி யெககாலம். 32

என்னையிறக்க வெய்தே யென்பதியை யீடழித்த
உன்னை வெளியிலவைததே யொளிததிருபப தெக்காலம். 33

கடலி லொளிததிருந்த கனலெழுந்து வநதாற்போ
லுடலி லொளிததசிவ மொளிசெயவ தெககாலம். 34

பொன்னிற் பலவிதமாய் பூஷணமுண் டானதுபோல்
உன்னிற் பிறநததுன்னி லொடுங்குவது மெககாலம். 35

இருளை வெளிவிழுங்கி யேகவுருக் கொண்டாற்போல்
அருளை விழுங்குமிரு ளகன்றிருப்ப தெககாலம். 36

ஊமைக் கனுக்கண் டுரைக்கறியா வின்பமதை
நாமறிந்து கொள்வதற்கு நாள்வருவ தெக்காலம். 37

எங்கும் பரவடிவா யென்வடிவு நின்வடிவாய்க்
கங்குல்பக லின்றியுனை கண்டிருப்ப தெக்காலம். 38

சத்தம் பிறந்தவிடந் தன்மயமாய் நின்றவிடஞ்
சித்தம் பிறந்தவிடந் தோந்தறிவ தெக்காலம். 39

போக்கும் வரவும் புரம்புமுள்ளு மாகிநின்றும்
தாக்கு மொருபொருளைச் சந்திப்ப தெக்காலம். 40

நானெனவு நீயெனவு நாமிரண்டு மற்றொன்றும்
நீயெனவே சிந்தைதனி னேர்படுவ தெக்காலம். 41

பிறப்பு மிறப்புமறுப் பேச்சுமற்று மூச்சுமற்று
மறப்பு நினைப்புமற்று மாண்டிருப்ப தெக்காலம். 42

மன்னும் பரவெளியை மனவெளியி லடைத்தறிவை
யென்னு மொருநினைவை யெழுப்பிநிற்ப தெக்காலம். 43

என்னையென்னி லேமறந்தே யிருந்தபதி யும்மறந்து
தன்னையுந்தா னேமறந்து தனித்திருப்ப தெக்காலம். 44

கள்ளுண் டவர்போற் களிதருமா னந்தமதாற்
றள்ளுண்டு நின்றுடித் தடைவிடுவ தெக்காலம். 45

ஐயாறு மாறு மகன்று வெறுவெளியில்
மையிருளில் நின்றமன மாளவதினி யெக்காலம். 46

எவரெவர்க ளெப்படிகண் டெந்தப் படிநினைத்தார்
அவரவருக் கப்படிநின் றுமென்ப தெக்காலம். 47

ஆயுங் கலைகளெல்லா மாராய்ந்து பார்த்ததற்பின்
நீயென்று மில்லா நிசங்காண்ப தெக்காலம். 48

தாயுமான சுவாமிகள் பாடல்.

திருவருள் விலாசப் பரசிவ வணக்கம்.

அங்கிங் கெனாதபடி யெங்கும்ப்ர காசமா
யானந்த பூர்த்தியாகி
யருளொடு நிறைந்ததெது தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது மனவாக்கினில்
தட்டாம னின்றதெது சமயகோ டிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வமென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ளதெது மேல்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெதுவது
கருத்திற் கிசைந்ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதி யஞ்சலிசெய்குவாம். 1

ஊரனந்தம் பெற்ற பேரனந்தஞ் சுற்று
முறவனந்த மவினையினால்
உடலனந் தஞ்செயும் வினையனந் தங்கருத்
தோவனந் தம்பெற்றபோ
சீரனந் தஞ்சொர்க்க நரகமு மனந்தநற்
றெய்வமு மனந்தபேதம்
திகழ்கின்ற சமயமு மனந்தமத னால்ஞான
சித்தி யாலுணர்ந்து
காரனந் தங்கோடி வருஷித்த தெனவன்பர்
கண்ணும்விண் ணுந்தேக்கவே
கருதரிய வானந்த மழைபொழியு முகிலைநங்
கடவுளைத் துரியவடிவைப்

பேரனந் தம்பேசி மறையனந் தஞ்சொலும்
 பெரியமௌ னதநின்வைப்பைப்
பேசருமனந்தபத ஞானவா னந்தமாம்
 பெரியபொருளைப்பணிகுவாம். 2

அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை
 யருமறைகண் முரசறையவே
யறிவினுக் கறிவாகி யானநத மயமான
 வாதியை யநாதியேக
தத்துவ சொரூபத்தை மதசம்ம தமபெருச்
 சாலம்ப ரகிதமான
சாசுவத புட்கல நிராலமப வாலம்ப
 சாந்தபத வ்யோமநிலையை
நித்தநிர மலசகித நிஷ்பரபஞ் சபபொருளை
 நிர்விஷய சுததமான
நிர்விகா ரதைதத் தடத்தமாய் நின்றொளிர்
 நிரஞ்சன நிராமயத்தைச்
சிததமறி யாதபடி சிதததநி னின்றிலகு
 திவயதே சோமயத்தைச
சிற்பர வெளிகருள்வளா தற்பரம தானபர
 ம்தவதையை யஞ்சலிசெய்குவாம். 3

பரிபூரணானந்தம்

வாரா தெலாமொழிய வருவன வெலாமெய்த
 மனதுசாட் சியதாகவே
மருவநிலை தநததும வேதாநத சித்தாநத
 மரபுசம ரசமாகவே
பூராய மாயுணர வூகமது தநததும்
 பொய்யுடலை நிலையன்றெனப்
போதநெறி தநததுஞ் சாசுவத வானந்த
 போகமே வீடென்னவே
நீராள மாயுருக வுள்ளன்பு தநதது
 நின்னதரு ளின்னுமின்னு
நின்னையே துணையென்ற வென்னையேகாக்கவொரு
 நினைவுசற றுண்டாகிலோ

பாராதி யறியாத மோனமே யிடைவிடாப்
பற்றாக நிற்கவருளவாய
பார்க்குமிட மெஙகுமொரு நீககமற நிறைகின்ற
பரிபூர ணானநதமே. 4

ஆழாழி கரையின்றி நிறகவிலலையோ கொடிய
வாலமமு தாகவிலலையோ
அக்கடலின் மீதுவட வனநிற்க வில்லையோ
வந்தரத் தகிலகோடி
தாழாம நிலைநிறக விலலையோ மேருவுந
தனுவாக வளையவிலலையோ
சப்தமே கஙகளும வசரதர னாணையிற்
சஞ்சரித்திட விலலையோ
வாழாது வாழவே யிராமனடி யாறசிலையு
மடமஙகை யாகவிலலையோ
மணிமநதர மாதியால வேண்டுசித திகளுலக
மாாககததில வைக்கவிலலையோ
பாழான வென்மனங குவியவொரு தநதிரம
பண்ணுவ துனககருமையோ
பார்ககுமிட மெங்குமொரு நீககமற நிறைகின்ற
பரிபூர ணானநதமே. 5

பொருள் வணக்கம்.

நித்தியமாய் நிர்மலமாய் நிட்களமாய் நிராமயமாய்
நிறைவாய் நீஙகாச
சுத்தமுமாய்த தூரமுமாய்ச சமீபமுமாய்த துரியநிறை
சுடரா யெலலாம
வைத்திருநத தாரகமா யானநத மயமாகி
மனவாக கெட்டாச
சித்துருவாய் நின்றவொன்றைச சுகாரமபப பெருவெளியைச்
சிநதை செய்வாம. 6

யாதுமன நினையுமநத நினைவுககு நினைவாகி
யாதின் பாலும்

பேதமற நின் றுயிருக் குயிராகி யன்பருக்கே
பேரா னந்தக
கோதிலமு தூற்றரும்பிக் குணங்குறியொன் றறத்தன்னைக்
கொடுத்துக காட்டுந்
தீதில்பரா பரமான சித்தாந்தப் பேரொளியைச்
சிநதை செய்வாம. 7

பெருவெளியா மைம்பூதம பிறப்பிடமாய்ப பேசாத
பெரிய மோனம்
வருமிடமாய் மனமாதிக கெட்டாத பேரின்ப
மயமாய் ஞானக்
குருவருளாற் காட்டிடவு மன்பரைக்கோத தறவிழுங்கிக்
கொண்டப் பாலுந்
தெரிவரிதாய்க கலநதகெநதப பொருளந்தப் பொருளினையாஞ்
சிந்தை செய்வாம. 8

இகபரமு முயிர்க்குயிரை யானெனதற் றவருறவை
யெநத நாளுஞ்
சுகபரிபூ ரணமான நிராலம்ப கோசரததைத
துரிய வாழ்வை
யகமகிழ வருந்தேனை முக்கனியைக் கற்கண்டை
யமிர்தை நாடி
மொகுமொகென விருவிழிநீர முத்திரைப்பக் கரமலர்கண்
முகிழ்த்து நிற்பாம. 9

சாதிகுலம் பிறப்பிறப்புப் பந்தமுத்தி யருவுருவத்
தன்மை நாம
மேதுமின்றி யெப்பொருட்கு மெவ்விடத்தும் பிரிவறநின்
றியக்கஞ் செய்யுஞ்
சோதியைமாத் தூவெளியை மனதவிழ நிறைவான
துரிய வாழ்வைத்
தீதில்பர மாமபொருளைத் திருவருளே நினைவாகச்
சிநதை செய்வாம். 10

இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலக
மெமக்குத் தோன்றச்

சந்ததமுஞ் சிற்பரத்தா லழியாத தற்பரத்தைச்
சார்ந்து வாழ்க
புந்திமகி ழுறநாளுந் தடையறவா னந்தவெள்ளம்
பொலிக வென்றே
வந்தருளுங் குருமௌனி மலரத்தாளை யநுதினமும்
வழுத்தல செய்வாம. 11

பொருளாகக கண்டபொரு ளெவைகக்குமுதற் பொருளாகிப
போத மாகித
தெருளாகிக் கருதுமன்பர் மிடிதீரப் பருகவநத
செழுந்தே னாகி
யருளானோர்க் ககமபுறமென் றுன்னாத பூரணவா
னந்த மாகி
யிருடீர விளங்குபொரு ளியாதந்தப் பொருளினையா
மிறைஞ்சி நிற்பாம். 12

அருமறையின் சிரப்பொருளாய் விண்ணவாமா முனிவாசிதத
ராதி யானோர்
தெரிவரிய பூரணமாய்க் காரணங்கற பனைகடநத
செல்வ மாகிக்
கருதரிய மலரின்மண மெள்ளிலெண்ணெ யுடலுயிரபோற
கலந்தெங் நாளும்
துரியநடு வூடிருந்த பெரியபொரு ளியாததனைத்
தொழுதல் செய்வாம். 13

விண்ணாதி பூதமெல்லாந தன்னகத்தி லடக்கிவெறு
வெளியாய் ஞானக்
கண்ணாரக் கண்டவன்பர் கண்ணூடே யானந்தக்
கடலாய் வேறொன்
றெண்ணாத படிக்கிரங்கித் தானாகச் செய்தருளு
மிறையே யுன்றன்
றண்ணாருஞ் சாந்தவரு டனைநினைந்து கரமலர்க
டலைமேற் கொள்வாம். 14

விண்ணிறைந்த வெளியாயென் மனவெளியிற் கலந்தறிவாம்
வெளியி னூடும்

தண்ணிறைந்த பேரமுதாய்ச் சதானந்த மானபெருந்
தகையே நின்பா
லுண்ணிறைந்த பேரன்பா லுள்ளுருகி மொழிகுழறி
யுவகை யாகிக்
கண்ணிறைந்த புனலுகுப்பக் கரமுகிழ்ப்ப நின்னருளைக்
கருத்தில் வைப்பாம். 15

வேறு.

ஆதியந்தங் காட்டாத முதலா யெம்மை
யடிமைக்கா வளர்த்தெடுத்த வன்னை போல
நீதிபெறுங் குருவாகி மனவாக் கெட்டா
நிச்சயமாய்ச் சொச்சமதாய் நிமல மாகி
வாதமிடுஞ் சமயநெறிக் கரிய தாகி
மௌனத்தோர் பாலவெளியாய் வயங்கா நின்ற
சோதியையெ னுயிர்த்துணையை நாடிக் கண்ணீர்
சொரியவிரு கரங்குவித்துத் தொழுதல் செய்வாம். 16

அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேறு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாந்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பா னினைதல் செய்வாம். 17

கூடுத லுடன்பிரித லற்றுநிர்த் தொந்தமாய்க்
குவிதலுடன் விரிதலற்றுக்
குணமற்று வரவினொடு போக்கற்று நிலையான
குறியற்று மலமுமற்று
நாடுதலு மற்றுமேல் கீழ்நடுப் பக்கமென
நண்ணுதலு மற்றுவிந்து
நாதமற் றைவகைப் பூதபே தமுமற்று
ஞாதுருவின் ஞானமற்று

வாடுதலு மற்றுமே லொன்றற் றிரண்டற்று
  வாக்கற்று மனமுமற்று
மன்னுபரி பூரணசு சுகவாரி தன்னிலே
  வாய்மடுத் துண்டவசமாய்த்
தேடுதலு மற்றவிட நிலையென்ற மௌனியே
  சிததாந்த முததிமுதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிணா மூாததியே
  சின்மயா னநதகுருவே. 18

ஐந்துவகை யாகின்ற பூதமுத னாதமு
  மடங்கவெளி யாகவெளிசெய்
தறியாமை யறிவாதி பிறிவாக வறிவாக
  ளறிவாக நின்றநிலையிற
சிந்தையற நிலலென்று சுமமா விருததிமேற
  சின்மயா னநதவெளளந
தேக்கித திளைததுநா னதுவா யிருககநீ
  செய்சிதர மிகநன்றுகா
ணைநதைவட வாற்பரம குருவாழ்க வாழவரு
  ளியநநதி மரபுவாழ்க
வென்றடியா மனமகிழ வேதாக மததுணி
  பிரண்டிலலை யொனறெனனவே
வநதகுரு வேவீறு சிவஞான சிததிநெறி
  மௌனோப தேசகுருவே
மந்த்ரகுரு வேயோக தநதரகுருவே மூலன்
  மரபிலவரு மௌனகுருவே 19

நிர்க்குண நிராமய நிரஞ்சன நிராலம்ப
  நிர்விஷய கைவலயமா
நிஷ்கள வசங்கசஞ் சல்ரகித நிர்வசன
  நிர்த்தொநத நிததமுதத
தற்பரவிஸ் வாதீத வ்யோமபரி பூரண
  சதானநத ஞானபகவ
சம்புசிவ சங்கர சாவேச வென்றானான்
  சர்வகாலமு நினைவனே

வற்புத வகோசர நிவர்த்திபெறு மன்பருக்
கானந்த பூர்த்தியான
வத்துவித நிச்சய சொரூபசா க்ஷாத்கார
வனுபூதி யனுகூதமுங்
கற்பனை யறக்காண முக்கணுடன் வடநிழற்
கண்ணூ டிருந்தகுருவே
கருதரிய சிற்சபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. 20

பட்டப் பகற்பொழுதை யிருளென்ற மருளர்தம்
பக்ஷமோ வெனதுபக்ஷம்
பார்த்தவிட மெங்கணும் கோததநிலை குலையாது
பரமவெளி யாகவொருசொற்
றிட்டமுடன் மௌனியா யருள்செய் திருக்கவுஞ்
சேராம லாறுகநான்
சிறுவீடு கட்டியதி னடுசோற்றை யுண்டுண்டு
தேக்குசிறி யார்களபோல
நட்டணைய தாக்கற்ற கலவியும் விவேகமு
நன்னிலய மாகவுன்னி
நானென று நீயென் றிரண்டில்லை யென்னவே
நடுவே முளைத்தமனதைக்
கட்டவறி யாமலே வாடினே னெப்போது
கருணைக் குரிததாவனோ
கருதரிய சிறசபையி லானந்த நிர்த்தமிடு
கருணாகரக் கடவுளே. 21

எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதா
னியாதினு மரிதரிதுகா
ணிப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
வேதுவருமோ வறிகிலேன்
கண்ணக னிலத்துநா னுள்ளபொழு தேயருட்
ககனவட் டத்திநின் று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்துமதி யவசமுறவே

பண்ணுவது நன்மையிற் நிலைபதியு மட்டுமே
பதியா யிருந்தநேகப்
பவுரிகுலை யாமலே கௌரிகுண் டலியாயி
பண்ணவித னருளினலே
விண்ணிலவு மதியமுத மொழியாது பொழியவே
வேண்டுவே னுமதடிமைநான்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே. 22

பொற்பினெடு கைகாலில் வளருகிர் படைத்தலாற்
போர்த்திடை யொடுக்கமுறலாற்
பொலிவான வெண்ணீறு பூசியே யருள்கொண்டு
பூரித்த வெண்ணீர்மையா
லெற்பட விளங்குகக னத்துளிமை யாவிழி
யிசைந்துமே ளேக்கமுறலா
லிரவுபக லிருளான கனதந்தி படமூறி
யிதயங் களித்திடுதலாற்
பற்பல விதங்கொண்ட புலிகலையி னுரியது
படைத்துப் ப்ரதாப முறலாற்
பனிவெயில்கள் புகுதாம னெடியவான் றெடர்நெடிய
பருமர வனங்களாகும்
வெற்பினிடை யுறைதலாற் றவராஜ சிங்கமென
மிகவோ ருமைப்புகழ்வர்காண்
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
வித்தகச் சித்தர்கணமே 23

காராரு மாணவக் காட்டைக் களைந்தறக்
கண்டகங் காரமென்னுங்
கல்லைப் பிளந்துநெஞ் சகமான பூமிவெளி
காணத் திருத்திமேன்மேற்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமோ மாயைவன்
பறவையணு காதவண்ண

நேராக நின்றுனிளை போகம புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்டமெய்த
நினைவின் படிக்குநீ முனனின்று காபபதே
நின்னருட் பாரமென்று
மாராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
யண்டபகி ரண்டமு மடஙகவொரு நிறைவாகி
யானந்த மானபரமே 24

பற்றுவன வறறிடு நிராசையென் றொருபூமி
பறறிப் பிடிககுமியோகப்
பாங்கிற் பிராணலய மெனனுமொரு பூமியிவை
பற்றின்மன மறுமென்னவே
கற்றையஞ் சடைமௌனி தானே கனிநதகனி
கனிவிக்க வநதகனிபோற
கண்டதிந நெறியெனத திருவுளக கனிவினொடு
கனிவாய் திறநதுமொன்றைப
பெற்றவனு மலலேன் பெறுதவனு மலலேன்
பெருககத் தவிததுளறியே
பெண்ணீர்மை யெனனவிரு கண்ணீ ரிறைத்துநான்
பேய்போ லிருககவுலகஞ
சுற்றிநகை செய்யவே யலேயவிட் டாயெனிற
சொல்லவினி வாயுமுணடோ
சுத்தநிர்க குணமான பரதெய்வமே பரஞ்
சோதியே சுகவாரியே 25

பாராதி யண்டங்க ளததனையும் வைககின்ற
பரவெளியி னுண்மைகாட்டி
பற்றுமன வெளிகாட்டி மனவெளியி னிற்றேய்ந்த
பாவியேன் பரிசுகாட்டித
தாராள மாய்நிறக நிறசிநதை காட்டிச
சதாகால நிட்டையெனவே
சகசநிலே காட்டினை சுகாதீத நிலேயாந
தனைக்காட்ட நாள்செலலுமோ

காரார வெண்ணரு மனந்தகோ டிகணின்று
காலூன்றி மழைபொழிதலபோற
கால்வீசி மின்னிப் படர்ந்துபர வெளியெலாங்
கமமியா நந்தவெள்ளஞ்
சோராது பொழியவே கருணையின் மூழ்கியே
தொண்டரைக சுவுமுகிலே
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ
சோதியே சுகவாரியே 26

அண்டமுடி தன்னிலோ பகிரணட மதனிலோ
வலரிமண்டல நடுவிலோ
வனனடுவிலோ வமிாத மதிநடுவிலோ வனப
ரகமுருகி மலாகடுவித
தெண்டமிட வருமூாதகி நிலயிலோ திகருந்
திகநததகி லோவெளியிலோ
திகழ்விநது நாதநிலே தன்னிலோ வேதாநத
சிததாநத நிலேதன்னிலோ
கண்டபல பொருளிலோ காணுத நிலயெனக
கண்டகூ னியமதனிலோ
காலமொரு மூன்றிலோ பிறவிநிலே தனனிலோ
கருவிகர ணஙகளோாயநத
தொண்டர்க ளிடத்திலோ நீவீற் றிருப்பது
தொழுமபனேற் குளவுபுகலாய
சுததநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ
சோதியே சுகவாரியே 27

எந்நாளு முடலிலே யுயிரா முனேபம்பா
லிருக்கவிலே யோமனதெனும
யானுமென் னட்பாம பிராணனு மெனமசசடம
தென்றுனேச் சித்தென்றமே
யநநாளி லெவனே பிரிததா னதைகமேகட்ட
வன்றமுத லின்றுவரையு
மநியாய மாயெமை யடககிக குறுக்கே
யடர்ந்தரசு பண்ணியெங்கண்

முன்னாக நீயென்ன கோட்டைகொண் டாயென்று
 மூடமன மிகவுமேச
மூண்டெரியு மனலிட்ட மெழுகா யுளங்கருகன்
 முறைமையோ பதினாயிரஞ்
சொன்னாலு நின்னரு ளிரங்கவிலை யேயினிச்
 சுகமவரும வதெப்படிசொலாய்
சுத்தநிர்க் குணமான பரதெய்வ மேபரஞ்
 சோதியே சுகவாரியே. 28

அவனனறி யோரனுவு மசையா தெனும்பெரிய
 வாப்தர்மொழி பொன்றுகண்டால்
அறிவாவ தேதுசில வறியாமை யேதிவை
 யறிந்தாக ளறியாரகளார்
மவுனமொ டிருந்ததா ரென்போ லுடம்பெலாம
 வாயாய்ப் பிதற்றுமவரார்
மனதெனவு மொருமாயை யெங்கே யிருந்துவரும்
 வனமையொ டிரக்கமெங்கே
புவனம படைப்பதென காத்தவ்ய மெவ்விடம்
 பூதபேதங்க ளெவ்விடம
பொய்மெயித மகிதமேல் வருநன்மை தீமையொடு
 பொறைபொறு மையுமெவ்விடம
எவர்சிறிய ரெவாபெரிய ரெவருறவ ரெவர்பகைஞர்
 யாதுமுனை யனறியுண்டோ
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
 யெங்குநிறை கின்றபொருளே. 29

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
 துளறிடு மவத்தையாகி
உருவுதான் காட்டாத வானவமு மொளிகண்
 டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினாற்
 றுவுசுக துக்கவேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற்
 றடித்தகில பேதமான

முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
  மூதறிவு மேலுதிப்ப
முன்பினொடு கீழ்மே னடுப்பக்க மென்னுமன்
  முற்றுமா னந்தநிறைவே
என்னிலைமை யாய்நிறைக வியல்புகூ ரருளவடிவ
  மெந்நாளும் வாழிவாழி
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
  யெங்குநிறை கின்றபொருளே. 30

தந்தைதாய் தமாதார மகவென்னு மிவையெலாஞ்
  சந்தையிற் கூட்டமிதிலோ
சந்தேக மிலலைமணி மாடமா ளிகைமேடை
  சதுரங்க சேனையுடனே
வந்தவோ வாழ்வுமோ ரிந்தரஜா லக்கோலம
  வஞ்சனை பொறுமைலோபம்
வைத்தமன மாங்கிருமி சோநதமல பாண்டமோ
  வாஞ்சனை யிலாதகனவே
யெநதநா ளுஞசரி யெனதகோநது தோநதுமே
  யிரவுபக லில்லாவிடத்
தேகமாய் நின்றநின் னருள்வெள்ள மீதிலே
  யானென்ப தறவுமூழ்கிச
சிந்தைதான் றெளியாது சுழலுமவகை யென்கொலோ
  தேடரிய சத்தாகியென
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெயவமே
  தேசோ மயானநதமே 31

கந்துக மதக்கரியை வசமா நடத்தலாங்
  கரடிவெம புலிவாயையுங
கட்டலா மொருசிங்க முதுகின்மேற் கொளளலாங்
  கட்செவி யெடுதததாட்டலாம்
வெந்தழலி னிரதம்வைத் தைந்துலோ கத்தையும்
  வேதித்து விற்றுண்ணலாம்
வேறொருவர் காணம லுலகத் துலாவலாம்
  விண்ணவரை யேவலகொளலாகு

சநததமு மிளமையொ டிருக்கலா மறறொரு
சரீரத்திலும் புகுதலாம்
சலமே னடககலாங் கனன்மே லிருக்கலாங்
தன்னிகரில் சித்திபெறலாம்
சிநதையை யடக்கியே சுமமா விருககின்ற
திறமரிது சத்தாகியென்
சிததமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேசோ மயானநதமே. 32

வேறு.

காக மோடுகழு கலகை நாயநரிகள
சுற்றுசோ றிடுது ருததியைக்
காலி ரண்டுநவ வாசல் பெறறுவளா
காம வேணடன சாலையை
மோக வாசைமுறி யிட்ட பெட்டியைமு
மலமி குநதொழுகு கேணியை
மொய்தது வெஙகிருமி ததது குமபியை
முடங்க லார்கிடை சரக்கினை
மாக விநதரதனு மின்னை யொததிலக
வேத மோதிய குலாலனா
வனைய வெய்யதடி கார ஞனயமன
வநத டிக்குமொரு மட்கலத
தேக மானபொயை மெய்யெ னககருதி
யைய வையமிசை வாடவோ
தெரிவ தறகரிய பிரம மெயமல
சிற்சு கோதய விலாசமே 33

ஐந்து பூதமொரு கான னீரென
வடஙக வநதபெரு வானமே
ஆதியந்த நடு வேது மின்றியரு
ளாய் நிறைநதிலகு சோதியே
தொந்த ரூபமுட னருப மாதிகுறி
குணமிறநது வளா வஸதுவே
துரியமே துரிய வுயிரினுக குணர்வு
தோன்ற நின்றருள சுபாவமே

எந்தநாளு நடு வாகிநின் ருெளிரு
மாதியே கருணை நீதியே
எநதையே யென விடைநதிடை நதுருகு
மெளிய னேன்கவலை தீரவும்
சிநதை யானதை யறிந்து நீயுனருள
செய்ய நானுமினி யுய்வனோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சுகோ தயவி லாசமே 34

மத்தர் பேயரொடு பாலர் தன்மையது
மருவி யேதுரிய வடிவமாய
மன்னு தேசமொடு கால மாதியை
மறநது நின்னடிய ரடியிலே
பத்தி யாய்நெடிது நம்பு மென்னையொரு
மைய றநதகில மாயையைப
பாரு பாரென நடதத வநதெனை
பார தத்தினுமி துளளதோ
சுத்த நித்தவியல பாகு மோவுனது
விசுவ மாயைநடு வாகவே
சொல்ல வேணும்வகை நல்ல காதிகதை
சொலலு மாயையினு மிலலையென
சித்த மிபபடி மயஙகு மோவருளோ
நமபி னோர்கள்பெறு பேறிதோ
தெரிவ தற்கரிய பிரமமே யமல
சிற்சு கோதய விலாசமே 35

வேறு

அனநதபத வுயிாகடொறு முயிரா யென்று
மானநத நிலையாகி யளவைக கெடடாத
தனநதனிச்சின் மாத்திரமாய்க் கீழ்மேல காட்டாச
சதசததா யருட்கோயிற றழைத்ததேவே
இனம்பிரிந்த மான்போலு னிடையாவண்ண
மின்பமுற வன்பாபக்க லிருததி வைத்துக்
கனந்தருமா கனமேதண் ணருளிற ருனே
கனிபலிதத வானநதக் கட்டிப பேறே. 36

பேறனைத்து மனுவெனவே யுதறித் தள்ளப்
பேரின்ப மாகவந்த பெருக்கே பேசா
வீறனைத்து மிந்நெறிக்கே யென்ன வென்னை
மேவென்ற வரத்தேபாழ் வெய்ய மாயைக்
கூறனைத்துங் கடந்தவெல்லைச சேட மாகிக்
குறைவறநின் றிடுநிறைவே குலவா நின்ற
ஆறனைத்தும் புகுங்கடல்போற் சமய கோடி
யத்தனையுந் தொடர்ந்துபுகு மாநிடட்பே 37

ஆதியந்த மெனுமெழுவா யீறற் றோங்கி
யருமறையின் னமுங்காணு தாறற நாணு
பேதமதங் களுமலைய மலைபோல் வாதப
பெற்றியருமவாய்வாதப் பேய ராகச
சாதகமோ னத்திலென்ன வடவா னீழற்
றண்ணருட்சந் திரமௌலி தடக்கைக கேற்க
வேதகசின் மாத்திரமா யெம்ம னோர்க்கும்
வெளியாக வந்தவொனறே விமலவாழ்வே. 38

ஒன்றுகிப் பலவாகிப பலவாக் கண்ட
வொளியாகி வெளியாகி யுருவு மாகி
நன்றுகித் தீதாகி மறறு மாகி
நாசமுட னுற்பததி நண்ணு தாகி
இன்றுகி நாளையுமாய் மேலு மான
வெந்தையே யெம்மானே யென்றென் றேங்கிக்
கன்றுகிக் கதறினர்க்குச சேதா வாகிக்
கடிதினில்வந் தருளகூருங் கருணை விண்ணே. 39

செப்பரிய சமயநெறி யெல்லாந் தந்தம
தெய்வமே தெய்வமெனுஞ் செயறகையான
அப்பரிசா ளருமலைந்தே பிடித்தா விப்பா
லடுத்தவந்தால் களும்விரித்தே யருமா காதி
ஒப்பவிரித் துரைப்பரிங்ஙன் பொய்மெய் யென்ன
வொன்றிலையொன் றெனப்பார்ப்ப தொவ்வா தார்க்கும்
இப்பரிசாஞ் சமயமுமா யல்ல வாகி
யாதுசம யமும்வணங்கு மியல்ப தாகி. 40

சன்மார்க்க ஞானமதின் பொருளும் வீறுஞ்
 சமயசங்கே தபபொருளுந் தானென் றாகப்
பன்மார்க்க நெறியினிலுங் கண்ட தில்லை
 பகர்வரிய தில்லைமன் றுட் பார்த்த போதங்
கென்மார்க்க மிருக்குதெல்லாம வெளியே யென்ன
 யெச்சமயத் தவர்களுமவந திறைஞ்சா நிற்பா
கன்மாக்க நெஞ்சமுளா வெனக்குந தானே
 கண்டவுட ஞனநதங் காண்ட லாகும. 41

காண்டல்பெறப் புறததினுளள படியே யுள்ளும்
 காட்சிமெய்ந்நூல் சொலும்பதியாங் கடவு ளேநீ
நீண்டநெடு மையுமகலக் குறுக்குங் காட்டா
 நிறைபரிபூ ரணவறிவாய் நித்த மாகி
வேண்டுவிருப் பொடுவெறுப்புச சமீபந் தூரம
 விலகலனு குதன்முதலாம விவகா ரங்கள்
பூண்டவள வைகண்டனவாக் காதி யெலலாம
 பொருநதாம லகமபுறமும் புணர்க்கை யாகி 42

வந்தெனுடல் பொருளாவி மூன்றுந தன்கை
 வசமெனவே யத்துவா மாாகக நோககி
ஐந்துபுல னைம்பூதங் கரண மாதி
 யடுத்தகுண மத்தனையு மல்லை யல்லை
இந்தவுட லறிவறியா மையுநீ யல்லை
 யாதொன்று பற்றினத னியல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
 பக்குவங்கண் டறிவிக்கும் பானமை யேம்யாம். 43

அறிவாகி யானநத மயமா யென்று
 மழியாத நிலையாகி யாதின் பாலும்
பிறியாமற் றண்ணருளே கோயி லான
 பெரியபரம் பதியதனைப் பெறவே வேண்டின்
நெறியாகக் கூறுவன்கே ளெந்த நாளு
 நிர்க்குணநிற் குளம்வாய்த்து நீடு வாழ்க
செறிவான வறியாமை யெல்லா நீங்கச்
 சிற்சுகம்பெற் றிடுகபந்தந் தீர்க வென்றே. 44

பந்தமறு மெஞ்ஞான மான மோனப்
பண்பொன்றை யருளியந்தப் பண்புக்கேதான்
சிந்தையில்லை நானென்னும பான்மை யில்லை
தேசமில்லை காலமில்லை திககு மில்லை
தொநதமில்லை நீக்கமில்லை பிரிவு மில்லை
சொல்லுமில்லை யிராப்பகலாந தோறற மிலலை
அநதமிலலை யாதியில்லை நடுவு மில்லை
யகமுமில்லை புறமுமிலலை யனேதது மில்லை. 45

இல்லையில்லை யென்னினெனறு மில்லா தல்ல
வியல்பாகி யென்றுமுள்ள வியற்கை யாகிச
சொல்லரிய தனமையதா யானறு னெனனத
தோன்றுமெல்லாம்விழுங்குஞ் சொரூபமாகி
அலலையுண்ட பகல்போல வவிதனதை யெலலா
மடையவுண்டு தடையறவுன னறிவைத் தானே
வெலலவுண்டிங குன்னையுநதா னுககக கொணடு
வேதகமாயப பேசாமை விளஙகுந தானே. 46

தானென தன்மயமே யலலா லொன்றைத்
தலையெடுக்க வொட்டாது தலைப்பட டாங்கே
போனலுங் கர்ப்பூர தீபம போலப
போயொளிபப தலலாது புலம வேறின்றும
ஞானகா ரததினொடு ஞேய மறற
ஞாதுருவு நழுவாம னழுவி நிற்கு
மானலு மிதனபெருமை யெவாககா சொல்வா
ரதுவான லதுவாவ ரதுவே சொல்லும. 47

அதுவெனறு லெதுவெனவொன றுதிக்குஞ சங்கை
யாதலினு லதுவெனலு மறவே விட்டு
மதுவுண்ட வண்டெனவுஞ சனக னாதி
மன்னவர்கள் சுகாமுதமேலொா வாழ்நதா ரென்றும்
பதிநத நிலையெனவு மென்னையாணட
படிக்குநிரு விகற்பததாற் பரமா னநதக்
கதிகண்டு கொள்ளவுநின னருளகூ டிநதக
கதியன்றி யுறங்கேன்மேற் கருமம் பாரேன். 48

வேறு.

தேன்முகம் பிலிற்றும் பைந்தாட் செய்யபங் கயத்தின் மேவு
நான்முகத தேவே நின்னு ளூட்டிய வகிலமாயை
தான்முயற் கொம்பே யொன்கோ கானலம் புனலே யென்கோ
வான்முக முளரி யென்கோ மற்றென்கோ விளம்பல் வேண்டும்.

கண்டன வல்ல வென்றே கழித்திடு மிறுதிக் கண்ணே
கொணடது பரமா னநதக் கோதிலா முத்தி யத்தாற
பணடையிற் படைப்புங் காப்பும பறந்தன மாயை யோடே
வெண்டலை விழிகை காலில் விளங்கிட நின்றான் யாவன். 50

வேறு.

திரையில்லாக் கடல்போலச் சலனந் தீரநது
தெளிந்திருக்கும் பொன்போலச செகததை யெல்லாங்
கரையவே கனிநதுருக்கு முகத்திலே நீ
கனிநதபர மானந்தக் கட்டி யிநநாள
வரையிலே வரககாணே னென்றாற் கட்டி
வார்த்தை சொன்னாற் சுகமவருமோ வஞ்சனேனை
யிரையிலே யிருததிநிரு விகறப மான
வின்பநிட்டை கொடுப்ப தையா வெநதநாளோ. 51

வேறு.

நினைவொன்று நினையாம னிற்கினக மென்பார்
நிற்குமிட மேயருளா நிட்டையரு ளாட்டுந
தனையென்று மறநதிருபப தருள்வடிவா னதுமேற
றட்டியெழுந திருக்குமினபந தன்மயமே யதுவாம்
பினையொன்று மிலையநத வினபமெனு நிலயம
பெற்றாரே பிறவாமை பெறறார் மறறுநதான்
மனையென்று மகவென்றுஞ் சுற்றமெனறு மசுதத
வாதனையா மாசையொழி மன்னொருசொற் கொண்டே.

ஒருமொழியே பலமொழிக்கு மிடங்கொடுக்கு மநத
வொருமொழியே மலமொழிக்கு மொழிகருமென மொழிந்த
குருமொழியே மலையிலக்கு மற்றைமொழி யெல்லாங்
கோடின்றி வட்டாடல் கொள்வதொக்குங் கண்டாய்

கருமொழியின் குணக்கில்லை மொழிக்கு மொழி ருசிக்கக்
கருமபனைய சொற்கொடுனைக் காட்டவுங்கண் டனைமேற்
றருமொழியின் குணக்கில்லை யுன்னைவிட்டு நீங்காத்
தற்பரமா யானநதப பொற்பொதுவாய் நில்லே. 53

நில்லாத வாகனைநிலை யன்றெனவே கண்டாய்
நேயவருண் மெய்யன்றோ நிலயமதா நிற்கக்
கல்லாதே யேன்படிததாய் கறறதெல்லா மூடங்
கறறதெல்லா மூடமென்றே கண்டனையு மன்று
சொல்லாலே பயனில்லை சொன்முடிவைத் தானே
தொடர்நதுபிடி மர்க்கடம்போற் றொட்டது பற்றுநில்
லெலலாரு மறிநதிடவே வாய்ப்பறைகொண் டடினீ
யிராப்பகலில் லாவிடமே யெமக்கிடமென் றறிந்தே. 54

இடமபொருளே வலைக்குறித்து மடம்புகுநா யெனவே
யெஙகேநீ யகபபட்டா யிஙகே நீவாடா
மடமபெறுபாழ் நெஞ்சாலே யஞ்சாதே நிராசை
மன்னிடமே யிடமிநத மாநிலததே பொருளுந்
திடம்பெறவே நிற்கினெல்லா வுலகமும்வந் தேவல்
செய்யுமிநத நிலைநின்றோர் சனகன்முதன் முனிவர்
க்டம்பெறுமா மதயானை யென்னவுநீ பாசக்
கட்டான நிகளபநதக் கட்டவிழப் பாரே. 55

பாராதி யண்டமெலாம் படாகானற சலம்போற்
பாாத்தனையே முடிவினின்று பாரெதுதா னின்ற
தாராலு மறியாத சததன்றோ வதுவா
யஙகிருநீ யெங்கிருநது மதுவாவை கண்டாய்
பூராய மாகவுநீ மற்றொன்றை விரித்துப்
புலம்பாதே சஞ்சலமாய் புத்தியை நாட்டாதே
யோராதே யொன்றையுநீ முனனிலை வையாதே
யுள்ளபடி முடியுமெலா முள்ளபடி காணே. 56

உள்ளபடி யென்னவுநீ மற்றொன்றை தொடர்ந்திட்
டுளங்கருத வேண்டாநிட் களங்கமதி யாகிக்
கள்ளமனத் துறவைவிட்டெல் லாநதுறநத துறவோர்
கற்பித்த மொழிப்படியே கங்குல் பகலற்ற

வெள்ளவெளிக் கடன்மூழ்கி யின்பமயப் பொருளாய்
விரவியெடுத் தெடுத்தெடுத்து விள்ளவும வாயின்றிக்
கொள்ளைகொண்ட கண்ணீருங் கம்பலையு மாகிக்
கும்பிட்டுச் சகம்பொயெனத தம்பட்ட மடியே. 57

வேறு.

ஆவி யேயுனை யானறி வாய்நின்று
சேவி யேன்களச சிநதை திறைகொடேன்
பாவி யேனுள பான்மையைக் கண்டுநீ
கூவி யாளெனை யாட்கொண்ட கோலமே. 58

என்று முன்னை யிதய வெளிககுளே
துன்ற வைத்தன னேயருட் சோதிநீ
நின்ற தன்மை நிலைக்கென்னை நேர்மையா
நன்று தீதற வைதத நடுவதே 59

அண்ண லேயுன் னடியவர் போலருட்
கண்ணி னுனைக காணவும வாவெனப
பண்ணி னாலென் பசுத்துவம் போயுயும
வண்ண மாக மனோலயம் வாய்ககுமே. 60

கண் ணு ணின்ற வொளியைக் கருததினை
விண் ணு ணின்று விளங்கிய மெய்யினை
யெண்ணி யெணணி யிரவும பகலுமே
நண் ணு கின்றவர் நான்றெழுந தெய்வமே. 61

வேறு.

அறிவிற் கறிவுதாரகமென் றறிநதே யறிவோ டறியாமை
நெறியிற் புகுதா தோர்படித்தாய் நின்ற நிலையுநதெரியாது
குறியற் றகண்டா தீதமயக் கோதிலமுதே யெனைககுறுகிப
பிறிவற் றிருக்க வேண்டாவோ பேயேற்கினிநீ பேசாயே. 62

இன்பக் கடலிற் புகுந்திடுவா னிரவும் பகலுந்தோற்றாமல், அன்பிற் கரைந்து கரைநதுருகி யண்ணா வரசே யெனககூவிப், பின்புற் றழுஞ்சே யெனவிழிநீர் பெருக்கிப பெருக்கிப் பிததாகித், துன்பக் கடல்விட் டகல்வேனோ சொரூபா னந்தச சுடர்க் கொழுந்தே. 63

கூட்டி யெனதென் றிடுஞ்சுமையைச் சுமத்தி யென்னையுஞ் சுமையாளாக், கூட்டிப் பிடித்து வினைவழியே கூத்தாட் டினையே நினதருளால், வீட்டைக் கருது மப்போது வெளியா முலக விய ப்பினைத்து, மேட்டுக் கடங்காச் சொப்பனம்போ லெந்தா யிரு ந்த தென்சொல்வேன். 64

உனக்குநா னடித்தொண் டாகி யுன்னடிக் கன்பு செய்ய
எனக்குநீ தோற்றி யஞ்சே லென்னுநா ளெந்த நாளோ
மனக்கிலே சங்க டாந்த மாதவாக கிரண்டற் றோங்குந
தனக்குநே ரில்லா வொன்றே சச்சிதா னந்த வாழ்வே. 65

வேறு.

ஆதியாய் நடுவா யந்தமாய்ப் பந்தம யாவுமற் றகம்புற நிறைந்த, சோதியாய்ச் சுகமா யிருந்தவெம் பெருமான் றொண் டனேன் சுகத்திலே யிருக்கப், போதியா வண்ணங் கைவிடன் முறையோ புன்மையே னென்செய்கேன் மனமோ, வாதியா நின்ற தன்றியும புலன்சோ வாயிலோ தீயினுங் கொடிதே. 66

ஞானமே வடிவாய்த் தேடுவார் தேடு நாட்டமே நாட்டத்து ணிறைந்த, வானமே யெனக்கு வந்துவந் தோங்கு மார்க்கமே மருளாதா மறியா, மோனமே முதலே முதனிலை வித்தே முடி விலா வின்பமே செய்யுந், தானமே தவமே நின்னைநா னினைந் தேன் றமியனேன றனைமறப் பதற்கே. 67

மறமலி யுலக வாழ்க்கையே வேண்டும் வந்துநின் னன்பர் தமபணியா, மறமது கிடைக்கி னறியானந்த வற்புத நிட்டை யினிமித்த, துறவது வேண்டு மெளனியா யெனக்குத் தூயநல லருடரி னினனம, பிறவியும வேண்டுமே யானென திறக்கப் பெற் றவர் பெறறிடும் பேறே 68

வேறு.

வரும்போ மென்னு மிருநிலைமை மன்னு தொருதன் மைத் தாகி, கரும்போ தேனோ முக்கனியோ வென்ன வென்னுட் கல ந்துநலந், தருமபே ரின்பப் பொருளேநின் றன்னை நினைந்து நெக் குருகே, னிரும்போ கல்லோ மரமோவென் னிதய மியாதென் றறியேனே. 69

உய்யும் படிக்குன் றிருக்கருணை யொன்றைக கொடுத்தா னுடையாய் பாழும், பொய்யு மவாவு மழுக்காறும் புடைபட் டோடு நன் னெறியா, மெய்யு மறிவு பெறும பேறும விளங்கு மெனக்குன் னடியார்பாற், செய்யும் பணியுங் கைகூடுஞ் சிந் தைத் துயருந் தீர்ந்திடுமே 70

பொருளைப் பூவைப் பூவையரைப் பொருளென் றெண்ணு மொருபாவி யிருளாத துரநதிட் டொளிநெறியை யென்னுட் பதிப்ப தென்று கொலோ தெருளாத தெருள வனபர் நெஞ்சந் தித்தித் துருகத் தெவிட்டாத, வருளைப் பொழியுங் குணமு கிலே யறிவா னநதத் தாரமுதே. 71

வேறு.

ஆசையெனும பெருங்காற்றா டிலவம்பஞ் செனவுமன தலையுங் கால, மோசம்வரு மிதனாலே கற்றதுங்கேட் டதுநூா ந்து முத்திக் கான, நேசமுநல வாசமும் போய்ப் புலனுயிற் கொடுமைபற்றி நிறபரநதோ, தேசுபழுத தருள்பழுத்த பரா பரமே நிராசையின்றேற் றெய்வ முண்டோ. 72

முன்னிலைசுட் டொழுதியெனப் பலகாலு நெஞ்சே நான் மொழிநதே னேநின, றன்னிலையைக காட்டாதே யென்னையொ ன்றாச் சூட்டாதே சரணுன் போநத, வநநிலையே நிலையந்த நிலை யிலே சிததிமுத்தி யனைத்துந தோன்று, நனனிலையீ தன்றியிலை சுகமென்றே சுகர்முதலோர் நாடினாரே. 73

பொறியிற் செறியைம புலககனியைப் புந்திக் கவராற் புகு ந்திழுத்து, மறுகிச் சுழலு மனககுரங்கு மாள வாளா விருப பேனோ, வறிவுக் கறிவாய்ப் பூரணமாய கண்டானநத மயமாகிப், பிறிவற் றிருக்கும் பெருங்கருணைப பெம்மானேயெம பெரு மானே. 74

வேறு.

உரையுணர் விறந்து தம்மை யுணாபவ ருணர்வி னூடே
கரையிலா வின்ப வெள்ளங் காட்டிடு முகிலே மாறுப்
பரையெனுங் கிரணஞ் சூழ்நத பானுவே நின்னைப் பற்றித்
திரையிலா நீர்போற் சித்தந் தெளிவனோ சிறிய னேனே. 75

கேவல சகல மின்றிக் கிழொடு மேலா யெங்கு
மேவிய வருளின் கண்ணாய் மேவிட மேலா யின்பந்
தாவிட வினபா தீதத தனியிடை யிருத்தி வைத்த
தேவெனு மௌனி செம்பொற் சேவடி சிந்தை செய்வாம். 76

வே று.

போதமென்பதே விளக்கொவ்வு மவித்தைபொய் யிருளாக
தீதிலாவிளக் கெடுததிரு டேடவுஞ் சிக்கா
தாதலாலறி வாயனைற விடத்தறி யாமை
யேதுமில்லையென் றெமபிரான் சுருதியே யியம்பும. 77

வே று.

காந்தமதை யெதிரகாணிற் கருந்தாது செல்லுமநதக் காந் தத் தொன்று, தேயநதவிட மெங்கேதா னங்கேதான் சலிப்ப றவு மிருக்கு மாபோற், சாந்தபத பரமபொருளே பற்றுபொரு ளிருக்கு மத்தாற் சலிகுளு சிததம், வாய்ந்த பொரு ளில்லையெ னிற் பேசாமை நின்றநிலை வாயக்குமன்றே. 78

வே று.

சொல்லாலும் பொருளாலு மளவை யாலும்
தொடரவொண்ணு வருணெறியைத தொடர்ந்து நாடி
நல்லார்க ளவையகததே யிருக்க வைத்தாய்
நன்னா நெஞசந் தன்னலமு நணுகுவேனோ
இல்லாளி யாயுலகோ டுயிரை யீன்றிட்
டெண்ணரிய யோகினுகக மிவனே யென்னக்
கல்லாலின் கீழிருநத செக்கர் மேனிக்
கற்பகமே பராபரமே கயிலை வாழ்வே. 79

வே று.

குலமிலான் குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமிலான் றனக்கென்னவோர் பற்றிலான் பொருந்து
மிலமிலான் மைந்தர் மனைவியில்லா னெவனவன் சஞ்
சலமிலான் முத்திதரும் பரசிவ னெனத் தகுமே. 80

நானெனவு நீயெனவு மிருதன்மை நாடாம னடுவே சும்மா, தானமரு நிலையிதுவே சத்தியஞ்சத் தியமெனநீ தமியனேற்கு,

மோனகுரு வாகியுங்கை காட்டினையே திரும்பவுநான் மூளைத்துத் தோன்றி, மானதமார்க் கம்புரிந்திங் கலைநதேனே பரநதேனே வஞ்சனேனே 81

வேறு.

தன்மயஞ் சபாவஞ் சுத்தந தண்ணருள் வடிவஞ் சாநத
மின்மய மான வண்ட வெளியுரு வான பூர்தநி
யென்மய மெனக்குக காட்டா தெனையப கரிக்க வநத
சின்மய மகண்டா காரந் தக்ஷிணா திகக மூர்த்தம். 82

வேறு.

வான்பொரு ளாகி யெங்குநீ யிருபப வந்தெனைக் கொடுத்து நீயாகா, தேன்பொருள் போலக கிடககின்றேன் முன்னை யிருவினை வாதனை யென்றோ, தீன்பொரு ளான வமிர்தமே நின்னைச் சிந்தையிற் பாவனை செய்ய, நானபொரு ளானே னல்லனல் லரசே நானிறந் திருப்பது நாட்டம. 83

வேறு.

உளவ றிந்தெலா நின்செய லாமென வுணாநதோர்க்
களவி லானந்த மளித்தனை யறிவிலாப் புன்மைக்
களவு நாயினேற் கிவ்வண மமைத்தனை கருத்துத்
தளருந் தன்மையிங் காரொடு புகலுவேன் றக்கோய். 84

வேறு.

பரவரிய பரசிவமா யதுவெனலாய் நானெனலாய்ப் பாசசாலம், விரவிநின்ற விசித்திரத்தை யைக்யபதத் தினிதிருந்த விவேகந தன்னை, விரவுபக னினைப்புமறப பெனுந்தொந்த மறியாக ளிதயம வேதச, சிரமெனவாழ் பராபரத்தை யானந்த நீங்காத சிதாகா சத்தை. 85

அத்துவித வனுபவத்தை யனந்தமறை யின்னமின்ன மறியே மென்னு, நித்தியததை நிராமயத்தை நிர்க்குணத்தை தன்னருளா னினைவுக் குள்ளே, வைத்துவைதது பார்ப்பவரைத் தானுக வெந்நாளும் வளாத்துக காக்குஞ், சித்தினைமா துவெளியைத் தன்மயமா மானநதத் தெய்வந் தன்னை. 86

தன்னிலே தானாக நினைநதுகனிந் தவிழ்ந்துசுக சமாதி யா கப், பொன்னிலே பணிபோலு மாயைதரு மனமேயுன் புரைக டீர்ந்தா, யென்னினோ யான்பிழைப்பே னெனக்கினியா ருன் போல்வா ரில்லையில்லை, யுன்னிலோ திருவருளுக் கொப்பாவா ரென்னுயிர்க்கோ ருறவு மாவாய் 87

உறவுடலை யெடுத்தவரிற் பிரமாதி யேனுமுனை யொழிந்து தள்ளற், கறவுமரி தரிதன்றோ விகபரமு முன்னையன்றி யாவ துண்டோ, வறிதிலுனை யசத்தென்னல் வழக்கன்று சத்தென வும் வாழ்தது வேனென், சிறுமைகெடப் பெருமையினின் சென மமதே யத்தினினீ செல்லல் வேண்டும். 88

வேறு.

நடக்கினு மோடினு நிற்கினும் வேறொரு நாட்டமின்றி
கிடக்கினுஞ் செவவி திருககினு நல்லருட் கேள்வியிலே
தொடககுமென னெஞச மனமறற பூரணத தொட்டிக்குளே
முடக்குவன் யான்பர மானநத நிததிரை மூடிடுமே. 89

எண்ணாத தெண்ணிய நெஞ்சே துயரொழி யென்னிரண்டு
கண்ணே யுறங்குக வெனனுனை முககட் கருணைபபிரான்
தண்ணார்கருணை மௌனததி னுன்முததி சாதிககலாம
நண்ணாத தொன்றிலலை யெலலா நலமு நமககுளவே. 90

நாற்றச் சடலத்தை யொன்பது வாச னடைமனையைச்
சோற்றுப பசையினை முமமல பாண்டத தொடக்கறையை
யாற்றுப பெறுககனன கன்மப பெருக்கை யடர்கிருமிச்
சேற்றைத துணையென்ற நாய்க்குமுண் டோகதி சேர்வதுவே.

சித்த மவுனி வடபான் மவுனிநந தீபகுண்ட
சுத்த மவுனி யெனுமூவ ருக்குந தொழுமபுசெய்து
சத்த மவுனமு தன்மூன்று மௌனமுந தான்படைத்தே
னித்த மவுனமல் லாலறி யேன்மற்றை நிட்டைகளே. 92

சொல்லாற் றொடர்பொரு ளாற்றொட ராப்பரஞ் சோதிதன்னை
வல்லாளர் கண்ட வழிகண்டி லேன்சக மாக்கத்திலுஞ்
செல்லாதென் சிந்தை நடுவே கிடந்து திகைத்துவிம்மி
யல்லா னதுபக லானதும் வாய்விட் டாற்றுவனே.

சும்மா விருக்கச் சுகஞ்சுக மென்று சுருதியெல்லா
மம்மா நிரந்தரஞ் சொல்லவுங் கேட்டு மறிவின்றியே
யெம்மான் மௌனி மொழியையுந் தப்பியென் பேதமையால்
வெம்மாயக் காட்டி லலைந்தே னநதோவென் விதிவசமே. 94

எல்லாஞ் சிவன்செய லென்றறிந் தாலவ னின்னருளே
யல்லாற் புகலிடம் வேறுமுண் டோவது வேநிலையா
நில்லா யுன்னுற்றமி யேற்குக் கதியுண்டிந நீணிலத்திற்
பொல்லா மயக்கத்தி லாழ்ந்தாவ தென்ன புகனெஞ்சமே. 95

மறக்கின்ற தன்மை யிறத்தலொபபாகு மனம தொனறிற்
பிறக்கின்ற தன்மை பிறத்தலொப் பாகுமிப பேய்ப்பிறவி
இறக்கின்ற வெல்லைக் களவிலலை யேயிநதச சனமவல்லல்
துறக்கின்ற நாளெநத நாள்பர மேநின் றெருழுமபனுககே. 96

கற்றும் பலபல கேள்விகள் கேட்டுங் கறங்கெனவே
சுற்றுந் தொழில்கறறுச சிற்றின்பத தூடு சுழலினெனனுங்
குற்றங் குறைநது குணமே விடுமென்பர் கூட்டததையே
முற்றுந் துணையென நம்புகண் டாய்சுதத மூடநெஞ்சே. 97

வே று.

உடல்பொய் யுறவாயி னுண்மை யுறவாகக்
கடவாரார் தண்ணருளே கண்டாய்-திடமுடனே
யுற்றுப்பார் மோன னொருசொல்லே யுண்மைநன்றுப்
பற்றிப்பார் மற்றவெல்லாம் பாழ். 98

பாராதி பூதமெல்லாம் பார்க்குங்கா லப்பரத்தின்
சீராக நிற்குந் திறங்கண்டாய்-நேராக
நிற்குந் திருவருளி னெஞ்சேயா நிற்பதல்லாற்
கற்குநெறி யாதினிமேற் காண். 99

கேட்டலுடன் சிந்திததல் கேடிலா மெய்ததெளிவால்
வாட்டமறு வுறபவநோய் மாறுமோ-நாடடமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்கட் கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்பும் போம். 100

அற்ப மனமே யகிலவாழ் வத்தனை யுஞ் [ன்
சொற்பனங்கண் டாயுண்மை சொன்னேனுன்-கற்பனையொ

றில்லா விடத்தே யெனைச்சும்மா வைத்திருக்கக்
கல்லாய்நீ தானோ கவி. 101

அப்பொருளு மான்மாவு மாரணநூல் சொன்னபடி
தபபிலாச் சித்தொன்றுஞ் சாதியினு-லெபபடியுந்
தேரிற் றுவிதஞ சிவாகமமே சொல்லுகிட்டை
யாருமிடத ததது்விக மாம 102

அறிவி லறியாமை யறறறிவாய் நின்று
பிறிவறவா னந்தமயம் பெற்றுக்-குறியவிழ்ந்தா
லனறைக குடலமேவண்டே னேயாவிவ் வாக்கையையே
யென்றைககும வேண்டுவேனே யான். 103

அறிந்த வறிவெல்லா மறிவன்றி யில்லை
மறிநத மனமறற மவுனரு-செறிநதிடவே
நாட்டினு ளுநநத நாட்டிற் குடிவாழ்க்கை
கூட்டினுன் மோன குரு. 104

வேறு.

இருப்பா யிருநதிடப்பே ரின்பவெளிக் கேநமக்குக்
குருபபாரவை யல்லாமற் கூடக் கிடைததிடுமோ
அருட்பாய் நமக்காக வாளவநதார பொன்னடிக்கீழ்
மருடபேயர் போலிருககக வாகண்டாய் வஞசநெஞ்சே. 105

வந்தவரவை மறந்துலகாய் வாழ்ந்து கன்ம
பநத முறவுன்னைப் படிப்பிக்கக் கற்றவாயா
ரிநதமதி யேயுனக்கிங் கென்மதிகே ளென்னாலே
சந்தநெஞ் சேபரத்தின் சாரினின்ப முண்டாமே. 106

வேறு.

காடுங் கரையு மனக்குரங்கு கால்விட் டோட வதன்பிறகே, யோடுந் தொழிலாற பயனுளதோ வொன்றாய்ப் பலவா யுயிர்க் குயிரா, யாடுங் கருணை பரஞ்சோதி யருளைப் பெறுதற் கன்பு நிலை, தேடும் பருவ மிதுகண்டீர் சேர வாருஞ் சகத்தீரே. 107

காக முறவு கலநதுண்ணக் கண்டீ ரகண்டா காரசிவ, போக மெனும்பேரின்ப வெள்ளமபொங்கித் ததும்பிப் பூரணமா, யேக

வுருவாய்க் கிடக்கு தையோ வின்புற் றிடா மினியெடுத்த, தே
கம் விழுமுன் புசிப்பதறகுச சேர வாருஞ் சகததீரே. 108

வே று.

வாவிக் கமல மலர்வண்டாய்த் துவண்டு துவண்
டாவிக்கு ணின்றவுனக் கன்புவைததார்க கஞ்சலென்பாய்
பூவிற்கும வான்கடையிற் புலவிறபோா போலவொன்றைப
பாவிக்க மாட்டேன் பதியே பராபரமே. 109

ஆக்குவை மாயை யாவு நொடியினி லவற்றை மாள
நீககுவை நீக்க மில்லா நினைப்பொடு மறபபு மாற்றிப்
போக்கொடு வரவு மின்றிப் புனிதநல் லருளா னந்த
தாக்கவுஞ் செயவா யன்றே சச்சிதா னநத வாழ்வே. 110

வே று.

நெறிபார்ககி னின்னையன்றி யகிலம் வேறே
நிலநீர் தீககால் வானு நீயலாத
குறியாது மில்லை யென்றால யாங்கள்வேறே
கோதையொரு கூறுடையாய கூறாய கூறாய். 111

பொருளே நின்பூரண மேலிட்ட காலம
போக்குவர வுணடோதற போத முண்டோ
விருடானுண் டோவலலால் வெளிதா னுண்டோ
வின்பமுண்டோ துன்பமுண்டோ யாமங குணடோ. 112

பாாத்தனவெல லாமழியு மதனுற் சுட்டிப
பாராதே பார்த்திருககப பரமே மோன
மூர்த்திவடி வாயுணர்ததுங் கைகாட் டுண்மை
முற்றியென தலலல்வினை முடிவ தென்றோ. 113

வே று.

உரையிறந்த வன்பருளத தோங்கொளியா யோங்கிக்
கரையிறநத வின்பக் கடலே பராபரமே 1

திக்கொடுகீழ் மேலுந் திருவருளாம பொற்பறிநதோர்
கைக்குள்வளர் நெல்லிக கனியே பராபரமே. 2

வாக்காய் மனதாய் மனவாக நிறைந்தவர்பாற்
றாக்காதே தாக்குந் தனியே பராபரமே. 3

வானந்த மண்ணினந்தம் வைத்துவைத்துப் பார்க்கவெனக்
கானந்த நந்த வரசே பராபரமே. 4

வானமெல்லாங் கொண்ட மௌனமணிப் பெட்டகத்துக்
கானபணி யான வணியே பராபரமே. 5

ஓடு மிருநிதியு மொன்றாகக் கண்டவர்க
ணாடுமே பொருளான நட்பே பராபரமே. 6

சொல்லும் பொருளுமற்றுச் சும்மா விருப்பதற்கே
யல்லும் பகலுமெனக் காசை பராபரமே. 7

நேச நிருவிகற்ப நிட்டையலலா லுன்னடிமைக்
காசையுண்டோ நீயறியா தன்றே பராபரமே. 8

இரவுபக லற்றவிடத் தேகாந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே. 9

முன்னொடுபின் பக்க முடியடிநாப் பண்ணறநின்
றனவொடுநா னிறபதென்றோ சாற்றாய் பராபரமே. 10

ஆங்கார மற்றுன் னறிவான வன்பருக்கே
தூங்காத தூக்கமது தூக்கும் பராபரமே. 11

கெட்டியென் றுன் னன்பர்மலங் கெட்டயர்ந்தோர் பூரணமாந்
தொட்டிலுக்குட் சேய்போற றுயின்றா பராபரமே. 12

ஒன்றைநினைந் தொன்றைமறந் தோடுமன மெல்லாநீ
யென்றறிந்தா லெங்கே யியங்கும் பராபரமே. 13

கொழுந்தில் வயிரமெனக் கோதறவுள் ளன்பி
லழுந்துமவர்க்கே சுகமுண் டாகும் பராபரமே. 14

அல்லும் பகலு மறிவாகி நின்றவர்க்கே
சொல்லும் பொருளுஞ் சுமைகாண் பராபரமே. 15

அந்தக் கரண மடங்கத் துறப்பதுவே
யெந்தத் துறவினுநன் றெந்தாய் பராபரமே. 16

தன்னை யறிந்தாற் றலைவன்மேற் பற்றலது
பின்னையொரு பற்றுமுண்டோ பேசாய் பராபரமே. 17

தன்னை யறிந்தருளே தாரக மாநிற்பதுவே
யுன்னை யறிதற் குபாயம பராபரமே. 18

கற்றகலை யானிலைதான் காணுமோ காண்பதெல்லா
மற்றவிடத்தே வெளியா மன்றோ பராபரமே. 19

வான்காண வேண்டின் மலையேற லொக்குமுன்னை
நான்காணப் பாவனைசெய் நாட்டம பராபரமே. 20

மாயா சகமிலையேன் மற்றெனக்கோர் பற்றுமிலை
நீயேநா னென்றுவந்து நிற்பேன் பராபரமே. 21

வண்டாய்த் துவண்டு மௌன மலரணைமேற்
கொண்டார்க் கோவின்பங் கொடுப்பாய் பராபரமே. 22

பார்க்கினண்ட பிண்டப பரபபனைத்து நின்செயலே
யார்கருஞ் செயலிலையே யையா பராபரமே. 23

விரிந்த மனமொடுங்கும் வேளையினு ளுகப்
பரநதவருள் வாழி பதியே பராபரமே, 24

பாலரொடு பேயர்பிததர் பான்மையென நிறபதுவே
சீலமிகு ஞானியாதஞ் செயகை பராபரமே. 25

கங்குல்பக லற்றதிருக் காட்சியாகள் கணடவழி
யெங்குமொரு வழியே யெநதாய் பராபரமே. 26

காயநிலை யல்லவென்று காணபா ருறங்குவரோ
தூயவருட் பற்றுத் தொடாவா பராபரமே. 27

பஞ்சசுத்தி செய்துநின்னைப் பாவிததுப பூசைசெய்தால்
விஞ்சிய ஞானம் விளஙகும பராபரமே. 28

அன்பர்பணி செய்யவெனை யாளாக்கி விட்டுவிட்டா
லின்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே 29

மூர்த்தி தலந்தீர்த்த முறையாற் றொடங்கினர்க்கோர்
வார்த்தைசொலச சற்குருவும வாய்க்கும் பராபரமே. 30

விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான நான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே. 31

வந்ததையும் போனதையும் வைததுவைத்துப் பார்த்திருந்தாற்
சிந்தை யிதமகிதஞ் சேரும் பராபரமே. 32

ஏறுமயிர்ப் பாலமுணர் விந்தவிட யங்கணொருப்
பாறெனவு நன்று வறிந்தேன்பராபரமே. 33

மாய மயக்கொழிந்தார் மற்றொன்றை நாடுவரோ
நேயவரு ணிலையி னிற்பார் பராபரமே. 34

நித்திரையிற் செத்தபிண நேருமுடற் கிச்சைவையாச்
சுததாகளே நல்ல துறவோா பராபரமே. 35

நீர்ப்புற் புதமாய் நினைவருட்கே நின்றழியப
பார்ப்பதல்லால் வேறொன்றைப் பாரேன் பராபரமே. 36

நீர்க்குமிழி போலென் னினைவுவெளி யாய்க்கரையப்
பார்க்குமிட மெல்லா மென்பாவை பராபரமே. 37

எல்லாரு மின்புற றிருக்க நினைப்பதுவே
யல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே. 38

தேடாத தேட்டினரே செஙகை துலாககோல்போல்
வாடாச சமனிலையில் வாழ்வார் பராபரமே. 39

படிப்பற்றுக் கேள்வியற்றுப பறறற்றுச் சிந்தைத்
துடிப்பற்றாக் கன்றே சுகஙகாண் பராபரமே. 40

சித்திநெறி கேட்டல் செகமயக்கஞ் சன்மமற
முத்திநெறி கேடடன் முறைகாண் பராபரமே. 41

கண்டவடி வெல்லாங் கரைக்கின்ற வஞ்சனம்போ
லண்டமெல்லா நின்னருளே யன்றோ பராபரமே. 42

கொலைகளவு கட்காமங் கோபமவிட் டாலன்றோ
மலையிலக்கா நின்னருடான் வாய்க்கும் பராபரமே. 43

சொல்லிப் பதர்களைநது சொன்முடிவு காணுதார்
நெல்லிற் பதர்போல நிற்பார் பராபரமே. 44

அழுக்காற்று னெஞ்ச மழுங்கிய புன்மாக்க
ளிழுக்காற்று லின்பநல மெய்தார் பராபரமே. 45

குற்றங் குறைய குணமே விடவருளை
யுற்றவரே யாவிக் குறவாம் பராபரமே. 46

சென்றவிட மெல்லாந் திருவருளே தாரகமா
நின்றவர்க்கே யானநத நிட்டை பராபரமே. 47

காட்டத் திலங்கி கடையவந்தா லென்னவுன்னும்
நாட்டத்தி னூடுவந்த நட்பே பராபரமே. 48

இன்பநிட்டை யெய்தாமல் யாதெனினுஞ் சென்றுமனம்
துன்புறுதல் வன்பிறவித் துக்கம பராபரமே. 49

தன்மயமாய் நின்றநிலை தானேதா னாகிநின்று
னின்மயமா யெல்லா நிகழும் பராபரமே. 50

சிந்தையுமென் போலசசெயலற் றடங்கிவிட்டால்
வந்ததெலா நின்செயலா வாழ்வேன் பராபரமே. 51

காச்சச சுடர்விடும்பொற் கட்டிபோ னின்மலமாய்ப
பேச்சற் றவரே பிறவாா பராபரமே. 52

பற்றொழிந்து சிந்தைப் பதைப்பொழிந்து தானேதா
னற்றிருப்ப தென்றைக் கமைப்பாய் பராபரமே. 53

பட்டப் பகல்போலப் பாழ்த்தசிந்தை மாளினெலலாம்
வெட்ட வெளியாக விளங்கும பராபரமே 54

நீயே நானென்று நினைப்பு மறப்புமறத்
தாயே யனையவரு டந்தாய் பராபரமே 55

நித்திரையும் பாழ்த்த நினைப்புமற்று நிறபதுவோ
சுத்த வருணிலைநீ சொல்லாய் பராபரமே. 56

வேறு.

அநத முடனாதி யளவாம லென்னறிவிற
சுநதரவான் சோதி துலங்குமோ பைங்கிளியே. 57

தூங்கிவிழித் தென்னபலன் றூஙகாமற் றூங்கிநிற்கும்
பாங்குகண்டா லன்றோ பலன்காண்பேன் பைஙகிளியே. 58

வேறு

நீர்க்குமிழி பூணமைத்து நின்றாலு நில்லாமெய்
பார்க்கு மிடத்திதன்மேற் பற்றறுவ தெந்நாளோ. 59

வேட்டைப் புலப்புலையர் மேவாத வண்ணமனக
காட்டைத் திருத்தி கரைகாண்ப தெந்நாளோ. 60

எல்லா மிறந்தவிடத தெந்தைநிறை வாமவடிவைப்
புல்லாமற் புல்லிப் புணருநா ளெந்நாளோ 61

குற்றச் சமயக் குறும்பட்டாநது தற்போத
மற்றவர்கட் கற்றபொருட் கன்புவைப்ப தெந்நாளோ. 62

கண்டவிட மெல்லாங் கடவுண்மய மென்றிருந்து [ளோ.
கொண்டநெஞ்சர் நேயநெஞ்சிற் கொண்டிருப்ப தெந்நா

பாக்கியங்க ளெல்லாம் பழுத்து மனம்பழுத்தோர்
நோக்குந் திருக்கூத்தை நோக்குநா ளெந்நாளோ. 64

எவ்வுயிருந் தன்னுயிர்போ லெண்ணுந் தபோதனர்கள்
செவ்வறிவை நாடிமிகச் சிந்தைவைப்ப தெந்நாளோ. 65

இருநிலனாய்த் தீயாகி யென்ற திருப்பாட்டின்
பெருநிலையைக் கண்டுணர்ந்து பேச்சறுவ தெந்நாளோ. 66

உன்னிலுன்னு மென்ற வுறுமொழியா லென்னிதயந்
தன்னிலுன்னி நன்னெறியைச் சாருநா ளெந்நாளோ. 67

நினைப்பறவே தானினைந்தே னென்ற நிலைநாடி
யனைத்துமா மப்பொருளி லாழுநா ளெந்நாளோ. 68

திரையற்ற நீர்போற் றெளியவெனத் தோன்ற
வுரைபற்றி யுற்றங் கொடுங்குநா ளெந்நாளோ. 69

அறிவோ டறியாமை யற்றறிவி னூடே
குறியி லறிவுவந்து கூடுநா ளெந்நாளோ 70

போக்குவர வற்றவெளி போனிறைந்த போதநிலை
நீக்கமறக் கூடி நினைப்பறுவ தெந்நாளோ. 71

ஓராமன் மந்திரமு முன்னும னம்பரனைப்
பாராமற் பார்த்துப் பழகுநா ளெந்நாளோ. 72

என்னதியா னென்பதற வெவ்விடமு மென்னுசான்
சன்னிதியாக் கண்டுநிட்டை சாதிப்ப தெந்நாளோ. 73

முச்சகமே யாதி முழுதுமகண் டாகார
சச்சிதா னந்தசிவந் தானென்ப தெந்நாளோ. 74

வெவ்வடியும் பூரணமா மெந்தையுரு வென்றிசைந்த
வவ்வடிவுக் குள்ளே யடங்குநா ளெந்நாளோ. 75

தூங்காமற் றூங்கி சுகப்பெருமா னின்னிறைவி
னிங்காம னிற்கு நிலைபெறவுங் காண்பேனோ. 76

கண்ணாடி போலவெல்லாங் காட்டுந் திருவருளை
உண்ணாடி யையா வுருகவைத்தா லாகாதோ. 77

கற்பதெல்லாங் கற்றேமுக் கண்ணுடையாய் நின்பணியால்
நிற்பது கற்றன்றோ நிருவிகற்ப மாவதுவே. 78

சங்கர சங்கர சம்பு-சிவ
சங்கர சங்கர சங்கர சம்பு. சங்கர.

ஆதி யனாதியு மாகி-எனக்-கானந்த மாயறி வாய்நின்றி லங்குஞ், சோதி மௌனியாய்த் தோன்றி-அவன்-சொல்லாத வாரத்தையைச் சொன்னாண்டி தோழி. சங்கர

சொன்னசொல் லேதென்று சொல்வேன்-என்னைச்-சூதாய்த் தனிக்கவே சும்மா விருத்தி, முன்னிலை யேதுமில லாதே - சுக-முற்றச்செய் தேயென்னைப் பற்றிக் கொண்டாண்டி. சங்கர

பற்றிய பற்றற வுள்ளே-தன்னைப்-பற்றச்சொன் னான்பற்றிய பார்த்த விடத்தே, பெற்றதை யேதென்று சொல்வேன்-சற்றும்-பேசாத காரியம் பேசினான் தோழி. சங்கர

பேசா விடும்பைகள் பேசிச்-சுத்தப்-பேயங்க மாகிப் பிதற்றித் திரிந்தேன், ஆசா பிசாசைத் துரத்தி - ஐய னடியிணைக் கீழே யடக்கிக் கொண்டாண்டி. சங்கர

அடக்கிப் புலனைப பிரித்தே-அவ - னாகிய மேனியி லன்பை வளர்த்தேன், மடக்கிக்கொண் டானென்னைத் தன்னுட் - சற்றும்-வாய்பேசா வண்ண மரபுஞ் செய்தாண்டி சங்கர

மரபைக் கெடுத்தனன் கெட்டேன் - இத்தை வாய்விட்டுச் சொல்லிடின் வாழ்வெனக் கில்லை, கரவு புருஷ னுமல்லன் - என்னைக்-காக்குந் தலைமைக் கடவுளகாண் மின்னே. சங்கர

கடலின் மடைவிண்ட தென்ன-இரு - கண்களு மானந்தக் கண்ணீர் சொரிய, உடலும் புளகித மாக-என - துள்ள முருக வுபாயஞ் செய்தாண்டி. சங்கர

உள்ளது மில்லது மாய்முன் - னு-ணர்வது வாயுன் னுளங் கண்ட தெல்லாம், தள்ளெனச் சொல்லியென் னையன்-என்னை த-தானாக்கிக் கொண்ட சமர்த்தைபபாரா தோழி சங்கர

பாராதி பூதநீ யல்லை-உன்னிப்-பாரிந்த திரியங் கரணநீ யல்லை, யாரா யுணர்வுநீ யென்றான்-ஐய-னன்பா யுரைத்தசொல் லானந்த [illegible]. சங்கர

அன்பருக் கன்பான மெய்யன்-ஐய-ஞானந்த மோன னருட் குரு நாதன், தன்பாதஞ் சென்னியில வைத்தான்-என்னைத்- தா னறிந தேன்மனந தானிறந தேனே. சங்கர

இறபபும பிறப்பும் பொருந்த-எனக - கெவ்வண்ணம் வந்த தென் றெண்ணியான் பார்க்கின், மறப்பு நினைப்பு மாய்கி ன்ற-வஞ்ச- மாயா மனததால் வளர்நதது தோழி. சங்கர

மனதேகல் லாலெனக் கன்றோ-தெய்வ-மௌன குருவாகி வந்துகை காட்டி, எனதாம் பணியற மாற்றி-அவ - னின்னருள் வெள்ளத் திருத்திவைத் தாண்டி சங்கர

அருளா லெவையும பாரென்றான் - அத்தை - யறியாதே சுட்டியென் னறிவாலே பார்த்தேன், இருளான பொருள்கண்ட தல்லால்-கண்ட-வென்னையுங் கண்டில னென்னடி தோழி. சங்க

என்னை யுந தன்னை யும வேறா-உள்ளத்- தெண்ணாத வண்ண மிரண்டற நிறகச, சொன்னது மோவொரு சொல்லே - அந்தச்- சொல்லால் விளைந்த சுசததைமயென் சொல்வேன் சங்கர

விளையுஞ் சிவானந்த பூமி-அந்த - வெட்டவெளி நண்ணித் துட்டவிருளாற, களையைக் களைந்துபின் பார்த்தேன் - ஐயன்- களையன்றி வேறொன்றுங் கண்டிலன் தோழி. சங்கர

கண்டாா நகைப்புயிர் வாழ்க்கை-இரு- கண்காண நீங்கவுங் கண்டோன் துயிறான், கொண்டார்போற போனாலும் போகும்- இதிற்-குணமேது நலமேது கூறாய்நீதோழி. சங்கர

நலமேது மறியாத வென்னைச-சுத்த-நாதாநத மோனமா நாட்டந தந்தேசஞ், சலமேது மில்லாம லெல்லாம் - வல்லான்- றுளாலென் றலைமீது தாக்கினான்தோழி. சங்கர

தாக்குநல் லானநத சோதி-அணு- தன்னிற்சிறிய வெனைத் தன்னருளாற, போககு வரவற் றிருக்குஞ்-சுத்த - பூரண மாக்கி ஞன புதுமைகாண் மினனே. சங்கர

ஆக்கி யளிததுத் துடைக்குந் - தொழி - லத்தனை வைத்து மெள்ளததனையேனு ந, தாக்கற நிற்குஞ் சமர்த்தன்-உள்ள-சாட் சியைச் சிநதிக்கத் தக்கது தோழி. சங்கர

சிந்தை பிறந்தது மாங்கே-அந்தச்- சிந்தை யிறந்து தெளிந ததுமாங்கே, எந்த நிலைகளு மாங்கே-கண்ட- யான்ரு னிரண்டற நிருந்தது மாங்கே. சங்கர

ஆங்கென் று மீங்கென் று முண்டோ-சச்சி, தானந்த சோதி யகண்ட வடிவாய், ஓங்கி நிறைந்தது கண்டாற்-பின்ன-மொன் றென்றிரண்டென் றுரைத்திடலாமோ. சங்கர

என்று மழியுமிக் காயம்-இத்தை- யேதுக்கு மெய்யென் றிரு ந்தீ ருலகீர், ஒன் று மறியாத நீரோ-யம- ஞேலைவந தாறசொலல வுத்தரமுண்டோ. சங்கர

உண்டோ நமைப்போலவஞ்சர்-மல-மூறித் ததும்பு முடலை மெய்யென்று, கொண்டோ பிழைபபதிங் கையோ - அருட- கோலத்தை மெய்யென்று கொள்ள வேண்டாவோ. சங்கர

வேண்டா விருப்பும் வெறுப்பும்-அந்த- வில்லங் கத்தாலே விளையுஞ் சனனம், ஆண்டா னுரைதத படியே-சற்று - மசையா திருந்துகொள் ளறிவாகி நெஞ்சே. சங்கர

அறிவாரு மில்லையோ வையோ-என‌னை - யாரென றியாத வங்க தேசததில், வறிதேகா மததீயிற் சிக்கி-உளள, வான்பொரு டோற்கவோ வநதேனுன் ம்ருழி. சஙகர

வந்த வரவை மறந்து-மிக்க-மாதா பொன்பூமி மயககததி லாழும், இநத மய்க்கை யறுகக-எனக, கெநதை மெயஞுஞான வெழில்வாள் கொடுத்தான். சஙகர

வாளாருங் கண்ணியா மோகம-யம-வாதைக கனலை வளா க்குமெய் யெனறே, வேளா னவனுமெய விட்டான் - எனனின்- மிக்கோர் துறக்கை விதியனறோ தோழி. சஙகர

விதிக்கும் பிரபஞ்ச மெல்லாம்-சுதத-வெயினமஞ்ச ளென் னவே வேதாக மஙகள, மதிககு மதனை மதியா-அவா- மாாககந துன்மார்க்கஞ் சன்மாாககமோ மானே. சஙகர

துன்மார்க்க மாதர் மயக்கம்-மனத்- தூயர்க்குப் பற்ருது சொன்னேன் சனகன், தன்மாாகக நீதிதிட் டாநதம-அவன- ஞனந்த மான சதானந்த னன்றோ. சங்கர

அன்றென்று மாமென்று முண்டோ-உனக்-கானந்தம் வேண்டி னறிவாகிச் சறமே, நின்றூற் றெரியு மெனவே-மறை - நீதி யெம் மாதி நிகழ்ததினுன் ரேுழி. சங்கர சங்கர சம்பு.

தேவிகாலோத்திரம்.

ஆசைபய மையமாங் காரமுயிாக் கசசமின்றிப்
பாசம்விடல் கருணையுட னொருமைபத்தி ஞானமுத்திக்
காசைமிக வுடையார் யோகதற் பரருமாய்ப்
பேசியகா லோத்தரததின் வழிநிற்பா பெரியோரே. 1

வாயுவென மறுவுகின்ற மனமடங்கும் வகைதடுப்பா
ஞயவவ னரிபிரம னிநதிரன்சண் முகன்குருவு
மேயபல தேவதைகள் யோகிதபோ தனனறிஞ
ஞயினெல்லா முடையானு மவனணங்கு நுணங்கிடையாய். 2

அறிவுநிலை தவமடககம் புண்ணியந்தியா னங்குணங்கள்
நெறியுடைய பத்தி நெறிவுபா யநநினைக்கின்
மறுகும்வளி யனையமன மடஙகுவதன் றியாததுவே
யறிவுடையோர் யிவையனைத்து மாமென்றே யறைகுவரால். 3

கருத்தடங்கின் முத்தியது கையகலிற் கட்டாகும்
விரித்தபொரு ளிதுவென்ன வறிவுடைய மேதக்கோர்
திருத்தகுநல் லறிவாலே சிததததைத் திறம்பாம
லருத்தியுட னிலைநிறுத்து மதுவறிவின் பயனுமால். 4

வேறு.

ஒருபொரு ளெக்கா லத்து முளதாகிச சிறப்பு டைத்தா
யிருவினை யின்றி மேலா மின்பத்தை யளிப்ப தாகும்
பொருவிலா விதன்மே லன்பு பொருந்திடா தாரு முண்டே
திருவுலா வகன்ற கல்விச் சிறந்தசான் ரேர்க டாமே. 5

யானெனு மதனை நீக்கி யேகமாய் நின்ற ஞான
மானவவ் வொளியாய்த் தோன்று மதுமுத்தி வித்து மாகித்

தேனமர் கரிய கூந்தற் செய்யவாய்ப் பரந்து நீண்ட
மானமர் விழியாய் மேலாம் யோகவத் தகமு மாமால். 6

மந்திரஞ் செபந் தியானம் பூசனை வணக்கம் வேண்டா
வந்தமி லாத முத்திக் குபாயமே யறிய வேண்டும்
சிந்தனை புறமே செல்லிற் றுயரமே திரிய மீட்கின்
பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வார். 7

புறனகங் கீழ்மேல் பக்கம புணர்வதோர் பொருளு மில்லைத்
திறனுடை யுருவ மெல்லாந் தானுகித் தேக மின்று
யறன்முறை யடங்கு ஞான யோகினு லறியப் பட்ட
விறன்மலி ஞானு நந்த மேன்மையாய் விளங்கா நிற்கும். 8

வேறு.

எந்த வாருயிர் யாதொா பொருளினைச
சிந்தை யாறபற்றிக காரியஞ் செய்திடி
னநத யோனிய தாமென றறிவினல்
பந்தமில பொருள் பற்றுத றககதே. 9

வேறு.

கன்மபல மேதுமில்லைச் சுபாவமே காணுங்கால்
தொன்மையுல குயிரில்லைத தோனறுவதெல் லாமசத்து
நன்மையினைத் தோற்றுவித்துப் பறறிலதாய் நணுகரிய
தென்னவறிந் தானுலகு மிலதாகிச சுததனுமாம் 10

வேறு.

வானம் போல வடிவில தாயெங்கும்
ஆன தாகத் தியானமபண் ணுதவன்
கானந் தன்னி லுலண்டெனக் கட்டுப்பட்
டீன மான பிறப்பிறப் பெய்துமே. 11

யாவ ராயினு மெப்பிறப் பெய்தினும்
ஆவ தாவ தருநதுய ராதலால்
தீய துன்பஞ் செறுததற் பொருட்டந்தத்
தூய ஞானச் சுடரைத் தொடர்வரே. 12

வேறு.

மருவிய பொருண்மே லன்பாய் வானரம் போற் சரித்துத்
திரியுமச சித்தாந தன்னைத திருதகிச் சூனியததே நின்றால்
மருவினோர் பிரித லின்றி வானவ ரறிவுக் கெட்டாப்
பொருவிலா நித்த சுத்தப் பொருளினை யடைவ ரன்றே. 13

மேலாய வின்ப மாகி விண்போ லுட் புறம்ப தாகிக்
காலாதி ததது வங்கள் கலவாது காய மின்றி
மாலாய கரண மின்றி யறிவாகி யெங்குந காணும
சீலாய ஞானஞ் சேர்நதோர் திரியா வா நந்தி யாவார். 14

வேறு.

மூண்டு பற்றி முழங்கி யெழுங்கன
லீண்டு காட்ட மிலதே லிலதாகுந
தீண்டு மபபொரு ளின்றெனிற் சித்தமும்
மாண்டு தோற்ற மிலதாய் மடிந்திறும. 15

மோக மூர்ச்சிகை மாயை முதற்கன
வாய சாக்கிர மல்லாச சுழுததியு
மேய வெண்ணு மவததைக ளியாவையும்
வீய நோறபவர் வீடு விடாதவர். 16

உடம்பி ரண்டு முயிர்பபுட னுள்ளமும்
மடம்ப டும்மகங் காரமும புந்தியும்
திடம்ப டததன்னில் வேறெனச் சிந்திப்பா
னுடம்பி லாஞான வுள்ளொளி யுள்ளுறும 17

வேறு,

திருத்தகு சமாதியைச் செய்யுங் காலத்துக்
கருத்தெழுந தடங்காது கலங்கும் மாயினும்
வருத்தமா நித்திரை மருவு மாயினும்
திரித்தறி வுறுத்துத்தன் னிலையிற் சேர்க்கவே. 18

வேறு.

ஆறாத சித்தம் யாதோர் காலத்தி லடங்கு மானல்
பேராமல் வருந்திக் காத்துப் பின்னைச்சிந் தனைகள் சென்று

சாராமல் வல்ல வாறு தடுத்துச்சார் வான வெல்லாஞ்
சேராமன் மயக்க நீக்கித் திடமாகச் செய்து கொள்வான். 19

பற்றினூற் சலிக்கு முள்ளம் பற்றுநே பண்ணிக் கொள்க
நிறறலின் றெனினூந தத்த நிலையினி னிறுத்திக் கொண்டால்
பெற்றன மென்று பேணிப் பின்னைப்பே ராமற் காக்கும்
நற்றவ ரன்றி யிந்த வுலகினி னல்லோ ரியாரே. 20

வேறு.

பிறந்து பெற்ற வறிவாற் பெறும்பயன்
நிறைந்த நீர்முகி னீங்கிய வானென
வறிந்து தன்னை யமல வியாபகம்
செறிந்து நல்ல தியானத் திருத்தலே 21

வேறு.

வளியென மறுகுஞ் சித்த நெஞ்சிலே மருவி நிற்கும்
தெளிவுற நடுவு கீழ்மேற் செலாவகை நிறுத்திக் கொண்டா
லொளியுறு முள்ள மொன்றும் பாவியா துறவே நோககி
யெளியவப் பொருண்மேல் பறறற் றிருப்பவன் யோகி யாவான்.

வேறு.

நித்திரையும் பராக்கினையு நீக்கிச சித்த
மொருநிலையு நீங்காமல் நிறுத்திக கொண்டாற்
சித்தமொரு பொருளினையுஞ் சேரா தாகிச
சேரும்வகை சேராமற் செலல நின்று
மத்தமன முதலான வவத்தை யொன்று
மருவாத வகைநிற்கு மதுவே யாகும்
முத்திநெறி யென்றுமறை யிடை விடாது
முறையிடவு மாகமங்கண் மொழியுங் காணே. 23

பொருண்முழுது மடையாமன் மனத்தை வாங்கி
நெஞ்சகத்தே பொருந்துவித்த பொழுது தோன்றும்
இருளறுநன் ஞானவொளி யது விளங்க
வெப்பொழுதும் வாதனையே யியற்றிக் கொள்க
பரமதுவா யிலதாகி யங்க மின்றிப்
பற்றின்றி யவத்தையின்றி நின்ற வொன்றை

யுரனுடைய தியானிகளா யுறைகின் ரூரே
பிறப்பிலா வநிலத்தை யுறுகின்ரூரே. 24

துக்கசுக மாசைவெறுப் பென்று கூடுந
துவந்துவங்க ளிரண்டவைபோற் சொல்லப பட்ட
மிக்கதெய்வ மடவார்க டன்மா தன்ம
மெய்ப்பலன்கள் பெறுவபே றுளவா மென்று
தொக்கவுள மதுவாகும் பிறபபை யாக்குந்
தொடர்பெனவே துணிந்தந்தத் தொடாபை யாக்கும்
தக்கபொருள் சார்வுயிரச்சார் வடைய நீக்குந்
தவத்தோர்பாற் சிவம்வநது சாருங் காணே. 25

வே று.

ஆகத்தே யாங்கார வடிவதாகி யருவினைசெய் தகங்கார மாருமாய, மோகத்தைத் துறக்கின்மொழி யிற்படாத முத்தி தல மினிதளிக்க மொழிநத தன்றிச, சோகத்தைத் தருமுடலை யெல்லாம் விட்டுச் சேராத வறிவாகிச சுத்தரூப, மாகத்தான் பாவித்தாற் சத்தியெல்லா மறவிடுகை பரமார்த்த மறிவார் தாமே. 26

வே று.

வைய மாச்சிர மம்மென வைத்தவுஞ்
செய்ய சாதி குலமெனச் சேர்த்தவு
மைய மின்றி யறவிட் டறிந்தவர்
செய்ய ஞானத் திரளைச சிநதிக்கவே 27

வே று.

கடைபடு முலகிய றன்னைக் காண்குறி
னுடையவ ரெனையிலை யானுடை யாரிலை
யடையவு மெனக்கிலை யானு மன்னதே
கடையிது நிலையெனிற் றமிய னனரோ. 28

வே று.

நித்தனும் பரமேசன் யானெனறு நிச்சயிக்கின்
முத்தனல னெனினுமவன் முத்தனு முயிருடம்பின்
பெத்தமற ஞானத்தாற் காடசிபெறிற சாநதியுடைச்
சித்தனைப் பொருட்பற்றுத தீரநது வீடடையுமால். 29

அறிவாகிச் சுத்தனு யறிவானுய் வேறுகிக்
குறியாது கொளல்வீடு கூடாது கூறுங்கா
லறிவாதா மிலராகிச சோகாதி யடையானுய்ப
பிறியாத பரப்பிரம மெனநிற்பன பெண்ணணங்கே. 30

நீடிய தலைகாலெங்கு நிறைமயிர்த் தோலினுலே
மூடிய வுடலுங்காணும் கனவெனு முளததனுகிக்
கூடிய விதனின்ஞானக குறியுடைத் துயிரேயெனறுங்
கேடிலா தென்றுநோக்கிற் கேடிலா ஞானமாகும். 31

நிற்பனவு நடப்பனவு மாயிங்கு நீடுயிரகட்
கொப்புடைய தாய்தநதை யீசனுமா யுள்ளேனுன்
கைப்படவு முததியினிற காமராயத துரியததே
நிற்பவர்க ளருசசனையா யென்னையே நினைவரால. 32

ஆனநிலை யாவுடைய பூதங்க ளனைத்துநா
னேனையவை யாவையுள யெவையுநான் றாலநுண்மை
யானவியா வையுமல்லே னெனையறியி னறிவோர்கரு
ஞானமொன்று மென்னுருவ நானேயெவ வுயிர்க்குறவும்.

வேறு.

ஒன்றுடனுந் தோய்விலலா னுத்தாமிக காரில்லா னுலக
மில்லான், நின்றநினை வுஞகெட்டா நித்தன் காரணப படானெஞ்சி
னிற்பான், பொன்றுபிறப பிலிமுதலா மறிவினனிட களன்பழை
யோன் பொருள்க ளில்லோன், யென்றுநினைந தடிககடியும பிற
மமென நோக்குதலே யியலப தாகும் 34

வேறு.

சமயா சாரசங கறப விகறபமு
மமையா தாங்குல வாசார மானதும்
மமையா தாரும் விடாதவில் வாழ்கைகயு
மமையார் தோளாய விடுதலா சாரமே 35

பல்வகை சித்திகளும பாதளத்திற செலவும
சொல்லறிய பொருண்முழுதுஞ சோராமற் பெற்றிடினு
மெல்லையில வின்பமா முதத்பெற வெண்ணுமவன
அல்லறருஞ் சிறறின்ப மடையவவா வொழிபபான். 36

வே று.

யாதொரு விடயந்தன்னு லவத்தையை யெய்தினாலுங்
காதலால் யோகந்தன்னைக் கருதுவான் பிறிதோர்தேசந்
தீதிலாப பீடந்தன்னிற் சிறப்புடைத் தெனினுஞ்சித்தத்
தாதரவடையுமாசை யடையாம லாக்கிகொள்வான். 37

அளியமர் குழலாய்வீட்டை யடையவே கருதுநல்லோர்
நெளிவன பறப்பவூர்வ நிற்பன முதலவாகிக்
களியுடை யுயிர்கருத்துன்பங் காண்கிலா வாழ்க்கையாறு
லளியினு லருளையென்று மாக்குவ தழகிதாமால். 38

வே று.

யோகி யாகி யொழுகு மியல்பினோன்
போக மாறறி பொருண்மேற் புலன்களை
வேக மாய பயமும வியபபும்போய்
மாகர் காணு சுகததை மருவுவான். 39

வே று.

வாதுரை பயனில்சொல்லும் பிறருடன் மகிழ்ந்திருத்தல்
பேதுரு பிணககநீங்கிப பெரியவ னருளினாலே
ஓதுநூ லோதலோவி யுலகினி னன்றுதீதென்
றுதியி லுரைததெல்லா மறவிட்டே யமர்ந்திருப்பான். 40

ஐவகை பூத காரியமென்னு மவ்வுடம்பில்
மெய்வகையாஞ் சிவனிறகுஞ் சிவமுதலா மேதினியீ
றிவ்வகையா வுலகங்க ளனைத்தினையு மிறையுருவென்
றய்வகையா யுணாந்தானே யெமையுணாந்தா னுமைகேணீ. 41

வே று.

ஆசை கோபம பயஞ்சோக ராகமாம
மாசு மாட்சியுள் ளோராக்க மாற்றுமை
பேசு தீமை பிறர்க்குத் தமக்கில்லாத்
தேசி ழுக்குடன் றீர்வார் சிறந்தவர். 42

நிஷ்டானுபூதி.

நித்தனை யுமையா ளடிபணிந் தெனக்கு நிட்டைசா தனைநி கழ்த் தெனவே, யத்தனு மகிழ்ந்தே நீவினு விடுத லாருயிர்த் தொகைகண்மெய் யுணர்வான், முத்தியை யடையுங் காரண மாமான் மொய்குழற் செய்யவாய்ப பசுந்தோள், வித்தகி சாவ தானமாய்க் கேட்டி யென்றிறை விளம்பிடு மன்றே. 1

ஒருமொழி யாலே சுருதியா கமநூ லுயர்புரா ணமுமெலா மொழியு, மொருமொழி யாலே சரியைநற் கிரியா யோகபா வனையெலா மொழியு, மொருமொழி யாலே யண்டபூதங்க ளொடுங்கிடுந் தன்னிலை தோன்று, மொருமொழி சும்மா விருத்தலா மதனு லொப்பிலாச் சிவபத மடைவார். 2

சரியையின் ஜெழிலி னுலுஞ் சற்கிரி யையினும் யோகம், புரிதரு முயற்சி யானும் பொருந்தொணு தென்பர் மேலோர், குரியதே சிகனுரைக்கு மொருமொழி யுண்மை யாலே, யரியமெய்ஞ்ஞான வீடிங் கடைவது திண்ண மாமே. 3

கட்டறத் துறந்தே யுயிர்பொருட் சார்பைக் கருதிடுமே வாசனை யனைத்து, மொட்டற விடுத்து ஞானநூ லனைத்து மோர்ந்திடி லென்பய னுதவு, மெட்டுதற் கரிய சற்குரு வருளா லியம்புமோர் மொழியினைப் பெற்றே, நிட்டைசா திதத்தே சகலகே வலங்க ணீங்கிடிற் பிறப்பிறப் பறுமே. 4

வித்தக மாகப் பலகலை பயின்று மேவுநற் பயன்களை யறிந்தும், தத்துவ முழுதுங் கசடற வுணாந்துந் தனனிலை யறிவதற் கரிதாஞ், சுத்தமெய்ஞ் ஞான தேசிகன் மகிழ்ந்தே சொல்லாமற் சொல்லுமோர் மொழியா, முத்திரை மோன நிலையினு லன்றி முத்தியி னிலைகிடை யாதே. 5

வேறு.

முத்தி ரைகளோர் மூன்று மொழிந்திடிற்
சுத்த சாம்பவி சொல்லும் பைரவி
மெத்து கேசரி யென்று விளங்கிடு
மித்தை யார்க்கு மியம்பவொண் ணுதரோ. 6

வேறு.

இந்தநன் னிலேயி லிருந்துசா தித்தோ ரெவரென வுமைய வள் வினவச், சுநதர வாம தேவமா முனிவர் சுகர்முதன் முனிவ ரென் றறிதி, கந்தடு கரியின் கையினைப் புறங்காண் கவானுடை மலைதரு மயிலே, நிநதையி னிட்டைக் குரியவா தனமு நிகழ்த் துவ னன்புட னீகேள். 7

உத்தர திசைபார்த திருப்பதாங் கலையி னுரிவையோ டுழு வையி னதளுஞ், சிததிரா தனமவென் டுகில்குசை யைந்துந் திண் புவி மிசைவிரிப பனவாம, பததிரம் வீரங் குக்குட மரிய பங்க யங் கோமுக மைநதும், வித்தக மான வங்கவா தனமாம் விம லைநீ யறிகென விளமபும் 8

இயம்புமா தனங்க டமமிலொன் றறமே யிடைகளஞ் சிர ங்கணு னேராப், வயமபெறத தமப மெனநிறீஇ யிருந்தே மன மது வடிவினை யுரும, னயமபெற வுன்னு துன்னியெப் போது நடுநிலை தன்னைநீங காமற், றயங்கிய சுத்த மசுத்தமல் லாத தனி நிலை பொருநதுதல் சமாதி. 9

விண்ணை மூடக கவுசனையை விரிக்கு மொருவன் விரகதெ னப், பண்ணுமயோகத் துறநினைவோன் பவனற் றடுக்கு மது விடுதலே, யெண்ணுங் கருதலதை முனடக்க வியங்கும் வளியும் பின்னடஙகுங், கணணை மறைக்க வான்மறையுங் கணக்காம் படிநீ கண்டு கொள்ளே. 10

அலையு மனத்தை யகத்தடக்கு மவனே சரியை கடந்தோனு, மலையு மனததை யகததடக்கு மவனே கிரியை முடிநதோனு,மலை யுமனததை யகததடக்கு மவனே யோக தற்பரனு, மலையு மன த்தை யகத்தடககு மவனே ஞானி யதிசூரன். 11

அடக்கிக் கருத்தி னலைவறுபபோ னவனே சகல தியாகியா, மடக்கிக கருததி னலைவறுபபோ னவனே பொன்றுப் பொதிளு டையோ, னடககிக் கருததி னலைவறுபபோ னவன பேரின்பவ னுபவியா, மடக்கிக கருததி னலைவறுபபோ னவன் வீட்டின்ப மடைபவனே. 12

வெறிகொள் குரங்கு மயக்குஞ்சொல் விளம்பி யருந்தினால துவு, நெறிதான் மயங்கிச சுழல்வதுபோ னிமிடந் தானு நிலாம னத்தைக்,குறியில் சமாதி யெனுங்கயிற்றாற் குறுகப் பிணிப்போ ரெவரவர்தா, மறிவோ டறியா மைக்ளிறந்த வரிய முத்தி தனை யடைவார். 13

பங்கயா தனத்திற் படியவே யிருந்து பரமசற் குருவினைத் தொழுதே, யிங்கிரு விழியும் விசும்புற நிறுவி யெழுங்கருத் தினையக மாக்கி, யங்குறு நிலையா லடங்கிடா மனத்தி னலைவறு த்தறிவறி யாமை, துங்கமா யொழியச சாதனை புரிந்தே தூங்கா மற் றூங்குக மாதே. 14

ஆதனத் திருந்தே சாதனை புரிந்தா லடங்கிடாப் பொறிபுல னடங்கு, மாதனத திருந்தே சாதனை புரிந்தா லடங்கிடு மனோ விட யங்க, ளாதனத திருந்தே சாதனை புரிந்தா லறிவறி யாமை களொழியு, மாதனத திருந்தே சாதனை புரிந்தா லகணடவீ டடைவது நிசமே. 15

உலையாப பொறியையும் புலனடக்கி யொன்று மனத்தி லுன் றூதே, தலையா கியபே ரானந்த தலைபபட் டதனிற் றூன்மூழ்கி, யலையா யோக மம்புவிடு நேர மரைமாத திரையேனு, நிலையா நிற் போர் வீடடைவா நிலத்திற பிறவா ரிறவாரே. 16

நிட்டை நிலையீ தென்றுரைபபா நிகழும வாயு தாரணையை, நிட்டை யதுதா னலதென்றே நிலவு மேலோா புகலுவார், னிட் டையாதல் கருததடங்க நிறுததலதுவே சிவயோக, நிட்டை விடாது சாதிப்போர் நிதத மெய்வீ டுறுவாரே. 17

நிட்டை சாதித்தா னிங்குமைம் பொறியொடு புலனு, நிட் டை சாதித்தா னெஞ்சமு முளததிடை யொடுஙகு, நிட்டை சாதிதத னினைப்பொடு கேவல மொழியு, நிட்டை சாதித்தா னிமல வீடடைவது நிசமே. 18

நீங்காக் கருத்தை யகத்திருத்தி நிகழ்சாம் பவியாற் ககன முற, நீங்கா நிட்டை சாதிததா னிங்கும் பொறியைம புலன் கரண, நீங்கா நிட்டை சாதிதத னினைப்பு மறப்பு மறநீங்கு, நீங்கா நிட்டை சாதித்தா னித்த முத்திப் பேறடைவார். 19

உத்தர முகமா யாதனத் திருந்தே யுயர்குரு பதமலர் தொழுதே, முத்திரை யெனுஞ்சாம் பவியினைப் பொருந்தி மோனமா மங்கிலை வழாமற், சித்திர தீபம் போலசை வறவே சிந்தையினசை வறப் பவனே, யததன தடியை யடைவனென் றுரைக்கு மண்ணலா கமமெலா மெடுத்தே. 20

இருந்தான் சமாதி போலென்றே யிந்த வுலகோ ரியம்பவுங் கேட், டிருநதுஞ்சமாதி தனிலுழையா தென்றோ வென்போ லிருந்தானே, யிருந்தான் சமாதி தன்னிலையி லிருந்தே யிலாமை தனைநீககி, யிருநதா னவனே யிருநதானே யின்ப மளவி லின் பத்தே. 21

அருந்துபோ னகமும பாதியா நீரு மதனினும் பாதிய தாகப், பொருநதுநா ளொனறுக கொருபொழு தருந்தல் புரிகமற் றெவவிடத தெனுநதா, னிருநதிடி னுமபி னெழுகினும் புவியீ தேகினு மாதாக டமமைப், பரிந்து கூடினுமெய்ஞ் ஞானமுத்திரையிற் படிவது யோகிதன் பரிசே. 22

இத்திற மான யோகசா தனையி லிருந்துசா திப்பவர் தமக்குச், சுத்தமா நாதத் தொனிகளும் பலவாத் தோன்றிடு மணிகடன் மேக, மத்தளம் பேரி யாழொலி சிலம்பு வளையளி தாளமென் றுமையாட், கத்தனு மொழிந்தா னன்றியு முரவோ ராய்ந்தெடுத்துரைத்தன ரன்றே. 23

ஒத்தவந் நாதந் தோன்றிய பொழுதே யொலியினு னியர்ந்தெழு படமபோற், றததுவஞ சகல கேவல நீங்கித் தனையறிபவர்க்கிலை மூட, மித்திற மலாது சகலத்து மெய்தா திரும்பர கேவலத தடையா, மத்தியத் தநத மூடமே யுற்றால் வகையதற் குரைக்குது மன்றே. 24

துன்னிய வந்த மூடநீங் கிடமெய்த் தூயசற் குருவினைத் தொழுதே, மன்னுகா ரணமா மனுவினைப் பெற்றே மனம்விடயத்துறா திருந்தே, யங்கிலைப் பதினொ யிரந்தரஞ் செபிக்க வகன்றிடு மகன்றிடா துறுமேற், பின்னுமச் செபத்தை யொருபதாண்டளவும் பெட்புடன் செபிக்கநீங் கிடுமே. 25

இந்தமெய்ச செபமுங் குருபதத் தன்பு மிடைவிடா தேயுளுற் றுவரேல், வந்திடுஞ் சனனந் தன்னிலே யுறுவர் மன்னுமெ

ய்ஞ் ஞானநிட் டையினை, யுந்துமம் மூட மிலாதவர் தம்மை யுத்தம பக்குவ ரெனலா, முந்துசற் குரவ னல்குமுத் திரையான் மோனவீ டுறுவர்க ளன்றே. 26

இயம்புநன் னிலையி னிட்டைசா திப்போர்க் கினமொளிகோடிக ளொன்றாய், வயங்குவ போல வகக்கணிற் றோன்று மற்றதும் பொருளல வென்றே, தயங்குற வெநதை யுமைக்குரை ததிடவே தலைவிகேட் டதனைச் தெளிய, நயமபெறப் புகறி யென்னவேவினவ நாதனுந தெளிவுற நவிலும. 27

இலங்கிய மோன முத்திரை யதனி லிருந்திடும் பொழுதிலைம் புலனி, னலந்திகழ் மூன்று புலனொடுங் கிடுமா னவிலவை யெவை யெவை யென்னிற், றுலங்கிய ரூப மிரதநற் கநத மென்றுசொற் றிடுவாமற றிரண்டு, புலன்களிற் பரிசந தரிசனந தோன்றிற் போயிடு மென்பர்புண் ணியரே. 28

பேசரிய வனுபோக மாகுங் காலைப பிறங்குசத்தத் தக்கரங்க டோன்றுமாயி, னீசமாம பொறிபுலன்க ளவையுநதோன்று நிலவுபொழு தகமுகம தாக வுய்த்தே, பாசமிறே சிகன்முன்னம் பகர்ந்த வாறே பதுமவா தனமுமபார் வையுநீங் காம, லாசிலங் நிலையிலுற வஞ்செழுத்து மிலலென் றறையககேட் டவைபோமா றியம்பு கென்றாள். 29

நகரமொடு மகரமது சடநதருங்கா ரணமா நாடுமவை நீங்கியிடும் வகையை நவிலுதுங்கேள், வகரததி னகரமுதல் யகரத்திற் றானே மகரமுநீங் கிடுமரிய சிகரமனுத தன்னால், யகரலயம வகரமுந்தான் சிகரத்தி லொடுக்க மாகுமிறை நீங்கவுயிர் முத்தியெய்து மென்றே, தகரநறுங் கரியகுழ னகமாதுக் கிறைவன் றனதுதிரு வுளமகிழ்ந்து சாற்றினனன் குணர்நதே. 30

ஆதனத் திருந்தே சாதனை செயும்போ தலைதரு மனமடங்காமற், போ துமே யெனினுங் கேவல மயக்கம் புரியுமே யெனினுமங் கெழுந்து, நீதியி னையீ ரடியுலா வந்தே நிலவுமா தனத்தினிற் பொருந்தி, யோதுசா தனையி லுறுதியோ டிருப்ப தியோகியர்க் கியல்பதா மன்றே, 31

இங்கிலையா கியபரம கேவலத்தி னுளுமெழு நிதித்தி யாச னத்தி விராமலிருந திடுமேவா, னங்கிலேயே யுடலினொடு சீவன்முத்தி யடைவ னதுவுமெவ விதமென்னி லறைகுதுநீ கேளாய், துன்னி யதோ யததினொடு தோயமுறல போலுஞ் சுவைதருகீ ரததினொ டு கீரமும்போற கலநதே, யெங்கிலேயுந தோன்றும விருநதிடவிவ் வுலகி விறபபினொடு பிறப்புமறுத திணையிலின்பத் தொளிரவான்.

அஞ்செழுத் தின்விதி யெவ்வித மென்னி லரிய தூலமொடு சூக்கும மேவும், பிஞசெ ழுததினைத தள்ளிமே னின்ற பெரியெ ழுததினைப பினுமுனு நிறுவி, யெஞச விலனுயிா நடுவினி னிலவ விசைத்தல் காரண மாகுமென் றறிதி, விஞ்சு நல்லரு ளிறையதா மிதனை விளயகு பகருவாக கருளவது விதியே. 33

இநதவஞ செழுததி லிரண்டெழுததொழிப்ப தென்னை யென்றுமையவள் வினவ, வநதமி லின்ப துன்பமேவ தனையி லழு த்துவ திரணடெழுத தாமால, சிநதனைக் கரிய சிவமிரு பாலுஞ் சோாநதுயிா நடுவணைந் திலஙகு, மைநதெழுத் தினையே காரண மெனலா மதுமுததிக குறுதுணை யாமால 34

விதிசேர் பஞசாக கரந்தன்னை விளஙக வுரைததோ மேலிய ம்பல், பதியின் மனுவாமதையுளநதிற் பதிததோர் பரமபதமடை வர், கதிசேர் செபமு நீங்காதோா கருதும பலனே யடைவரென, மதிசேர் சடையெம மண்ணலுமை மகிழ வுரைத்தான் வாய்மல ர்ந்தே. 35

சினத்தி னிடத்து முவகையினுஞ் சிநேக னிடத்து மனையி டத்து, மனத்தான் மொழியாற் காததிடையு மருளுஞமலி யிட த்தினுந்தா, னெனைதது நழுவ விடாதகததி னிடையே யுய்ப்பா னிறையெழுத்தை, மனதுக கரிய ஞமவனே யென்றுன் பரமன் மலைமகட்கே 36

பதியெழுத்தை விடுததவர்கள் பண்ணும்பூசை யவமாகும், பதியெழுத்தை விடுததவர்கள பண்ணுஞ்செபமு மவமாகும், பதி யெழுத்தை விடுத்தவர்கள் பண்ணுநதவமு மவமாகும், பதியெழு த்தை விடுத்தவர்கள் பண்ணுமறங்களவமாமே, 37

இந்நிலையா மிறையெழுத்தை யுளத்தடக்கு மவனே யிவ்வுடம்பி னுடனிருந்து மிலங்குபர கதியை, யந்நிலையே யடைவனென வண்ணன்மலை மாதுக் கறைந்தனனா லஃதுமோ ரணுவுளத்து ளடக்குந், தந்நிலைமை யுடையவர்க்குப் பரகுரவன் மகிழ்ந்தே சாற்றுகமா காரணத்தைத தமதுளத்து ளடக்கா, நன்னிலையாம் பக்குவரல லாதவர்க்குத் தானே, நவின்றிட வொண்ணாதெனவே நவிலுவர் நல்லவரே. 38

இப்படி யாய வுபயநன் மனுவை யெழிற்குரு வருளிடப்பெற்றுச, செப்பருஞ் செபமுஞ் செபியாது செபிக்கச சிந்தையு மோயும தோய்ந்தா, லப்படி தானே யாதனங் கட்டி யசைவற விருப்பதே நிட்டை, துப்புறு கரண மசையுமே யானுற் றுரிசுள வநிட்டை யென் றுணரே. 39

உற்றமெய் நிட்டை விடாதுசா தித்தோ ருறுவாநன் முத்தியை யென்றும், மற்றவம மூட நீங்கிலார் மூத்தி மறுபவத் துறுவரென் றுரைததீர், குற்றமி னிட்டை யடையுங்கா ரணததைக் குழகனே யுரையென வினவப், பற்றறு பரம னுமையவண் மகிழப் பண்பொடு பகர்தன்மே யினனால் 40

ஞான நிட்ட னிருக்குமந நாட்டினின், மோன வார்த்தை மொழியவே கேட்டவன்; றூனு முப்பதா மாகந தவததினா, லீன முத்திப் பதத்தை யடைவனால். 41

செப்பு நிட்டா பரர்க்குச் சிந்தையா, லொப்பின் மாட்டொடுக்கமுஞ் செய்பவ, னிப்பு விக்க ணிருபததெட் டாமபவந், தப்பிலாதமெய் முத்தியைச் சாருமால். 42

ஞான நிட்டா பராகரு நாடொறும், போன மாதிபொருந்த வுதவுவோ, னீன மில்லா விருபத்தைந தாம்பவ, மான முத்தியை மன்னுத றிண்ணமே. 43

நிட்டை மேவு நிருமல யோகியர், கட்ட வேநற் கலைக ளுதவுவோ, னிட்ட மாயிரு பத்திரண் டாம்பவத, தெட்ட ரும்பத மெய்துவ துண்மையே. 44

சாத னக்குண் முயலுந் தகைமையோர், பாத முச்சிப் படியப் பணிபவ, ரோது மங்கமொருப திரட்டியிற், றீதில் வீடு பெறுவது திண்ணமே. 45

சாற்று நிட்டையைச் சார்ந்தமெய்ஞ் ஞானிபா, லாற்று நற் பணி யன்பொடு செய்பவ, னேறறு மீரா றியன்ற தனுவினிற், போற்றும் வீடு பொருநதுவ துண்மையே. 46

ஓது சாதனை யுறறவா சேவடிச, சீத நீரொடு சேடமு மார் பவன், றீதிலெட்டாந தனுவிற் றிகழ்தரு, மேதின் மெய்வீ டெய்து மினிதரோ. 47

ஒப்பி லாதுய ருண்மைநிட் டார்தமக், கப்பா டன்னமு மாசசித் துதவியே, தப்பி லேவலுந் தாஞ்செயும புண்ணியர்க, கெய்பபின் முதறி யெடுக்கும் பவத்தினே 48

இந்நி லைத்திருப பணியெலாஞ் செய்பவர்க் கிசைய, வந்நி லைப்பர குருவருள சுரநதிணி தாக, வுனனு தறகரு மொருமொ ழியருளினு னுதவித, தனனி லைபபர நிடடையி லிருத்துவன் றயையால. 49

இபபடி நிடடை தனனிலே யிருநது மியல்பொடுந் தன் னறு பவததை, யொப்பிலா வரசற் கமைசசுரைப் பதுபோ லுய ர்குரு பரற்குரைத தளவின, மெய்பபடு குரவன் பின்னிகழ் வத னை விளம பிடககேட் டறிகுநரே, ஒபபின் மாயோக ரலாதவா கிரியா காண்டியென் றுரைததிடப படுமால 50

உன்னரு ஞான நிடடையை யடிக ளுரைத்திடக் கேட்டுள மகிழ்ந்தேன், பன்னருங கிரியா யோகமென் றுரைக்கப படுவ தை யெனக்குநீ விரிததே, நன்னய மாக வுரைத்திட வேண்டு மெ ன் றுமை நாதனை வணஙக, வினனமு தொழுகும மதியணி சடை யோ னிறைவியைப பாரததினி துரைபபான் 51

பங்கமுற மனங்கொண்டு சுவாசந தன்னைப் பந்தனஞ்செய் தருங்கற்பம்பலவ யின்றே, யங்கமதைத் தான்சுழற்றி யபானவ ழிதன்னு லயம்வாங்கி யவ்வழியா னதைமீள விடுத்து, மிங்கிவை பலவியற்ற லட்டமா யோகமென்பரிவை சிவயோக மியற்றுவோ ர்க்கிலையாற், றங்குசிவ யோகத்தா லாக்கமுட னழிவுந் தானி லாப் பரமசா யுச்சியந்தா மடைவார். 52

புத்திகொள் கிரியா யோகசா தனையைப் புரிந்திடு பவர்களி வ்வுலகி, லெத்தனை கால மிருப்பினு மீண்டு மிறப்பொடு பிறப்பி

னையடைவார், சத்திய மாக வறிந்தீ யிந்தத் தனிச்சிவ யோகசா தனையை, இத்தனை வயதிற் போதிபப தென்றே யிறையவ னுமை தனக் கிசைததான். 53

இநதநன் னிட்டை யேழுநான் காண்டி லியமபுத லுத்தம மாகு, முந்திய வையா றுண்டினி லாசான் மொழிகுதல மததிம மாகு, மநதமி லாறு றுண்டினிற் புகற லறைதரு கனிட்டம தாமா, லுங்குமிப பருவங் கடநதவாந கததனை யுரைததிடத தகா தென வுணரே. 54

ஞான நிட்டையை நலகுநற றேசிகன், மான முறறிடு மானிட னல்லனுல், வான முற்று வளர்கயி லைப்பரன், றனெ னததின ஞ்சாற்றிட லாகுமால். 55

வள்ளலார் சாத்திரம்

சத்தியஞானபோதம் - பதியியல்.

நீரிடை யுப்பும் பாரிடை யப்புந, தாயிடைச் சூலுந் தனி ரிடைத துவளுந், தீயிடை வெமமையுஞ் செறிந்தாங கன்ன, வ றிவிடை யீச னமர்ந்தாங குறமே. 1

அத்துவி தம்பெற வாங்காங் கிருப்பினு, மாருயி ரறிவா லறிதரப படாது, வூனக் கண்ணுக கொளியா தொளிதது, ஞான க்கண்ணின் வெளிபபடு நாதன். 2

ஐயெரி நாப்ப ணைந்தவித் திருப்பினு, மிருகா லடக்கியொ ருகா னிற்பினுஞ், சேயிழை மாதரைத் தீரத் தணபபினு, முடை யைத் துறக்கினு முணவை மறபபினு, மமமா செய்மாயை மழுங் கா தம்ம, குருபர னுக்கிற் குழையு மன்றே. 3

மாரியை நோக்கும் வனப்புட் போலும், பாரியை நோக்கும் பாவலர் போலும், கொழுநனை நோக்குங் குலமகள் போலுந், தேசிகனை நோக்குஞ் சீடன் றெரிவே. 4

ப சு வி ய ல்.

விந்து மோகினி மானென விரிந்த, தத்துவக் காட்டிற் றனி த்திடு முயிரை, யாணவ வேங்கை யொருபா லடர்ப்ப, மாயைக்

குடாவடி யொருபான் மயக்கக், காமியக் கடமா வொருபாற் கறுவ, விருவினை மலைப்பாம் பொருபா லிழுக்க, வாசையா மன்னை யொருபா லறையக், குலமெனு ஞமலி யொருசார் குரைப்பக், கல்விக் கானியா றொருசார் கவரச்,சமயச்சூறையொருசார் தாக்க, வவாவெனும் படுதீ யறிவைக் கொளுவ, மாயாவாத வன சரர் வெருட்ட, வின்னா மாவி யிடருறுங் காலை,யுயிரிடை யொளிபுக் கிருந்த வொருவரத், தாயினுஞ் சாலத்தயாநிதி யிரங்கிக், கட்கடை வாளாற் காடற மாற்றலு, முட்கின யாவு முயிர் பிழைதன்றே 5

பாசவியல்.

கதிரிடைக்கலந்த கண்ணொளி யொப்ப, வைவகை யவத்தை யான்மா நீங்கிச, சிவத்தொடுங் கலந்த தேற்ற மென்ப, நோக்கா நோக்க நோக்கு மன்றே. 6

சடததிர ணீப்பத் தனித்திடு மான்மாச், சோகம பாவனை தொககிய பின்றைக், கருடனை நினைபபான் கடுக்கழன் றன்ன, வுபாதி நீங்கி யுணர்வா யினவே. 7

அறிவறி யாமை யகலா தகன்ற, வறிவே சிவமெனு மாகம முடிவே. 8

உபதேசவியல்.

ஐமபுல னறிதலி னவத்தைப் படுதலி, லுணராக் கால முடற் சவ மாதலி, னருத்தா பத்தியி னுள்ள னான்மா. 9

பிறத்தலு மிறததலு பெருகலுஞ் சுருங்கலும், போதலும் வருதலும் புணாவு நீக்கமு, மன்ன மயத்துக் கடுத்தன வாதலி, னன்னமய கோச மான்மா வன்றே. 10

சிவனீ யானு யென்னுந் திகழ்வுஞ்,சிவனு னேனென்னுந் திறமுஞ், சிவனே யாவினு முளனெனுந் திருவுஞ், சிவனே காட்டித் தெளித்தன னெனக்கே. 11

அறிவா காரனு னெனவறிந் துணர்தல், செறிபரப் பிரமம் யானெனத் தேற, லறைசிவ னருளி லடங்கா தடங்க, லுருவ தெரிசனஞ் சததியு முயிராக்கே. 12

அஞ்செழுத் துண்மை யறையுங் காலே, சிவாய நமவெனுந் திருவாக் கியத்திற், சிவமரு ளான்மா திரோதை மலமிவை, பசு

தனை நலியாப் பருவிடம் போன்றச், சிவன்றனை மறையாச் சிவனை மறைக்கு, மதோமுக மாகி லறிவை மயக்கு, மூர்தத முகத்தி னுருவழிந தனவே. 18

அணைந்தோரியல் - முதற்காண்டம்.

பூரண போதப் பொருடா னாகலி, னாரண மாகம மவர்க் கென் செயவே. 14

நினைப்பு மறப்பு நீத்தமை யாலே, யனைத்துங் கண்டுங் கண் டில ரன்றே. 15

சிதம்பர மாதலிற் சோவிட மில்லை, யவனிவ னாதலி னனு கனு மில்லை, யறிவுரு வாதலி னாக்கையு மின்றே. 16

ஒன்றே யாதலி னுணர்பவ னின்று, நானது வாதலின் ஞா னமு மின்றே. 17

சத்தஞ் சோதிட நருக்கந காவியங், கொக்குவம பரதங் கோதெனத் தள்ளாப், பித்தர்க் கிந்நூல் பேசிற் பிழையே. 18

நுனுகிக மின்றி நுணனுணர் வாகி, யறுதிமுதத னருளிய வாகமந, தந்திர கலையெனச சாற்றனு மாமே. 19

மனுதிக ளொடுக்கி மறைமுடி வுணர்நது, வழிபடன் மந்திர கலையென மதியே. 20

அறியா வறிவ னருளிற் கலந்தாங், காதவ னொளிபுக் கழுந் திய கண்ணாய், மும்மைப் பாழு முறைமுறை கடவா, வபரவப் பாழி னடங்கா தடங்க, லுபதே சக்கலை யிஃதென வுணரே. 21

கேவல ஞானக் கிழவ னுனுடைப், பிள்ளைநா வரச போரா ரூர, னாதன வாக்கிய னருநதமிழ் மூலன், சிவன் முத்தர் திரு வாய் மலர்ந்த, நூல்பவ நோய்க்கு நுண்ணிய மருந்தே. 22

இரண்டாங் காண்டம்.

உடலெனும் பெண்ணை யுயிரெனு நாயக, னெந்நாள் விடுவ னெவ்வழி யானே, விடுவ தில்லை விதியுள ளளவும், விதிவச மின் றேல் வெறுப் புற்றிடுமே, வெறுப்பும் விதியின் மேம்பா டாமே, யறிவு விடத்து மற்றவ ரிடத்து, மாக்கை வெறுப்பு மகங்கா வானியு, முறுமெனக் கண்டாங் கொழிநதிடு மாறு 23

நீரிடை யிருப்ப னிலத்திடை யிருப்பன், காற்றிடை யிருப் பன் கனலிடை யிருபபன், விண்ணிடை யிருப்பன் வெயிலிடை யிருப்பன், மதியிடை யிருபபன் மனததிடை யிருப்பன், றதி யிடை செய்போற் சங்கரன் றானே. 24

உருவோ வருவோ வுபயப் பெருக்கோ, காணும் பொருளோ காணாப் பொருளோ, கரியோ செய்யோ கைகா லுண்டோ, வுண்பது முறககமு முடையு முண்டோ, கண்டவ ருண்டோ கழறுமி னீரே. 25

அதிதிதன் மைநத ரலமரு காலைப், பிரமகீ தையைப் பேசின னெவனோ, சிதாகா யத்திற் றிருவுருத் தாங்கி, மறலியை முனிந்த வரத னெவனோ, வரன்முறை யுலகம் வயின்வயி னுதிக்க, நான் முகத் திருந்து நான்மறை யுரைத்தன், றபனி டத்தி லொளித் தவ னெவனோ, வவனே பிரம மென்றறி மன்னே. 26

மூலமென் றழைத்த முனைக்கொம் பியானை, வருத்தந் தீர்ப் பான் வநதவனெவனோ, தூணினு மிருப்பன் றுரும்பினு மிருப் பன், எனுமழ சொல்லுக்கெதிாநதவ னெவனோ, துகிலுரி காலைத் துருவதன் மகட்கு, மாளாத துகிலை வருததின னெவனோ, வருச சுனற் காக வமரிடை யிருநதாங், குணர்மெய்ஞ் ஞான முரைத் தவ னெவனோ, வவனே பிரம மென்றறி மனனே. 27

கல்லா லின்கீழ்க் கடவு ளாகிப், பொல்லா ஞானம் புரிந்தவ னெவனோ, மாலவரை வில்லாய் வலியவா புரங்க, ணீரெழ வொரு க்கி நின்ற மூவரைச, சேவடி நிழலிற் சோத்தவ னெவனோ, காலனை மாட்டிக் கனின்சிறு பாலன், மரணந் தவிர்ப்பான் வந்தவ னெவனோ, வவனே பிரம மென்றறி மன்னே. 28

ஊனோ பிரம முயிரோ பிரமம், வானோ பிரம மறையோ பிரம, நானோ பிரம நாடுங் காலே. 29

வடிவோ பிரம மதியோ பிரம, மொலியோ பிரம முணர்வோ பிரம, மறிவோ பிரம மாயுங் காலே. 30

ஒருமல வழக்கு மிருவினைத் தொடரு, மும்மலச் செருக்கு நால்வகை வாக்கு, மைவகைப் பொறியு மறுவகைக் குற்றமு, மற்று லன்றி யறிவா காயே. 31

வானோ வளியோ மறுகனல் புனலோ, மண்ணோ மதியோ வளரென் றாமோ, யானோ பரம்பொரு ளெட்டும் பிரிவே, தானே யதுவே யதுதா னென்ப, மானு ததுவும வழக்கச சொல்லே, நானே யதுவென நாடலு மாமே. 32

பதிபசுபாச விளக்கம்

அறுவித சமயத் தோர்க்கு மறுமுக சாமி யாகிச்
செறிபரப் பிரமம யானே யென்றுசின் மயிலி லேறிக்
குறுமுனிக் கருளிச் சிவக் குகைதொறும வீற்றி ருநத
மறுவிலாக் குகனைப் போற்றி மாயத்தனென் பிறவி யெல்லாம.

பாசமைந்தையுந் தனித்தனிப் பரிநதிட நீக்கி
நேசமாகிய வறிவுரு நீயெனக் காட்டிப
பேசுமேழ்வகைப பிறப்புனக் கிலையெனப பேசித்
தூசுநீக்கிய சுயம்பிர காசனைத தொழுவாம 34

உலக நெருப்பைக் கடநதொழியா ஞான வுததி மடுப்பேனோ
விலகு குடும்பத் துயாநீங்கி யெநநாட் டுறவி யாவேனோ [னோ
திலக மறையின பொருளிதெனத தேறறுங குரவன காண்பே
கலக வுடலப பிணிதணநது கடவு டனையான் காண்பேனோ

மருவிய வுடல் வெறுப்பும் வையக வெறுப்பும வந்தா
லிருவினை யொபபு மங்க ணெய்திடு மெய்துங் காலைக்
கருமல பாக முண்டாம பாகத்தாற் கடிதிற் சேருந
திருவருட் சத்தி பாதஞ் செறிநதிடுங் குருவு மனறே 36

முத்தரை.ப பகைவ ரென்று மூாககரை யுறவ ரென்றும
பெததனு யனேக காலம பிறநதிறந தெய்ததிட டேற்குப்
பத்தியான் ஞானங் காட்டி ஞானததாற் பரனைக் காட்டும்
சத்திய ஞானு னநத சற்குரு நாதா போறறி. 37

பொசசையா முடலங் காடடிப பொறிபுலன் கரணங் காட்டி
யிசசையா ருயிருங் காட்டி யெழிற்றிரு வருளுங் காட்டி
யச்சமி னிலையங் காட்டி யகமபுறந தானுய்க காட்டி
சச்சிதா னநதங் காட்டி சற்குரு நாதா போற்றி. 38

குருபதேசம்

அஞ்செ முத்தினி லொருபுடை யரும்பதி யமருப
வஞ்ச முற்றுள வொருபுடை பாசமாய் வதியுங்

அஞ்ச லின்றிய வொருபுடை பசிவெனத் துலங்கு
மஞ்செ ழுத்தினின் முமமுத லறிந்தவர் பிறவார். 39

பானுவா மிறை யெழுதது வதனொளி பரை யெழுத்து
வூனமில் கண்ணே யாகு முயிரெனுந் தனி யெழுத்துத்
தீனமில் விளக்கே யாகுஞ் செப்பிய திரை யெழுத்து
நானெனு மிருளே யாகு நவையுறு மல வெழுத்தே. 40

நகரமாகிய சேரியை நஞ்சென வெறுத்து
மகரமாகிய மயலெலாம் வேரொடுங் களைந்து
வகரமாகிய வனத்தினி லிருந்திளைப் பாறிச்
சிகரமாகிய நகரியை யடைந்தனன் சீவன். 41

பாச மாகிய விரண்டையும் படிறெனத் தள்ளி
நேச மாகிய விரண்டையு நெஞ்சிடை யழுத்திக்
காச நீங்கிய கண்ணென முத்தியைக் காண்பா
யாசை நீங்கிய நிலையிது விதற்கிலை யையம. 42

தசகாரியம்

தத்துவா தீதந் தன்னிற் சகசவா ணவமலந்தா
னுறறிடு மிதறுகுச்சாககி நானென லுயிர்க்குரூபஞ்
சித்துரு நானேயென்று தேறலே தெரிசனந்தான்
முற்றுண ரீசன்முன்னர் முகிழ்ததிடா தடங்கல்சுத்தி. 43

நின்மலசொப்பனம்

ஐம்பொறியா லைம்புலன்க ளாரத்தான் புசித்தாலு மறிவான் மிக்கோ, ருமபர்பிரான திருவடிகளி லுள்ளததை வைத்தங்கே யுறங்கா நிற்பர், நமபனைநீத தொருசோர நாயகனை விருப்புற்ற நாரி வேண்டு, மன்பவன்றன் பாற்கிடக்கு மாக்கையிவன் பாற் கிடக்கு மதுபோலன்றே. 44

காண்பதுங் கேட்பதுங் கருத்துஞ் சொப்பனம்
பூண்பதும் புனைவதும புசிப்புஞ் சொப்பனஞ்
சேண்படு நாகமுஞ் செகமுஞ் சொப்பனம்
வீண்படு மிவைக்கெலாம விசுத்த ஞானரே. 45

நின்மல சுழுத்தி.

குடும்ப பாரமு ஞானமுங் கொண்டவ னின்பு
மடங்க நீத்துய ரறிவினை யடைந்தவ னின்பு
நடந்து றங்குவோ னின்பமு நாண்மலர்ப் பாயல்
கிடந்து றங்குவோ னின்பமு மானுமே கிளக்கில். 46

நின்மல துரியம்.

மண்ணொடு மண்ணார் போனார் வளியொடு வளியார் போனார்
தண்ணொடு தண்ணார் போனார் தழலொடு தழலார் போனார்
விண்ணொடு விண்ணார் போனார் விளங்கறி வுருவாய் நின்ற
நுண்ணிய நானே யெங்கு நும்மைநாடிடா திருக்கின் றேனே. 47

நின்மல துரியாதீதம்.

போக்கிலை வரவிலை புணரக் கையிலை
தாக்கிலை யேக்கிலை சரிக்கக் காலிலை
மோகமுற மூக்கிலை முகிழ்க்கக் கண்ணிலை
வாக்கிலை மனமிலை யநீத வாழ்விலே. 48

இத்துரி யாதீ தத்தி லிமைக்கொட்டு மளவா னாலும்
முற்றகண் ணொடி தன்னி லுளுந்துருள பொழுதா னாலுங்
கைத்தலத் தாலா வின்பால கறக்குறுங் காலமேனுஞ்
சித்துரு வாகி நிற்போர் சின்மய வீடு காண்பார். 49

பதி விளக்கம்.

நிராமயமாய் நிட்களமாய் நித்தியமாய் நின்மலமாய்
புராதனமா யசஞ்சலமாய்ப் பூரணமாய்ப புனிதமாய்ச
சராசரமாய்ச் சாக்கியாய் சத்தியமாய்ச சித்துருவாய்
பராபரமாய் வெறுவெளியா யிருக்குமந்தப் பரமசிவம். 50

சொல்லாலு மனனாலுந் தொடராத சூக்குமமாய்ப்
பல்லான்ற கேள்வியரு மீதென்று பகர்வரிதா
யொல்லாத பரஞ்சுடரா யுயிர்க்குயிரா யுண்மையா
யெல்லாமா யல்லவுமா யிருக்குமந்தப் பரமசிவம். 51

ஒன்றாயும் பலவாயு முருவாயு மருவாயுங்
குன்றாயு மணுவாயுங் குணமாயுங் குணியாயு

நன்றாயுந் தீதாயு நானாயுந் தானாயு
மின்றாயு முளதாயு மிருக்குமந்தப் பரமசிவம். 52

சிவனறிந் தருளுவன் சீவ ராசியைச்
சிவன்றனை யறிந்திடாச சீவ ராசிகள்
சிவனிலா விடமிலை செடசித் தெங்கணுஞ்
சிவனிலா விடினுயிர் செகமற் றில்லையே. 53

அவனவ ளதுவெனு மகில பாசமே
யவனவ ளதுவென வறைப வன்பசு
வவனவ ளதுவினை யாக்கு வான்பதி
யவனவ ளதுவறி லறிவைக் காணலாம். 54

அவனசைந் திடிலொரு வணு வசைந்திடு
மவனசை யாவிடி லணு வசைந்திடா
சிவன்சத்தி யோடுற்ற செகம விரிந்திடுஞ்
சிவன்றனித் திடில்விரி செக மொடுங்குமால். 55

சாக்கிர சொப்ப னங்க ளிரண்டையுந் தாண்டிப் போனாற்
சூக்கமாஞ் சுழுத்தி வந்து தொல்லிரு ளாகி மூடு
மாக்கமு மழிவு மில்லா வறிவினா லதுவும் போனாற்
போக்கொடு வரவு மில்லாப் பூரணப் பொருள்வந் தெய்தும். 56

காணுறு புலன்கள் போகிற் கரிசுறு மனம்போம் போனா
லாணவம் போகும் போனா லாருயிர்ப் போதம் போகுஞ்
சேணுறு மொளிக்கு மேலாஞ் சிவப்பிர காசந் தோன்றும்
மாணனே யிதுவே முத்தி நிலையென மதித்தி டாயே. 57

மாசறப் படித்தா னேனு மயலறந் தெளிந்தா னேனு
மாசறத் துறந்தா னேனு மஞ்செழுத் துணர்ந்தா னேனு
மீசன்வே றியான்வே றென்னு மிருமையுங் கழலா னாகிற்
பாசமுங் கழல்வ தின்றாம் பதித்துவந் தானு மின்றே. 58

பசு விளக்கம்.

பாசத்தாற் பசுவெனப் பகரப் பட்டன
பாசந்தா னிரிதரப் பதியெனப் படுங்
காசத்தாற் குருடெனக் கழறப் பட்டன
காசந்தா னிரிதரக் கண்ணெ னப்படும். 59

எஞ்ஞான்று குடும்ப பார மேகுமென் றிரங்க வேண்டா
மஞ்ஞான மெம்மட் டுண்டோ வம்மட்டுங் குடும்ப பாரம்
மெய்ஞ்ஞான முண்டேன் முத்தி மேவுதற் கைய மில்லை
சஞ்ஞானத் தாலஞ் ஞானஞ் சுருங்குமந் நிலையே முத்தி. 60

சீவனு மிந்த வான்மா வியற்கையைத் தெரிக்குங் காலைக்
கேவலன் சுத்தன் சாநதன சூக்குமன் கிளா சனாதன்
பாவமில் சர்வா னநதன் பகரருனா சாவ சாக்கி
மேவுசின் மாத்தி ரத்தன் மிகுசுக சொரூப னாமால் 61

ஆகையா னா முயற்சியி னாலு மகிழ்நதபே ராதரவா லுங், கோகன கத்தா டருக்ர வனபாற் குறைவறு பத்தியினா லும, மோகமே விளைக்கும பிரகிருதி யினறன பாவனை முழுதை யுந் தணந்திட், டேகமாஞ் சிவனே நானெனச சிநதித திடரொ ழிந திருந்திடத் தகுமால் 62

யாவ னொருவன் றன்னிடததி லிருககுஞ் சிவனை விட்டயலை
மேவி யிருக்குஞ் சிவனைநனி பூசிப பவன்றன் வியன்கையிற்
பாவி யிருக்கும் பாயசததை விட்டுக கூன்கை பரநதோடித
தாவுந் துளியை நாநுனியாற் றுய்க்கு மவனே சொலலுங்கால்.

சகலபூ தங்க டோறுஞ் சாக்கியாய் விசுத்த தேசாய்த்
தகுஞான தேகி யாகித தயங்கிய பரமான் மாவை
யகமுக மாக வுள்ளும புறமபு மொன்றா யறிநது
பகவற யாவன் பாரபபா னாங்கவன் முழுதும் பார்ததான். 64

ஆணவ விலக்கணம்

சரிதையி லாணவங் கால் சரிநதிடுங்
கிரியையி லைமலங் கெடுதி யுற்றிடு
மருவுயோ கத்தின்முக் கான்ம டிநதிடும்
விரிசிவ ஞானததின் முற்றும் வீயுமே. 65

காமத்தா லிநதிரன் கலக்க மெய்தினான்
காமத்தா லிராவணன் கருத்த ழிந்தனன்
காமத்தாற் கீசகன் கவலை யுற்றனன்
காமத்தா லிறந்தவர் கணக்கி லார்களே. 66

கோபத்தாற் கௌசிகன் றவத்தைக் கொட்டினன்
கோபத்தா னகுடனுங் கோல மாற்றினன்
கோபத்தா லிந்திரன் குலிசம போக்கினன்
கோபத்தா லிறந்தவர் கோடி கோடியே. 67

கோபமே பிறவியைக் கொடுக்குங் கொள்கையாங்
கோபமே யறிவினைக் குறைக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும பேயரோ. 68

ஆசையாற் சந்திர னங்கந் தேய்ந்தனன்
ஆசையாற் சவுபரி யறிவை நீங்கினன
ஆசையா னராசுர னவி போககினன்
ஆசையால் வாலியு மழிநது போயினன். 69

ஆசையா லிநத மாயை யறிவினை முழுது மூடித்
தேகமே யான்மா வென்றங் சேயிழை மடவார் தங்கள்
போகமே மோக்க மென்றும புநதியைத் திரிவு பண்ணுஞ்
சோகம்பா வனையா லித்தை தொலைப்பர்கள் சிவன் முததர். 70

கன்ம விலக்கணம்.

வினையினல் விகார முண்டாம விகாரத்தால் விருப்புண் டாகு
முனனும விருப்ப நாள விதவுல கஙக ளுண்டா
நனியுல கத்தான் மெல்ல நானெனு மகமுண்டாகும்
துனியுடை யகங்கா ரததா றஞசலும் பிறப்பு முண்டாம். 71

ஊழ்வினை யாலு டம்பு முடமபிலு லூழு மாகித்
தாழ்வினை யிரண்டாய் மூன்றாய் சதுாவித மாகி யோங்கி
வாழுவொடு வறுமை யாகி மனனுயிா தொறும் வதிந்து
காழ்மரம் விதையும் போலாங் கன்மமீ கண்டு கொள்ளே. 72

சஞ்சிதந திருநோக் காற்போம் பிராரத்தந் தனுவோ டேகும்
விஞ்சுமா காமி யநதான் விளங்கு ஞானத்தி னாற்போஞ்
செஞ்சயான் செய்த தெல்லாஞ் சிவனசெய்த தென்றுணர்ந்தால்
மஞ்சனே வினைத் திறங்கள் வநதுனைச் சந்தி யாவே. 73

ஞானதீக்கை யிலக்கணம்

பூசையால் விரதந் தன்றாற் புண்ணிய தீர்த்தந் தன்று
வாசறு தருமந் தன்று லளவறு வேள்வி தன்றாற்

பாசபந் தங்கள் பொன்று பாரிடை நம்போல் வந்த
தேசிக னருளு ஞான தீக்கையாற் பொன்று மன்றே. 74

ஆசாரிய னிலக்கணம்.

மண்ணலை நீரலை வளி நெருப்பலை
விண்ணலை மதியலை விரிந்த பானலை
பெண்ணலை யாணலை பேடு மல்லையா
லண்ணலே நீயென வறைபவன் குரு. 75

யானென தெனுஞ் செருக்கை யிரித்தொளி யாயெறிக்கு
ஞானதே சிகற்குத் தன்னை நதிர்கொடுத் திறைஞ்சாநின்ற
வானமா ணாக்கற் கிந்த வனுபவ மறையலாகு
மேனையோர்க் குரைப்பினன்றே னிருளபுரை நிரையத்தெய்தும்.

சீட னிலக்கணம்.

பூதகா ரியங்க ளெலலாம் பொய்ம்மை மெய்ப் பூதநாத
ஞதலால் புவனத் தாசை யந்தரத் தாசை யற்ப
மோதறு வகைச் சமபத்து முயாமுத்தி விருப்பு மிந்தச்
சாதன நான்குந தானே சீடற்குச சடல மெனப. 77

கடப்பருங் கடல் கடத்துங் கருணையா ரியன் முனிநதே
யடித்துதைத் தருவ ருத்திட் டகதிர மனுசெய் தாலு
முடற்பிணி யகற்ற வலல வுததம னிவனே யென்று
திடப்படு சிரத்தை யுள்ளோன சீடனென் றுரைக்கும் வேதம்.

மன்னர்முன் காலன் முன்னு மகிழ்ச்சியைப் பிரிக்க வநத
தன்னிகர் நோயின் முன்னுந தானடங் கிடுவார போல
மின்னமர் கயிலை நீதது மெய்யுடை யார்போல் வநத
கொன்னமர் குரவன் முன்ன ரடங்குவான் குலமா ணாக்கன். 79

நானோ கொல்லோ வென்றனக்கு நாதனோ கொலலோ வெனக்கிங்
காணுப் பிறப்பு மிறப்புமிவ ணடைநத தென்கொ லோவென்று
தானே தனககிவ் விசாரஙக டலைபபட் டிடலுந் தேசிகனைத்
தேனு ரளிபோற் றேயமெலாந் தேடு மவனே சற்சீடன். 80

ஞானகுரு மான்மியம்.

எங்கா ளிருப்பினு மிறப்பது நிசசயம்
பொன்னாட்டி லிநதிர னாயினும் பொன்றுவ

னன்னுட் கழியுமுன் ஞானத்தி னாலே
தன்னு லறிவது சற்குரு பாதமே. 81

சித்தஞ் சிவத்தோ டொருக்கிச் சிவமான
முத்தன் சிவமென மொழிந்திடு மாகமஞ்
சத்தியஞ் சீவன் சங்கர னென்றெ
குற்றமி னன்மறை கூறும் வகுத்தே. 82

கொல்லா விரதம்.

ஆருயிர்க் கொலாத மேலோ ரறிவினை யறிந்த நல்லோர்
தீமன மொடுக்க வல்லோ ரிவாகளே தேவ ராவர்
காமராய்க் கற்ப ழித்தோர் களவுசெய் துடல் வளர்த்தோர்
மாமிசந தின்போ ரெல்லா மானிடப் புலைய ராவார். 83

அறியவாக் கையின் மானிட வாக்கையே யாக்கை
விரியு நோன்பினி லுயிர்க்கொலா விரதமே விரதங்
கருதிற் றெய்வதங் கண்ணுதற் றெய்வமே தெய்வந்
தெரியிற் றேவிகா லோததர தேற்றமே தேற்றம். 84

அம்மா வெனவலற வாருயிரைக் கொன்றருந்தி
யிம்மா னிடரெல்லா மின்புற் றிருக்கின்று
ரமமா வெனுஞ்சததங் கேடடகன்ற மாதவர்க்கும
பொய்ம்மா நிரையமென்றுற புசிததவர்க்கென் சொல்லுவதே.

கங்கையிற் படிநதிட் டாலுங் கடவுளைப் பூசித் தாலு
மங்குல்போற் கோடி தன்மம வள்ளலாய் வழங்கி னாலுஞ்
சங்கையில லாத ஞான தத்துவ முணர்நதிட் டாலும்
பொங்குறு புலால் புசிப்போன் போய்நர கடைவ னன்றே. 86

கொலையிலா னுதவு மன்னங் கூறிற்பே ரமுத மாகுங்
கொலையுளா னுதவு மன்னங் கூறிற்பேர் விடம தாகும்
புலையர்தம் மனையி லுண்போன் புலையனு மாறு போலக்
கொலைஞர்தம் மனையி லுண்போன் கொலைஞனே யாவ னன்றே.

கலையெலா முணர்ந்தா னேனுங் கரிசறத் தெளிந்தா னேனு
மலையென வுயர்நதா னேனு மனமய லகன்று னேனு
முலகெலாம் புகழப் பல்லோர்க் குதவிய கைய னேனு
மிலகிய விரக்க மின்றே லெழுநர கடைவ னன்றே. 88

இத்திற னருள்கைப் பற்றி யுயிர்க்கெலா மிதத்தைச் செய்க
சத்திய விரக்க மின்றேன் முநீதியைச் சாரா னாகும்
பத்தியால் யோகஞ் சாரும் யோகத்தாற் பரம ஞானஞ்
சித்தியா மிதற்கா தாரஞ் சீவகா ருணிய மன்றே. 89

ஆக்கை யருமை.

மக்க ளாக்கையிற் பிறத்தலே யரிதுமற் றதிலுங்
துக்க கூன்குரு டூமையைத் துறத்தலு மரிது
நற்கு லத்திடை வருதலு மரிதுஞா னதான
முக்க ணீசனுக் காட்படல் முற்றிலு மரிதே 90

உடம்பெலா நீங்கிநல் லுடம்பு பெற்றவ
ருடம்பினா லுறுபய னென்று மோகிலா
ருடம்பினா லுறுபய னவமே தெனி
லுடம்புயி ருணர்வையு மோர லாகுமே 91

அரிது மானிட யாக்கையிற் பிறத்தன் மற்றதினு
மரிது வேதநூல் சைவநூ லாலகந் தெளித
லரிதவ் விசனே நாமென வறிவு மேலிடுத
லரிது வாய்ப்பறை யறைந்திடா ததினடங் கிடலே 92

சரிதை கிரியாயோக விலக்கணம்

எங்கணு நிறைந்து நின்ற வீசனோ டொன்ற லாலே
சங்கர னாமே யென்னச் சமாதி யோகம் புரிந்து
துங்கவெண் மதிபோ லுள்ளந் துலங்கிடச் சுவானு பூதி
யங்குதித் திடவா னந்த மடைவதே யமல யோகம். 93

ஒருகண மிருப்பன் றெய்வ வுருவினி லீசன் றன்மற்
றிருகணஞ் செங்கோ லோச்சு மிறையவா பாலிருப்ப
னருமறை யவாகு மூத்து ளம்புவி மூளவி ருப்பன்
துரிய யோகிக ளுளத்திற னாங்குவ னிருந்தெப் போதும். 94

ஞானநிட்டை யிலக்கணம்.

சராசரப் பொருள்க டோறுந் தங்கிநின் றவற்றின் றன்மை
விராவுத லின்றி யொன்றாய் விமலமாய் விண்ணி னொய்தாய்ப்
பராபர வெளியாய் நீங்காப் பாச சாலங் கடந்த
நிராமய சிவந்தா னாகி நிற்பது ஞான நிட்டை. 95

மத்திம வுடலு ளுகா வளர்கா ணந்தா ளுகா
மொய்த்தவிந் தியந்தா ளுகா மூலிவா யுவந்தா ளுகா
சித்திர தீபம் போலசசீவ பாவங் கழன்று
நித்திய சிவந்தா ளுகி நிற்பது ஞான நிட்டை. 96

மக்களு மனையு நீத்து மாதரா ராசை நீத்துச்
சொர்க்கமே லாசை நீத்துச சுத்தனைப் பற்றொன் றின்றிக்
கற்கவேண் டியது நீத்துக் கருதிரு வினையு நீத்து
நிர்க்குண சிவந தாளுகி நிற்பது ஞான நிட்டை. 97

சிந்தனை புறஞ்செலாச சிவோகம பாவனை
சந்தத முளுறறிடிற் சாமதி வந்துறு
மநதநற சமாதியா லறிவு மேலிடு
மிந்தநன் னிலையிலே யிருக்கற் பாலையே. 98

பாவனு தீதந் தன்னி ளுடொறும் பதிந்து நிற்பாய்
பாவனு தீதந தன்னி னெஞ்சகம் பதியா தாயின்
பாவனை தனிலே நெஞ்சைப் பழகவிடு பழுத்த காலை
பாவனு தீதம வநது பதிந்திடும பான்மை யோடே 99

ஐம்புலனுல்வரு மிலக்கணம்.

சத்தத்தா லசுண மாயும் பரிசத்தாற் றநதி மாயும்
வெற்றிசே ருருவத் தாலே விட்டிலம் பறவை மாயும்
பற்றியா ரிரதத் தாலே பாணிமீ னங்கண் மாயும்
மொய்த்தகந் தத்தி னுலே மூசுவண் டினங்கண் மாயும.

ஓதியவசுண மாதி யொன்றொன்று லழியா நிற்குங்
காதினுற் றொக்கான் மூககாற் கண்ணினு னுவா விந்தச்
சாதிமா னிடர்க ளெல்லா மஞ்சினுற் சாகா நிற்பர்
போதமே விட்ட காலம் புலன்வழிப் போகா ரன்றே. 101

ஐம்புலன் வேன்ற வறிஞரிலக்கணம்.

ஐம்புல னடக்கலாலு மறிவினை யறிதலாலு
மின்பதுன் பங்களெல்லா மியல்பென வொறுத்தலாலுஞ்
செம்பொரு ளறைதலாலுஞ் சிவோகமபா வித்தலாலும்
நம்பனை யகத்துணர்நத ஞானியென் றறியலாமே. 102

வேதநா லுணர்தலாலும் விதிவழி யொழுகலாலுஞ்
சூதகந் துறத்தலாலுஞ் சுகமய மாதலாலும்
பேதமற் றிருக்கையாலும் பெரியவர் கூட்டத்தாலும்
நாதனை யகத்துணர்ந்த ஞானியென் றறியலாமே. 103

சந்நியாசி யிலக்கணம்

ஆக்கைக்குஞ் சாக்கினமே யனைத்திற்குஞ் சாக்கினமே
போக்கொடு வரவுமில்லை புண்ணிய பாவமில்லை
வாக்கொடு மனமுமில்லை மநதிரந் தியானமில்லை
சாக்கிமாத் திரமேயென்று தெளிந்தவன் சநநியாசி 104

அறிவி லறிவா யகண்டிதமா யனநதா னநத மயமாகிச், செறியும பரம சிவந் தனனைத் தன்னுட் கணடு தியானித்துக், கறவை யருந்தப் பால் சுரககுங் கால மேனுங் கடைப்பிடிப் போர், பிறவிக் கடலைக் கடந் தோர்க ளவரே யுலகிற் பெரியோரே. 105

மண்போற் பொறுமை யுடையோரு மதிபோற் சாந்த முடையோரும், புண்போ லுடலைப் புனைநதோரும் புனல்போ லொழுக்கம் பூண்டோருங், கண்போ லிரக்க முற்றோருங் கனல் போற் புசிக்குங் கதியோரும், விண்போ லறிவை யறிநதோரும் பிறவா ரிந்த மேதினிககே. 106

அதிவன்னச்சிரமி யிலக்கணம்

ஊன்றுமூன் றவத்தைக் கபபா லுயாமுத்த னுங யாநத மூன்றவத் தைக்குஞ் சான்றாய் முதலொளி யாய்ப் பிறங்கித், தோன்றுமா தேவ தேவை யெவன்சும்மா வனுப விப்போ, னுன் றவ னவனே மேலா மதிவன்னச் சிரமி யாவான். 107

நிறைந்தமா கடற்போ லுயாநெடு மறைமுடியிற்
சிறந்த போதமா வாக்கிய சிரவணத தாலே
யிறந்த சிந்தையி னற்றனை யீச்சுர னக
வறிந்த வன்சொலு மதிவன்னச் சிரமி யாவான். 108

வருணமாச் சிரம மாகி மலினதே கத்தின் கண்ணே
கருமலி மாயை தன்னாற் கற்பிக்கப் பட்ட தெல்லாம்
பொருவரு போத னமெற் கெப்போது மில்லை யென்றே
யருமறை யானு ணர்ந்தோ னதிவன்னச் சிரமி யாவான். 109

சொன்னத்திற் கடக மாதி சூழுணி தோன்று மாபோ
லென்னிடத் தகில மெல்லாங் கற்பிக்கப் பட்ட தென்றே
பன்னுமா மறையந் தத்தாற் பகுத்தறிந் தனுப வித்திங்
கன்னிய மிலாமை கண்டோ னதிவன்ஞச் சிரமி யாவான். 110

ஆதித்தன் சன்னி தானத் தகிலஞ்சேட் டிக்கு மாபோற்
போதத்தென் சனிதா னத்திற் புவனஞ்சேட் டிக்கு மென்றே
வேதத்தி னந்தத் தாலே மெய்ப்பட வறிந்து ணர்ந்தோ
னுதித்த னிவனே யென்ன வதிவன்ஞச சிரமி யாவான். 111

இப்பியிற் பிராந்தி யாலே யிரசிதந் தோன்று மாபோன்
மெய்ப்படு மென்னி லிந்த வியஞ்சக முதித்த தென்றே
யிப்படி யாவ னேனு மெழினமறை முடிவி னாலே
யற்புத வறிவு ணார்ந்தோ னதிவன்ஞச சிரமி யாவான். 112

மறையர்தம் முடம்பின் கண்ணும் பசுவாதி யுடம்பின் கண்ணு
மறையவ ருடம்பின் கண்ணும வானவ ருடம்பின் கண்ணு
நிறையுமா காயம் போல நிறகுமா தேவன் றானென்
றறிவினு லறிந் துணர்ந்தோ னதிவன்ஞச சிரமி யாவான். 113

பாம்பிதென் றுணர்ந்த போது பழுதையே யில்லை வெய்ய
பாம்பிதன் றெனவு ணார்ந்தாற பழுதையே யாறை போலச்
சோம்புறு குழும்பி யென்னிற் றுகளுறு சீவ னுகுஞ்
சோம்புறக் குடும்பி யென்னிற் றுகளறு பிரம மாவான். 114

மகாவாக்கிய விலக்கணம்

ஆதி திருநான் மறைமுடியி லுறையுந் தத்துவ மசியென்றே
யோதி லதுநீ யானுயென் றுரைகக்கு மும்மைப பதமாகப் [பேன
போத முடையோ யிதன்பொருளை யெவ்வா றெடுத்துப் போதிப்
பேத மகன்ற வுள்ளத்தாற் காணும் பெரிய வாககியமே. 115

கன்னனுன் புளிஞ னென்றே கவலையுற் றழுங்குங் காலைத்
தன்னநீ கிராத னன்று கௌந்திபுத திரனென் றுற்போ
லன்னிய வுடனு னென்றே யயர்ந்துள மழியேன் மைந்த
வன்னிய மென்று கண்ட வறிவுநீ யுணாந்து கொள்ளே. 116

ஒருவ னொருதே யத்திற் பிரம சரியா யுற்றான்
மருவி மற்றோர் நாட்டகத்தின் மகிழ் கிரகி யாயினுன்

பரவி பின்னோர் மண்டலத்திற் பகர்துறவி யாய் நடித்தான்
விரவிய கோலம் போக்கின் வேறில்லை யவ னிவனே. 117

ஓடுமா நதிக டநதோ ரொன்பது பேரை யெண்ணித்
தேடும்பத் தானைக் காணான் றிகைத்துநின் றலறு நிற்ப
நீடிய வொருவ னுலே நீபத்தா னென்ன லோடும
வீடிய துயர மெல்லாம் வியபபினை யடைநதா னன்றே. 118

அன்னிய கருவி யெல்லா நாமல வென்ற றிந்தோன்
பின்னரக் கருவி யெல்லாம் பிரித்தவன் றனை மறபப
மன்னிய சேட நீயே யென்றுமா தவத்தின் வநத
செங்கிலைக் குரவன் சொலலாற் றெளிவது ஞான மாமே. 119

மச்சுககூப் பிட்டு தென்றே மதிப்பவ ருண்டோ வநத
மச்சுளே யொருவ னன்றி மசசுககூப பிடுமோ பேதாய
நச்சிய தேக சேடடை யாவையு நாடிப் பார்க்கி
லச்சுளே நின்ற வான்மா வாலென வாய்நது கொள்ளே. 120

பொன்னை யன்றி பூணில்லை பூணை யன்றிப் பொன்னில்லை
யென்னை யன்றி சிவனில்லை சிவனை யனறி யானிலலை
யின்ன வண்ணை மறிநதோனே யீசன றனையு மறிந்தோனு
மின்ன வண்ண மறியாதா னீசன் றனையு மறியானே. 121

நிறையறி வாயி ருநது நின்மலன் றன்னைத் தேடி
மறைமுத னூலா ராய்நதும் பின்னரு மயங்குந தன்மை
யிறைவனே யெனககு நாககுண் டிலலையோ வெனறு கேட்க
வறைவது நாக்கே யெனன வகநதெளி யானைப போலும. 122

ஆதவன் றன்னைப் பார்த்திட் டகிலத்தைப் பார்தத போது
வாதவ னொளிமே விட்டே யகிலநதோன் றுத வாபோற
சேதனச் சிவத்தை நோக்கிச் செகததினை நோக்குங் காலைச
சேதனச் சிவமமே விட்டுச செகமெலா மறைநது போமே. 123

என்று மிருந்த படியிருக்கு மியல்பே யென்னு மொருவேத
மொன்றே யொழிய விரண்டாமவத் தில்லை யென்னு மொருவே
வென்றிப் பரமு நீயும்வே றில்லை யென்னு மொருவேதம் [தம்
[illegible]ன்று மதுவே நீயானு யென்றே சொலலு மொருவேதம். 124

அனுபவ விலக்கணம்.

வாசலா மெழு மின்றி யுருவரு வுபய மினறிக்
கோசர வகோச ரங்கள் குறிகுண பேத மின்றிப்
பாச சாலங் கடந்து பராபரைக் கப்பா னின்ற
வீசனை யறிநத ஞானிக் கினிப்பிறப் பில்லை யன்றே. 125

சிறையறக் கட லொடுங்குஞ் செறிநதிக் குலங்கள் போலு
மறுகுறு வேடு நீக்க மன்னனைக் கூடல் போலு
மறிவறி யாமை நீங்க வறிவினு ளறிவாய் நின்ற
விறைவனைக் கூடு ஞானிக கினிபபிறப் பில்லை யன்றே 126

அரியணையி லிருந்துலக வரசாட்சி புரிந்தாலு மங்கை யே
ற்றுத, தெருவுதொறுந திரிநதிரநது தின்றாலு மிளம்பருவத்
தெரிவை மாரைப, பிரியாம லிருந்தாலும் பிரிந்து தவம் புரிந
தாலும பேசிறறெல்லாம், விரிசிவன் முத்தனுககிங் குடம்பாடே
யன்றி யொன்றும விரோத மின்றே. 127

ஆயிர மடந்தைய ராகந தோய்ந்துநான்
றாயவ னென்றுமால் சூளுஞ் சாற்றினன்
காயமுங் கரணமுங் கடநத தன்மையா
னீயுமக் நிலையிலே நிறகப் பாலையே. 128

அறுசுவை யடிசில யார வுண்டவன்
வெறும்புப வாசிநா னென விளக்கினான்
சிறுநுதற் பேதையைத் தினமுஞ் சேர்ந்தவன்
றுறவிநா னெனவுளங் துலஙகக காட்டினான். 129

சிவயோக விலக்கணம்.

காமமா திகளை நீத்துக் காணவா தனை கடந்து
நாமது வெனுஞ்சம் பந்த ஞானமே ஞான மாகி
யோமொழிப் பொருளைத் தேறி யுணர்வுண ராமை போக்கி
யாமைபோ லைந் தடக்கி நிற்பதே யமல யோகம். 130

அறுவகைச் சமயத் தோர்க்கு மதீதமா யகள மாகி
மறுவறு பொருளா யொன்றாய் மனபதை தொறு நிறைந்து
குறைவறு பிரம நாமே யென்றுகோ சங்க ணீங்கி
யறிவுரு வாகி நிற்ற லழகிய யோக மாமே. 131

உடறொரு முயிரு மாகி யுயிர்தொறு முணர்வு மாகிச்
சடமச டங்க டோறுஞ் சாக்கியு மாகி நின்ற
வடல்புனை சிவனார் நம்மை யன்றிவே றில்லை யென்றே
யுடைகுட விசும்பு போலொன் றுதலே யோக மாமே 133

ஆகையாற் கருத் தடங்கி யசைவற லியோக மாகு
நாகமார் முழைஞ்சு பூங்கா நதிபாழுங் கோயி லாதி
யோகதா னங்கள் புக்கி யுயாசிவோ கம்பா வித்துத்
தேகமா திகளு னல்ல வென்றுசித திரம்போ னிற்பாய். 134

இம்முறை சிவயோ கத்தி லிருப்பவா சீவன் முத்தர்
நனமையி னுதந் தோன்று நவவிதங் கடந்து போனாற்
செம்மைய சுவானு பூதி செனித்திடு மனாநதா னாநத
விம்பிதந தோய்ந்துந தோயா திருப்பர்கள் விதேக முத்தர்.

காசியி லிறக்க முத்தி கமலையிற் பிறக்க முத்தி
தேசுறு தில்லை மன்றுட் டெரிசிக்க முத்தி யென்ப
ராசையை யிறக்க முத்தி யாருயிர் பிறக்க முத்தி
யீசனைக் காண முத்தி யெதுவரி தான முத்தி. 185

சுவானுபவ விலக்கணம்.

பிண்டமா முடனு னல்லேன் பிராணவா யுவுநா னல்லே
கண்டவைம் பொறியு மல்லேன் கரணமோர் நான்கு மல்லேன்
பண்டைய வறிவ னுனென் றுன்னருள் கொண்டு பார்க்கி
லெண்டிசை கீழ்மே லெங்கு மேகனு யிருக்கின் றேனே. 136

கானலை நீரென் றுன்னிக் காதலித் திடுவார் போல
வூனுட னுனென் றுன்னி யுணாவினைப் பிரிநதி ருந்தேன்
கானலை நீரன் றென்று கைவிடு வார்கள் போல
வூனுட னுனன் றென்றே யுணாவொடு முறங்கி னேனே. 137

ஊனுடல் பொறி பிராண னுறுகர ணங்க ளென்னுங்
கானகங் கடநதஞ் ஞானக் காரிருட் பரப்பு நீங்கித்
தானெனுஞ் சீறார் நீத்துத் தற்பரைப் பொழிலி னின்று
மோனியாய் ஞானு னந்த முத்திமா நகரங் கண்டேன். 138

குரு தோத்திரம்

ஒன்றென்றும் பலவென்று முபயமென்று முருவென்று மருவென்று முறைவதென்று, நன்றென்றுந் தீதென்று நானே யென்று ஞானமென்று ஞேயமென்று ஞாதாவென்று, மன்றென்று மாமென்றுஞ் சமயப்பேய்க ளறைகின்ற பிணக்குவழி யனைத்து நீத்துக், குன்றலிலா வானந்தக் குரவ னின்னைக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட் டேனே. 139

செறிவாகு மலமற்று மாயையற்றுத் திரிவிதமாங் கன்ம மலத் திரளுமறறுப், பிறிவாகுங் குணமற்றுக் குறியுமற்றுப் பேதாபே தங்களற்றுப் பேச்சுமற்று, வறியாமை யறிவற்று வனந்தகோடி யாதவாபோ லெழுகின்ற பரையுமற்றுக், குறியாத வானந்தக் குரவநின்னைக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட் டேனே. 140

பொய்யாத புனன்மூழ்கிச் சாந்த மென்னும் பொடிபூசிக் கருணைமணி புனைந்தெஞ் ஞான்று, நையாத வுளமெல்லா நைய நாவா னவிலாத மாமனுவை நவின்று மேலீ, ரையாறு மாறாறுங் கடந்து நின்ற வாநந்தத் தேசிகநின் னடிப்போதுக்கே, கொய்யாத மலர்கொண்டங் கருச்சித தேத்திக் கும்பிட்டே னென் பிறவி பின்பிட் டேனே. 141

ஆசிலன்ன மயகோசந் தாண்டி யப்பா லறியாத பிராணமய கோசந் தாண்டி, மாசின்மனோ மயகோசந் தாண்டி யென்று மாறாவிஞ் ஞானமய கோசந் தாண்டி, நாசமுறு மானந்த கோசந் தாண்டி ஞானவடி வாய்நின்ற குரவ நின்னைக், கோசமெலா மற்றசிவ கோசியாகிக் கும்பிட்டே னென்பிறவி பின்பிட்டேனே.

தத்துவங்க ளாறாறும் பின்னிட் டப்பாற் றத்துவா தீதமாந் தன்னைக் கண்டு, பற்றொன்று மில்லாத பரையைக் கண்டு பரிந்து பசிந் துள்ளுருகி யதிலொடுங்கி, வெற்றவெறு மானந்த வுருவங் கண்டு விழையாமல் விழைந்தப்பால் வெளியைக் கண்டு, குற்றமெலா மறநீந்தங் கறிவாய் நின்று கும்பிட்டே னென்பிறவி பின் பிட்டேனே. 143

பாசத்தாற் பாசி யாகிப் பலபல பிறப்பிற் சென்று
பாசத்தாற் பிறந் திறந்து பலபல போகந் துய்த்த

பாசத்தைத் தாளாற் போக்கிப் பதித்துவம் பதித்த நாதன்
பாசத்தை வினையுந் தோறும் பசுத்துவங் கழலு மன்றே. 144

ஒன்றென்பா ரொன்றே யென்க வோரிரண் டென்பா ரென்க
நன்றென்பார் நன்றே யென்க நவையென்பார் நவையே யென்க
வின்றென்பா ரென்க வன்றி யுண்டென்பா ருண்டே யென்க
வன்றிதா மென்று முதற்றி யடியனேற் களித்தா னைசான். 145

தன்னு ளுலகு முலகதனிற் றானு மாகிச் சகசமாய்ப
பின்னே யபின்ன யெனுஞ்சத்தி பிரியா திருக்கும் பிரமமா
யுன்னு முணர்வுக் குணர்வாகி யுருவா யருவா யுபயமுமா
யென்னு ளிருந்த பரசிவத்தை நின்றுற் கண்டே னிறைபோனே.

மண்ணை விழுங்கிப் புனல்கனலை விழுங்கி வாயு தனைவிழு
ங்கி, விண்ணை விழுஙகி வெண்மதியை விழுங்கி வெய்யோன் றனை
விழுங்கி, மொண்ணை யியமா னையும் விழுங்கி முற்றும விழுங்
கிப் பற்பலவா, மெண்ணை விழுங்கி யிருநததனை நின்றுற்கண்டே
னிறை யோனே. 147

விம்பித விலக்கணம்

அனாதி கேவலத்தினி லழுந்து மேற்குநீ
மனாதிய கருவியான் மலத்தை நீககியே
சனாதவின் பநதனை த தநத தேசக
கனாவினு முன்னையே கருதற் பாலனே 148

சித்தாந்த தரிசனம்-பதியியல்

அற்றாகட் கண்ணிதா யல்லாக்குச சேய்மையாய்ப்
பற்றற் றிருககும் பதி. 1

எங்கு மிருப்பானை யேகமிரண் டென்றும
லெங்குமாய் நீகண் டிரு. 2

மோகமுறு பெத்தத்துண் மூடர்க் கிரண்டாகு
மேகமே முததருக கீசன். 3

குருவுருவங் கொண்டிக குவலயத்துட் டோன்றிப்
பருவரலை நீக்கும பரன். 4

சிதம்பரமா யெங்குஞ் செறியினுமென் னுளி
மதமடங்கிக் காணு வகை. 5

பசுவியல்.

சனகாதிக் கீசன் றனித்திருத்தல் கண்டு
மனைவாழ்க்கை யைத்துறவா மல். 6

புண்ணியத்தான் மேலேறும் பாவத்தாற் கீழிறங்கும்
புண்ணியபா வத்தாற் புவி 7

பாசவியல்

அன்னியத்தைக் காட்டி யனன்னியத்தைத் தான்மறைக்கு
மென்னே மலத்தி னியல். 8

பற்றற்றூர் கண்ணுும பருவரலைச செய்வித்தல்
குற்றமிகு மாயா குணம் 9

நூலில்லை கேள்வியில்லை நுண்ணறிவு மில்லையால்
மாலகலா மாயா மகற்கு. 10

ஞானமிலைப் பத்தியிலை நல்லார்கண் ணட்புமிலை
மானமிலை மாயா மகற்கு 11

சாக்கிரமுஞ் சொப்பனமுந தணவாச சுழுத்தியையும்
போக்கிற் றுரியம் பொருள். 12

ஆன்மீகம் பௌதிக மறையுநதெய் வீகமிவை
யான்மாவுக கிலலை யறி 13

முன்னைவினை பின்னைவினை மூவா நிகழும்வினை
யுன்னை யணுகாமை யோா. 14

மன்னவராற் கள்வரான் மாவா லுறுபிணியா
லின்னலுற லான்மீக மெண். 15

தாயகட்டிற் றங்க றரணிதனில் வந்தழித
லாயிற்றெய் வீகமென லாம். 16

வானி லிடியான் மழையான்மற் றச்சடத்தா
லூனமுறல பௌதிகமா யோர். 17

சஞ்சிதமுன் கட்டுவினை சற்குருநோக் காற்சரியும்
பஞ்சுமலை பட்டநெருப் பாம. 18

உள்ளப் பொசிப்பெல்லா முண்டொழிப்ப தன்றியிதைத்
தள்ளப் படாதெவர்க்குந் தான். 19

வறுத்தவிதை யுண்பதன்றி மாநிலத்தைக் கீன்று
செறித்து விதைப்பாரோ தெளி. 20

கூத்தியைப்போற் பாவங் குலக்கொடிபோற் புண்ணியங்க
ணீத்தார்க் கிரண்டு நெருப்பு. 21

நாடுவினை யொப்புவந்த நாதாந்த யோகருக்கிங்
கோடுந் திரவியமு மொன்று. 22

மாமாயை யீசனருள் மாறு தெதிரந்தன்றிப்
போமாறு முண்டோ புகல். 23

கோடிசிவ புண்ணியத்தாற் குவியு மனம்பின்னர்
நாடுஞ் சிவனை நனி. 24

பாசமோசன வியல்.

ஆமைபோற் சிந்தித் தருளுவ மாக்குமாற்
காமாதி நீத்தவரைக் காண். 25

கோழிபோற் றீண்டியுயிர்க் குற்ற மறுத்தாளு
மாழிவிட முண்ட வரன். 26

திருமொழியாற் கன்மமலஞ் சிந்துந் தியானத்தாற்
பெருமாயை போயொழியும் பின். 27

சைதன்னிய வுருநா னென்றுதம நீங்கல்
சைதன் னியனுருவந் தான். 28

எனைவிடவே றில்லை யியானே பரப்பிரம
மெனவுணர்த றற்றெரிச னம். 29

சிவனுக்குச் சாக்கி சிவமென் றுணர்தலே
சிவனுக்குச் சுத்தியெனத் தேர். 30

எவ்வுயிர்க்கும் போத மிறையென் றறிதலே
செவ்வே சிவதரிச னம். 31

அந்தச் சிவநம்மை யன்றியிலை யென்றோத
லுந்துஞ் சிவயோக மோர். 32

உள்ள மொடுங்கி யுரையொடுங்கி யானந்த
வெள்ளத் தழுந்திநிற்கு மேல். 33

விமரிச ஞானத்தால் வெறுப்புவிருப் பற்றுச்
சமரசத்தை யெய்துந் தனி. 34

அறிவி லறிவை யறியா தறிந்து
குறியிறந்து நிற்குங் குலம். 35

ஐந்தவத்தை சென்றுறு மாவரண மற்றதவர்
சிந்தை சிவன்பாலே தெளி. 36

ஆமயத்தை நீங்கி நிராமயத்தை யாதரிக்கி
னுமயம்போ நீயே யவன். 37

சீவனத்தாற் சீவனெனல் சீவமிறந் தாலிந்தச்
சீவனே யந்தச் சிவம். 38

தன்னைக் கண்டாங்குத் தலைவனையு முன்னுது
முன்னைப் பிரமமெனு மோர். 39

வனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபினர்
நானே பிரமமென நாடு. 40

சொப்பனமுஞ் சாக்கிரமுந் தொலையொத்த காலத்துச்
சுப்பிரம மென்றுநீ சொல். 41

ஆதிமுத்தன் சீவ னநாதிமுத்த னீசனென
வேதமுறை செய்யும் விரித்து 42

சித்திரத்தை யொத்துச் சிவோகமெனச் சிந்தித்தா
லத்தனுரு நீயாவை யால். 43

இங்நிலையி னிற்பரிதே யெல்லாஞ் சிவமென்னு
மங்நிலையி னிற்பா யற. 44

சிவயோக வியல்.

அவயோகத் தன்மை யகற்றியலை வில்லாச்
சிவயோகத் தன்மை தெரிப்பாம். 45

கதிபாங்கர்ப் பன்னகத்தி னண்ணிப் பத்மாசனத்தில்
வதியாக் குருவை வணங்கி. 46

நீர்க்குமிழி மின்னற்கு முண்டுநிலை யில்லை
யாக்கைக் கென்றெண்ணி யறிந்து. 47

முன்னோ னுரைத்தமொழி நிறுவிப் பற்பலவாம்
பின்னமொழி யெல்லாம் பிரித்து. 48

சிவத்தோ மசியுண்ணி னைந்துசிவ யோகநிட்டை
சவுக்கியதா னத்தேறித் தான். 49

பதைத்தெழு முள்ளப் பதைப்பைப் பறித்து
மதத்தை யொடுக்கி மறித்து. 50

தத்துவத்தைப் பின்னிட்டுச் சகசமல கேவலத்தை
யத்தனருள் கொண்டாங் ககன்று. 51

அமுசோகம் பாவனையை யண்ணி யறிவாகிச்
சமுசயத்தீப் பாவனையைத் தள்ளி 52

சீவன்வே றாண்ட சிவன்வேறென் றெண்ணுமயற
பாவனைக்கண் ணுள்ளில் படா. 53

நதியோடிப் புக்கழுந்து நாட்டம்போ னின்ற
பதியிற் கலந்து பழகி 54

அதுவிதுவென் றெண்ணா தறிவோ டறிவாய்ப்
பதிதல் சிவயோகம் பார். 55

ஒன்றென் றிரண்டென்று முன்னா துறங்கியே
யொன்றாத லேசிவயோ கம். 56

சாத்திரத்தை யுன்னிற் சமாதி குலையுமெனி
னேத்திரத்தும் பாரே னிலதது. 57

குறியாக் குறியைக் குறித்துணரப் போகுங்
குறியே பிறவிக் குறி. 58

அம்புவிழு மந்நேர மாக்கறக்குஞ் சில்காலஞ்
சம்புவின் யோகத்திற் றரி. 59

பழிமுனையைக் காட்டுகின்ற பல்லுலகை நோக்காச்
சுழிமுனையை நோக்கித் தொடும். 60

அலையற்ற சாகரமோ வவிழ்ந்தகயிற் றாசலோ
வலைவற்ற யோகி யகம். 61

பொன்னாக்கை கிட்டியுமென் யோகப் புணர்ப்பிலையே
லென்னாப் பிறந்து மிவண். 62

வேடப் பொலிவிருந்தென் வேசியர்போ ளூடோறு
நீடுசிவ யோகமி னீசர். 63

துறந்துஞ் சிவயோகந் துன்னாத மூடர்
பிறந்தும் பிறவா தவர். 64

தண்டிகையுங் கொம்புந் தவசிக் கிவையடா
வம்பர்க்கு வைத்த வழி. 65

உண்டி புசிக்கவோ யோக முனூற்றவோ
வண்டர்பிரான் றந்தனுக் கை. 66

வைழைத் துறந்தா னுலகைத் துறப்பையன்றி
யூழிருக்க நீதுறவி யோ. 67

அணுவுக் கணுவா யகண்டமாய் நின்ற
பணிசெய்ய நீயே பணி. 68

உ ப தே ச மா லை.

சனகர் சனற்குமர சனந்தரர் சனாதரர்
முனிவரர்க்கு ஞான மொழிந்த-முனிவனே
யென்போல வந்திங்கே யென்னை யெனக்குமறை
பொன்போலத் தநதார் பொருள். 1

மூல வுபதேசம்.

அப்பாவுன் பக்குவத்துக் கேடா யனேகவித
வொப்பா னுனககுரைத்தே னுண்மையினை-யெப்பாலுஞ்
சங்கையற்ற சத்தியத்தை சாற்றினுனை யன்றியில்லை
சங்கையறப் பாரீ தனித்து. 2

தீக்கையினா லுன்னைச் சிவமாக்கி னேமதன்றி
யாக்கைச் சிவவடிவ மாக்கினோ-நோக்கியே
நானேநீ யென்று நவின்றுமுப தேசித்தோ
மேனோ மயக்க மெழும். 3

தசகாரிய வுபதேசம்.

பூதமுத னாதமீ றாகப் பொலிகின்ற
வீதெல்லா நாமல்ல வென்றறியும்-போதமே
தத்துவரூ பம்மிதனைச் சங்கையற்ற மாணவக
புத்தியிடை நன்றாய்ப் புதை. 4

ஆத்ம தரிசனம்.

என்று பிறந்தேனா னென்று வளர்ந்தேனா
னென்று துயரும் றிறந்தேனா-னென்று
மழியாத சித்துருநா னென்றே மகிழ்தல்
நழுவாத நின்றரிசனம். 5

சிவ ரூபம்.

எங்குஞ் சிவமயமா யெங்குஞ் சுகவடிவா
யெங்குஞ் சிவலோகத் தெல்லையா-யெங்குஞ்
சிவனையே கண்டு தெரிசித்தன் மாணா
சிவரூப மென்றே தெளி. 6

சிவ தரிசனம்.

ஆக்க லளித்த லழித்தன் மறைத்தலரு
ளாக்கலிவை யெவ்விடத்து நோக்கியே-நீக்கமறப்
புல்லியுய ரானந்தப் பொற்பின் மிசையேற
னல்லசிவ தரிசனம். 7

சிவ போகம்.

நானே சிவன்சிவனே நானென்று நாடிவெறாந
தானாகி நின்றநிலை தானன்றோ-வானாப்
பவசலதி நீந்திவரும் பண்புடைய் மாணா
சிவலோக மென்றே தெளி. 8

இரகசிய வுபதேசம்

மாணவகா மெய்ஞ்ஞான வாழ்வையுனக் கிக்கணமே
பூண வுரைப்பனிது பொய்யல்ல-காணொழியாக்
கண்ணேநீ பாயிருளுங் காய்கதிரு நீயல்ல
வுண்ணினைந்து பாரிதனை யுற்று. 9

கண்ணே யிருளுண்டே கங்குல் பகலுண்டே
விண்ணவருங் காணாத வேதியனே - மண்ணாத
வுச்சிக் கதிருமொளி யொழியாக் கண்ணும்போ
னிச்சயித்துப் பாரிதனை நீ. 10

விளக்கில்லை பல்பொருளு மில்லை விழியில்லை
துளக்கிருளு மில்லையெனச் சொல்ல-வுளக்கண்ணா

துள்ளபடி யறிந்தா லூன்பிறவி யில்லையுனக்
குள்ளபடி யீதென் றுணர். 11

உன்னை யொருவ னுயர்சாமி யென்றுரைத்தா
லென்ன மகிழ்ச்சியங்கே யெய்தினுய்-பின்னொருவன்
பாவி பசுவென்றாற் பதைபதைப்பர் யாகையினாற்
சீவனல்ல நீயே சிவம். 12

நேய வுபதேசம்.

ஆறுகடல் கண்டுவரா வாதரித்த தும்மொருவன்
வீறுபுலி கண்டுவந்த வீறுங்-கூறுயிடி
துப்புக் கடலாடி யோடிவந்த தும்மொக்குஞ்
செப்புசிவங் கண்டுதிரும் பல். 13

தன்னைச் சிவத்திற் பறிகொடுத்த தற்கேடர்
பின்னைத் தமைத்தேடிப் பேதுற்ற-தென்ன
பிழைபளித மால்வரையிற் பேரழலை யிட்டே
யழிவரைபின் றேடியடுக் கல். 14

பஞ்சாக்கர வுபதேசம்.

அஞ்செழுத்தின் றன்மை யறையக்கேண் மாணவக
பிஞ்செழுத்தா மீரிரண்டும் பின்றள்ளித்-துஞ்சாத
வோரெழுத்தே நின்னுருவ மொண்பொருளே நீயாமென்
றோரிடத்தி னில்லையுனக் கூழ். 15

நகாரக் கருவியெலா நாமலவென் றெண்ணி
மகார மலங்கடந்து மாழ்கி-யகாரமே
தானென் றுணர்ந்தப்பாற் றண்ணருளைக் கண்டுசிவ
மோனமதி லேயொடுங்கன் முத்தி. 16

ஷடாந்த வுபதேசம்

சித்தாநதம் வேதாந்தஞ் செப்புதத்து வாந்தமிசை
புத்த கலாந்தமொடு போதாந்தஞ்-சுத்தமா
நாதாந்த மென்றிவைக ளாறுநவை யென்றே.
மீதானந் தேடி விடு. 17

அதீத வுபதேசம்.

நித்திரையைக் காண நினைத்துட் கலைமனுக்
தத்துவசா லங்களெல்லாந் தாண்டியே-சுத்த

வருள்வழியாற் சென்றங் கனுபவத்தைக் கண்டு
தரையவர்க்குச் சாற்றுவினை தல். 18

பூரண வுபதேசம்.

அடுத்துவரும் பாசத் தணுத்தன்மை யாகிக்
குடத்தில்வருந் தீபமெனக் கொண்டாய்-விடுத்துநீ
பொன்றரிய மெய்ஞ்ஞான பூரணமா யேயின்னைக்
குன்றிலிட்ட தீபமெனக் கொள். 19

பழமொழி வுபதேசம்.

அத்தைத்தின் றங்கே கிடப்பார்க்கு மாணவக
வெத்தைத்தின் றெங்கே கிடைந்தாலென்-சுத்த
வெறுவெளியிற் சென்று விளையாடு கின்றார்க்
கறுதியிட லாகா தறி. 20

முப்பாழும் பாழென் றறைந்தார் திருமூல
ரப்பாலும் பாழென் றறைநதார்-சடகோப
ரறிவி லறிவி லறிவி லறிவி
லறிவி லறிவென் றறி. 21

சங்கார வுபதேசம்.

ஈசனுனக் கென்ஞான்று மிதசத் துருவென்னும்
வாசகத்தைச் சொல்லக்கேண் மாணவக-வீசன்றான்
தத்துவத்தி லாக்கித் தவத்தில் வளர்த்துன்னை
முத்தியினிற் சங்கரிப்பான் முன். 22

மகாவாக்கிய வுபதேசம்.

சிவனாய் நின்னைநீ சிந்திக்கின் மாணவக
வேவில் பிறப்பிறப்பு மோவாது-வீவிற்
றுருபதைக்கு மாளாத் துகில்போலுன் போத
மிரிவதில்லை யெக்காலு மெண். 23

சிவமல்ல ஈாமென்றுஞ் சீவனு மென்றும்
விவகாரம் வந்தவிட மெல்லாந்-துவமகலச்
சாம மறைபுகலுஞ் சத்தியமா வாக்கியத்தைத்
தோமறவுட் கொண்டு துணி. 24

உண்மை யுபதேசம்.

ஆதிமறை யாகமங்க ளெல்லா மளவிட்டே
யோதியுணர்ந் தெல்லா முரைத்தாலும்-வேதை
யெழுநான்கு கோடி யிழிநிரைய மெல்லாம்
விழுவர்சிவ னுகா விடின். 25

கொல்லா விரதம்.

கொல்லா விரத குலமே குலமென்று
நல்லார்க ளெல்லா நவின்றிருக்க-கொல்வாற்
றெரிசித்தா லும்பாவந் தீயன்முக நோக்கிப்
பரிசித்தா லுமபாவம் பார. 26

ஆடுபன்றி கோழி யருநதுவோர் கட்கெல்லாம்
வீடில்லை யென்றுரைக்கும் வேதங்க-ளுடுமவர்க்
கிம்மையிலுந துன்ப மறுமையிலு மேழ்நிரைய
நன்மையிலை யோரிடத்து நாடு. 27

அநித்திய தரிசனம்.

இன்றைக்கோ நாளைக்கோ வின்னமன்றை நாழிகைக்கோ
வென்றைக்கோ வாவியிழப் பென்று-சென்றிறைஞ்சி
யாசா ரியனுக் கனுகூல சித்தனுய்ப
பாசாதி யைக்கழற்றப பார். 28

கோடைதனி லாற்றிற் குடியேறி வாழுநர்கள்
வாடைமழைக் கேங்கியழும் வாறெக்கும்-நீடுபக
லுள்ளபோ தெல்லா முறுதிநெறி காணுது
கள்ளநமற் கண்டுகலங் கல். 29

மாதாபி தாநாத்தி மற்றெக் கலுநாத்தி
யாதார வைப்பு மரண்மனையுந்-தீதான
நாத்தியிவை மெய்யென்று நம்பாதே யென்றறைந்த
மாத்திரத்தே வீடுற்றான் மன். 30

அடங்கத் துறத்தல்.

தாயரையுந் தந்தையையுந் தற்சார்ந்த கேளிரையு
மாயுமயல் காட்டு மனைவியையுஞ்-சீயென்று
சொற்பனம்போற் கண்டெட்டாத் தூரப்போ யோகநிலை
நிற்பவனை ஞானியென நேர். 31

ஆணி முதலெறும்பீ றாயபிறப் பெல்லாமு
மீன முறக்கடந்திட் டேறியே-யூனமிலா
மக்களா வந்துந் துறவா மனிதர்தமைத்
தெக்கணு மூர்த்திசிரிக் கும். 32

மலைமகளை விட்டுடைய மைந்தர்தமை யும்விட்
டிலகுவெள்ளி மால்வரையும் விட்டே-யுலகறியக்
கல்லாலின் கீழிருத்தல் கண்டுந் துறவாரைக்
கொல்வ னியமன் குறித்து. 33

அவா வறுத்தல்.

மண்ணாசை பொன்னாசை மாதரா ராசையுயர்
விண்ணாசை யாவும வெறுத ரப்பா-லெண்ணும
துள்ளபடி யானந்த யோகத நின் மூழ்கியுடல்
விள்ளளவு நின்று விடு. 34

அடக்க முடைமை.

அடக்கிப் புலனைந்து மாமையைப் போனு
மொடுக்கி யுறவோரைக் கண்டா-னடுக்குற்றுக்
கண்ணப்பர் போலக் கரையிறந்த பேரன்பால்
விண்ணப்பஞ் செய்ய விரை. 35

கல்வி யடக்கம்

கழுதைக்குங் கற்றவர்க்குங் கட்டுரையொப் பொன்றே
கழுதை பிறர்க்குதவுங் கற்பூர-முழுநூலாய்ந்
தோதுவார் தாம்பிறருக் கோதியுணர்ந் துள்ளபடி
சாதியா ராதலினாற் றான். 36

இத்தன்மை யுடையோ ரிவர்களெனல்.

சாந்த முடையோன் றவசி யவாவற்றோன்
வாய்ந்த துறவி மனமாண்டோ-னாய்ந்துணர்ந்த
யோகிபரி பூரணத்தை யுற்றுணாந்தோ னலலசிவ
போகியெனச் சொல்லும் பொது 37

யோகைப் பழித்தல்.

தத்துவக்கற் றற்றுவெறுந் தானேதா னாய்நின்ற
முத்தருக்கி யோகமேன் மோனமேன்-வெற்றியேன்

சுத்தசுக நித்தியமாய்ச் சும்மா விருப்பதுவே
பற்றற்ற முத்தியெனப் பார். 38

பால்விரதி பூசையாய்ப் பழவிரதி பைங்கிளியாய்க்
கால்விரதி பாம்பாதல் கடடுரையே-நோலவிரத
மாண்டவிட முத்தியென்றான் மாணு விரதமெலாங்
கூண்டோடே வெட்டிக் குமை. 39

சாந்தமுடைமை.

வைதிடினுங் கொய்திடினும வாழ்ததிடினு மாயமெலாஞ்
செய்திடினு மன்னர் செறுத்திடினுந-தெய்வநிலைப
பூத மயக்கிடினும புரந்தரன்போர செய்திடினு
மேதுமயங் கான்ஞானி யெண். 40

சிவயோக மான்மியம்.

எண்ணுஞ் சிவயோக மான்மியததை யென்சொல்கேன்
மண்ணுலகும விண்ணுலகும் வநதிறைஞசி-யண்ணுவென்
றோலமிடு நீசிவமா யோரிமைபபு நிறபையெனிற்
சாலனுங்கை கூபபிநிற்பன் காண் 41

இதோபதேசம்.

சத்தியமு நோன்புந தவமு மினஞ்சொலனு
முத்தமருக் குள்ளகுண மொன்றின்றி-மததிமராய்
மைதுனமுஞ் சோறுமாய் மாயுமள வுமபுசிககுங்
கைதவாககு முண்டோ கதி. 42

கல்லா லமாந்தாரைக கண்மூன் றுடையாரைச்
சொல்லாமற் சொலலவநத தூயாரைப-பல்காலுஞ
சிந்தி சிவோகஞ் சிவோகஞ சிவோகமென
வந்தி பிறப்பறு மாணு 43

பூரண நிட்டை

அண்டங்கா லங்கி யுறலவனி யைநதினையும்
பண்டையவா காயம்போற் பாவித்துக்-கொண்டன்
மறையாக் கதிர்போலுன் வாளொளியை நோக்கி
நிறைவாய்க் குறையாதே நில் 44

எல்லாஞ் சிவமென்னு மெண்ண முனக்குண்டே
லெல்லா நலனுமுனைக் கெய்துமே-யெல்லாஞ்
சிவமன் றெனுமுணர்வு சிந்தையிடை யுண்டேற்
பவம்வந் துனைவிழுங்கும் பார். 45

அதீத நிட்டை.

எல்லா மிறநதவிட மேகாநத நிட்டையென
வெல்லா மறையு மியம்புமா-லெல்லா
மிறந்த விடத்திருந்த வென்னையா னேகண்
டிறைஞ்சினே னேத்தினே னே. 46

மலின வாதனை

அறிவே திருமேனி யறிவே கரணங்க
ளறிவே யிடமபோக மாமன்-றறிவாளன
ருட்டா மரைகண்ட தததுவத்தோரக் கென்றுமறை
நாட்டு முபநிடத நாடு. 47

சிவஞானப்பிரகாச வெண்பா.

அடியார் வணக்கம்

உன்னைபபோ லேயென்னைப பாவிக்க வேண்டுமென்று
சொன்னதிருப் பாட்டாற் றுணியாதார்-மென்மே
லிடம்பட்ட வேழுலகி லுள்ளநூற் கற்றுங்
கடன்பட்டும் பட்டினிபோற் காண். 48

பரிபாகி யிலக்கணம்

தாமடங்கக் கலலாச சவலா தனிதவொருவா
தாமடங்கா ரென்பதற்கோா சாக்கிகே-ஞமடங்கா
தந்தோ தகர்தின்னி யாத்தினியை நோககியிகழ்ந
தந்தோ நீ பாவியென லாம் 49

துவிதசைவவினைமறுத்தல்.

ஓசை யொலியெல்லா மானாய்நீ யென்றபினர்ப
பேச விரண்டுண்டோ பேய்சசைவா-வாசையெல்லா
மற்றவிட முததி நிலையோ வஃதெல்லா
முற்றவிட முத்திநிலை யோ. 50

மங்கையர் மயக்கறல்.

மூத்திர நதி ஞானையப் பட்டமுடை யோனிக்காய்க்
காத்திரத்தை விட்டார் கணக்கில்லை-சாத்திரத்தால்
வானைக்கா றீரை மண்ணைப் பிரித்துசிவ
ஞானக்கா லாசை யறும். 51

ஞான பூசை.

ஆலயமே காய மறிவே சிவலிங்க
மாலயனுங் காணாத வள்ளலுக்கு-சீலமுறு
மன்பே யபிடேக மன்பேநல் லர்ச்சனையு
மன்பேநை வேத்தியமு மாம். 52

பெண்ணாடை யாபரணம் பெய்தயிலந் தாம்பூல
முண்ணலணை சந்தனத்தோ டோரெட்டும்-விண்ணவர்க்கா
யாகாத நஞ்சுண்ட வண்ணலடி யார்தமக்கிங்
காகாது சொன்னோ மறி. 53

தீர்த்தம் பிரசாதம் திருநீறுஞ் சக்கரமுஞ்
சாற்றுமிறை கடபிறந்த தாழ்வடமும்-போற்றுவ
குருலிங்க சங்கமமுங் கொள்குறிக ளெட்டாங்
கருவகலக் கட்டுரைத்தேங் காண். 54

பாடப் படிக்க வெழுதப் பயன்சொல்லக்
கோடாமல் வந்துங் குணமில்லை-சீடாகேள்
சித்திரதீ பம்போலச் சிந்தை தனைநிறுத்திச்
செத்தசவம் போலே திரி. 55

சதா நிட்டை.

பாலோடு சேர்ந்தநீர் பாலாகு மாங்கதுபோல்
வாலறிவ னைச்சேர்ந்த மன்னுயிர்கள்-வாலறிவன்
றானாகி நிற்பதல்லாற் றண்டாத வைம்பாச
னூனாகி நில்லா னுவந்து. 56

அரசன் மகனரச னாகிநின்றாற் போலப்
பரமசிவ னிற்றோன்றும் பல்லுயிரும்-பரம
சிவனாகி நிற்பதலாற் சீவனாய் நில்லா
சிவனானை யுள்ளே தெளி. 57

அருளாசிரிய னருமை யுரைத்தல்.

ஆசானே நீனானென் றங்கைத் தலைவைத்தான்
பாசா திகளைந்தும் பாறித்தே-யாசானை
யுள்ளபடி நோக்கி யுறுபூசை செய்வதல்லாற
கள்ளனிடத் துண்டோ கைம்மாறு. 58

நீயேநா னென்று நிலையளித்த தேசிகனைத
தூய மலரெடுத்துத் தூவாதார்-பேய்வாழுங்
காட்டிற் கனிதுய்க்குங் கருங்குரங்காய்ச் சென்னாயாய்
வேட்டுவனாய்ச் சென்மிப்பார் மேல். 59

உள்ள மலமகற்றி யொண்பொருளைக் காட்டிவைத்த
வள்ளலடி யெஞ்ஞான்றும வாழ்ததாதார்-கற்ற
நரையானாய் ஞெண்டாகி ஞாளியாய்ப பொல்லா
மரநாயாய்ச் சென்மிப்பார் மாண்டு 60

வேதமுடி வைக்காட்டும் வெற்றவெறுந தேசிகனைப்
போதமலர் கொண்டடியைப் போற்றாதார்-பாதமின்றி
யங்கை விரலின்றி யாறாத நோயராய்ப்
பங்குகுரு டாவார் பரிந்து. 61

ஆகந் திருக்கோயி லாசா னதிற்றெய்வனா
சோகம் புகைக்களியே சூழ்சுடராம்-போகங்க
ளெல்லாநை வேத்தியங்க ளிவ்வண்ண நாடோறுங்
கல்லாருஞ் செய்யக் கடன். 62

குருவே திருமாலாங் கோகனகத தானுங்
குருவே யுரையிறந்த கோவாங்-குருவேயிங்
கெல்லாமா யல்லவுமா யெங்கு நிறைவானும்
வல்லாள னாகு மதி. 63

கறுத்த விரும்பைக் கனகமய மாக்குதல்போற்
சிறுத்தநமைப் பேருருவாய்ச செய்தாரை-வறுத்த
விதைபோல் வரும்பிறபபை வேரறுத்த வேதியரைப்
புதைமனத்து ளெப்போதும் போல். 64

உண்மை.

காட்டமனல் சோநதாற் கனலாவ தன்றிமுனங்
காட்டபுத்தி சோவதுவே கன்மமா-நாட்ட
மதுவாவே நிற்பதல்லா லாங்கிரண்டென் றுன்னிற்
பொதுவாவை போகாப் புவி. 65

உள்ளந திருககோயி லூனுடலே சுற்றுமதிள்
வள்ளலுககு வாயே மணிசசிகரந-தெள்ளித்
தெளிநதவர்க்குச சீவன் றிருமேனி தீப
மளந்தறியு மைம்புலனே யாம 66

ஆகாய மெங்கு மகண்டமாய் நின்றாற்போ
னீகாய மினறியெங்கு நிற்பாயேல-மாகாயத்
துள்ளொளியா மீச னுனைப்பிரியா தேநின்ற
கள்ளந தெரியுமங்கே காண். 67

பதிமாக்க நிட்டையன்றிப பசுமாக்க நிட்டை
விதிகால நீசெயினும் வீணும-பதிமார்க்கந
தானுமெதி ருங்கழனற சமாதியிலே தாக்கறறு
நீநின்றாற் போது நிமிடம. 68

குடும்பத்தை யென்னுட குலைப்பேனோ பொல்லா
விடுமையினை யெஞ்ஞான்றீர் வேனோ-குடம்பையினிற்
புட்பறநதாற போலேயான் பொய்யுடலவிட் டேகுவனோ
நுட்பசிவ னுனுவே னோ. 69

எல்லாங் கழன்றிடமே யேகாந்த மானவிடஞ்
சொல்லா ரிறந்திடமே சுகவுதய-நில்லா
விசுவ மிறந்திடமே மென்சுவர்க்க மென்றான்
சிசுக்குமுடி சாய்தத சிவன் 70

தத்தைபோ னாடோறுஞ் சாத்திரங்கற றோதுகின்ற
பத்தருக்கு ஞானப் பிரகாச-நத்தலிலா
வேம்பூமத் தங்காயும் வெங்காஞ்சி ரங்காயு
மாம்பாகு போன்முத்தர்க காம். 71

கையிலுறு புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுவமோ
மெய்யுணர்வி லுண்டோ விபரீத-மையறிவு

மோரறிவாய்ப் போனவிடத் தோகோகோ மும்முதலுஞ்!
சோராம னிற்குமோ சொல் 72

சைவஞ் சிவத்தோடு சம்பந்த மானமையாற்
சைவமே யதநுவிதஞ் சாதிக்குஞ்-சைவத்தை
வேறென்று கொள்ளாற்க வேறற்ற வேதாநதக்
கூறெனறு கொள்ளுதலே கொள். 73

இருவினை யொப்புறறு லெய்துமல பாகந
திரிகரண சுத்தியுனை சேரு-மருள்பதியு
மாசா னெழுநதருளு மமல னருளுதவு
நாசமடை யும்பிறவி நாடு 74

பொன்மலையைச் சேர்நதசிறு புன்காகமைப புள்ளினங்க
டன்னிறமும பொன்னிறமாய்ச சாருமால-முனனவனைச்
சேர்ந்தாரு மன்ன சிவோகமபா விததலா
லாய்நதவனே யாமா றறி 75

ஞாண விளக்கம்.

ஒருபொருளை நீததங கொருபொருளைப பறறி
யிருபொருளும போககி யிடையே-யொருபொருளு
மற்றநிலை யேதோ வமைதுன னிலையெனறுன
குற்றமற்ற ஞானக் குரு 76

காயந துவளாமற கரண மசையாமல்
வாயும பதையாமன் மாற்றியே-நேயத
தறிவாநந தததி லரைககண நின்றாலும
பிறவார் சிவஞானை பின. 77

மேலவத்தை கீழவத்தை வீட்டி நிராலம்ப
சாலவறி வாகத் தரியென்று-வாலறிவன்
கால்வைத்தான் சென்னியிலே கைவைத்தா னென் னுளத்தின்
பால்வைத்தான் றன்னுருவைப் பார். 78

உத்தமங்க ளெல்லா முணர்வையே தாம்பேணு
மத்திமங்க ளேபதுமை யைவாழ்த்துஞ்-சுத்த
வதமங்க ளெல்லாநதன் னுகத்தைப் போற்று
நதியோடை கூபமென நாடு 79

கன்னிக்கு மின்பமிலே கற்றோர்க்கு மின்பமிலே
கன்னிவொழிந் தாலின்பங் கன்னிக்குப்-பன்னுதமிழ்
கற்றவருக் கின்புதயங் கற்றுங்கற் றலைதொழிந்தா
லற்றமிலே யீதென் றறி. 80

ஞானமிலான் செய்யுங் குருத்துவத்தை நாடுங்கால்
யோனியிலாப் பெண்டா னுருவத்தான்-மேனி
யலங்கரிக்கும் பின்ன ரநுபவகா லத்திற்
கலங்கி மனமுடையுங் காண் 81

நிதம்பமிலாப் பெண்ணு நிகழலியுங் கூடி
யிதம்பெற்ற வின்பசுக மெய்க்குஞ்-சிதம்பற்ற
நற்குண மிலாசானு ஞா மிலாச சீடனுமாய்த்
தொக்கிவரு மின்ப சுகம் 82

அங்கோட் டகலல்கு லாயிழையு மாடவருந்
தங்கிவரு மின்பந் தழைததாற்போற்-சங்கையற்ற
வாசானுஞ் சீடனுமா யாங்காங் களாவியே
பேசவரு மின்பப் பெருக்கு. 83

பிறவி வருத்தம்.

எண்டிசையும் போற்ற வெழிலார் முடிசூடி
யண்டமொரு குடைக்கீ ழாண்டாலு-மண்டும்
பிறவியிலே யின்பமிலே பேரிடும்பை யல்லாற்
றுறவிலே யின்பச் சுகம். 84

ஈசுர பத்தி

ஈசன் றிருமேனி யெட்டுமெனக் கண்டறிந்தாற்
பாசநமை விட்டகலப் பார்க்குமே-யீசன்
றிருமேனி யென்றுனது சிந்தையிடைக் காணிற்
கருமேனி யில்லையெனக் காண். 85

ஈசன்வே றியான்வேறென் றெண்ணுங் கடையினங்க
ளீசனடி யென்னு மிடையினங்க-ளீசனே
யானேமென் றேமாக்கு மாயிற் றலையினங்க
ளானாத மாணு வறி. 86

பிரமக்கியானம்.

எல்லா மறிவாகக் காண்ட லெழிற்பூசை
பொல்கா வவனாத லுட்பூசை-நில்லா
வுலகத்தை மாயா வுடலைத்தா டித்த
விலகுமரன் ஞேத்திரமா யென 87

உயிர்க்குயிரா யீச னுழியாம னிறக
வுயிர்க்குயிராகக் கண்டிங் குணரா-துயிர்க்குயிரை
வேறாக்கிப் பூசிக்கும் விரகிலிக்கு முண்டாங்கொல்
வேறாகா மெய்ஞ்ஞான வீடு. 88

பாச வைராக்கியம்

நினைப்பு மறப்புமிந்த நீடுலகு மிந்த
யனைத்தும்போ மீச னுமவன-உணற்கரிய
கன்னனுக்கு வேடு கழித்தகதை போலுனக்கு
மன்னியமே வேடென றறி 89

ஞான நிலை

நல்லகுலத் திற்பிறந்து நல்லாரைச் சேர்ந்தொழுகி
நல்லறிவு பெற்றுடைய நன்மாணு-நல்ல
சிவம்வேறே யென்றெண்ணிச் சிந்தை கலங்காதே
சிவமென்ற நீயே சிவம் 90

காயுங் கிழங்குங் கனியருந்தி நோற்றாலு
மாயும பிறப்பகல மாட்டுமோ-காயத்திற்
றங்குஞ் சதாசிவனைத் தானாகக் கண்டதனை
யெங்குமாய்க் கண்டா லிறும். 91

சற்குரு தரிசனம்.

தத்துவத்துக் கப்பாலாந் தத்துவமன் றந்தனிலே
முத்தியெனும பெண்ணை முயங்குவோராக-கெத்தனையோ
கோடி விடயக் குழாங்க ளெதிர்ந்தாலும்
பாடழிய மாட்டாரப் பா. 92

அஞ்சின் வழிசெல்லா ராறின் படிநில்லார்
வஞ்சரொடுங் கூடி மருவார்க-டுஞ்சுநிலை

தப்பனெனெதிர் நின்றபல்காற் சாற்றினுங் கொள்ளார்க
ளுபகிடத மன்றி யுணரார். 93

உற்ற சரிதையனுக் கோராயிரம் பிறப்பு
மற்றையர்க்கு நூறுகும வன்பிறப்பு-முற்றுகினற
யோகிக் கொருபிறப்பு வுண்மைச் சிவஞான
மோகிக்கு விப்பிறபபின் முததி. 94

சரிதையிலே யீசன் சடவடிவாய் நின்முன்
கிரியையிலே மநதிரததிற கிட்டி-யருகிருந்தா
னூனமிலா யோகத்தி லுள்ளொளியா யேநின்றான்
ஞானமதி ஞையி னன். 95

சுத்தப படிகமுசசிச சூரியனைச சநதித்தா
லெத்தன்மைத் ததகன்மை யீசநிலை-யுற்றுற்றுப்
பாரா தவர்கருப பவமும பலபிணியும்
போராடு மெனுஞான்று போம். 96

எல்லா மிறந்து துறவாத ஞானிகட்குச
சொல்வார்க டிட்டாநதஞ் சேரீமபரையே-யெல்லாமுந்
தீரத் துறந்த துறவிகருத் திட்டாநதப
போர்முகத்து வீரர்மனம போல். 97

உள்ளமெனு மாநநத வோஙகன மிசையேறி
வெள்ள வெளிககுளளே விளையாடும-பிள்ளை
யுலகமெனுஞ் சேரிக கொருக்காலும வாரான்
கலகம விளையுமெனக் கண்டு. 98

கூறைக் கலையாாகள் குப்பைதரு மென்றெண்ணிச
சோறுக கலையாா துயருற்றுத்-தூறுக்குட்
கல்லை யுவநதுண் ணுங் கபோதமபோ லேதேனு
நல்லோ ரருநதிடுவா நாடு. 99

நானே பரமசிவ னுனே பரபபிரமம
நானே யுலகுயிர்த்த நாதன்-நானேயோ
கண்டதுவுங் காணுது மென்றிவணங் கண்ணூரக்
கண்டவனே சீவனமுத்தன் காண். 100

சத்து மசத்துஞ் சதசத்து முன்காட்டிச்
சத்து மசத்துஞ் சமமாக்கிச்-சத்தசத்து

யில்லா விடத்தி லெனதொழிவைக் காட்டிற்று
கல்லாலின் கீழிருந்த கை. 101

என்னை யெடுத்து விழுங்கியிரும் பூரணமாய்
யுன்னுமன மாதிகளை யோட்டிவிததுத-தன்னிகரி
லெல்லா மிறநத விடத்தி லெழுநததாற்
கல்லாலின் கீழிருந்த கால். 102

சஞ்சிதத்தை நீறுக்கிப் பிராரததத தைபபுசித்து
விஞ்சுமா காமியத்தை வீறடக்கித்-துஞசிருளா
யொல்லா மலமகற்றி யொன்றுககி வைதததாற்
கல்லாலின் கீழிருநத கண். 103

அத்துவிதக் கலிவெண்பா

பராபரமாய் நித்தமாய்ப பரிபூரணமாய்
நிராமயமாய் நிட்களமாய் நீங்காப-புராதனமாய்ச 1

சத்தியமாய்ச் சிததாய்ச் சதானந்த தேசாய்ச்
சுத்தவெறு வெளியாய்ச் சூனியமாய்ப-புததமாய் 2

தற்பரமாய்ச் சிற்கனமாய்த் தததுவா தீதமாய்ச்
சிற்பரமாய் ஞானச செழுஞ்சுடராய்-யறபுதமா 3

யறிவுக் கறிவா யகண்டிதமா யெங்குஞ்
செறியும் பரம சிவமாய்ப-பிறியாத 4

வேதச் சிகரத்துள் வீற்றிருநத தெய்வமே
போத குருவாய்ப் புவிமீது-நாதனென 5

வந்தான் றிருவடியை மததகததிற சோததினுன்
றந்தானென் சென்னித தடககையைச்-சிநதா 6

குலமொழியத் தன்னுளததிற் சிநதிததான் கோணை
மலமொழியப் பார்வையினை வைததான்-சலமொழியா 7

வாங்காரம் பொன்ற வமுததிரு வாககளிததான்
சாங்கார யோகந தலைப்பட்டா-னீங்காத 8

மெய்ஞ்ஞான நூலை விரித்துரைத்தான் மாணவக
வஞ்ஞான வாக்கைநீ யன்றென்று-னெஞ்ஞான்று 9

நாற்றவு ஞன்னீறே ஞுவை தியாரிதனைச
சாற்றிடிங்கென் போல்வாந தற்பரனே-யூற்றமிகு 10

மாக்கைக்குச சாக்கியா மான்மாவே நீயதனைப்
போக்கு வரவு புரிகின்ரு-யூககமொடு 11

தேகஞ் சடமென் றுந தேசியறி சிதமென்று
மாகமங்க ளெலலா மறையுங்கா-ஞேகையொடுந 12

இரிசியமே காயமதிற சிதமே திருக்கென்
றருமறைக ளெலலா மறையுஙகா-ணிரிகின்ற 13

வன்னமய கோசத்தை யானமா வலவெனறு
பன்னுமறை யநதமெலாம பாரெனறிய-முன்னியுனிக் 14

காண்பாாக்குக் காணப படுபொருள வேறுனதுபோற்
பூண்பாாகவெ வாகதைை பொதுவனரே-மாண்பகன்ற 15

வனிததமொடு தூக்கு மசுததமிவை மூன்றுந
தனித்தவுடற கனறியுனை சாராச-சனிபபொழியா 16

மாயா தனுவை நீயெனறு மயஙகறகத
தோயாத நீயே துரையென்ருன்-மாயாத 17

வாணவததான மூடனென வன்றமுத மின்றளவும்
வீணவததைக் குளளே விரவினு-யாணவததை 18

யறுவகையாற போக்கினை மானமையா னீயே
பிறிவில் பிரமமெனப பேணி-மறுபிறபபை 19

மாற்றென்று னீதொழிய மாயச சமயததா
பேய்த்தேரை மிததையெனப் பேணென்று ஞத்தமொடு 20

சோகமெனப பாவிததாற சோகமுனக கிலலையென்ருன்
மோக மொழியெல்லா முனியென்ருன்-ருகமொடு 21

மீசன்வே றியானவேறெல றெல்லாமுன்ற பாதகரை
நீசரெனக கண்டுநீயென்று-ஞசையொடும் 22

வேதமுடி வறிநத வேதியரைக் கூடென்ருன்
பேதநிலை யெலலாம பிரியெனருன்-சாதலபிறப 23

பொன்றுமிலை யென்மீற புணாவோ டுறங்கென்று
னின்றநிலை தானே நிலையென்ரு-னென்றமுறு 24

மும்மாயைக் கபபாலா மூபபாமூங் கண்டுநீ
சும்மா விருவென்று சொல்லினு-னம்மானை 25

வேறுபொரு ளில்லையென்றான் வெற்றவெறு மானந்தப்
பேறிதனைப் போகவென்று பேசினான்-றுறுகட்ற 26

சென்றெடுங்கு மாபோற் சிவததி லொடுங்கென்று
ஞென்றுமற வொன்று யுருகென்று-னனறய் 27

சாததிரததை யோதிமதந தர்ககியா தெனறனக்கோா
வார்ததையினைச சொலலி வழககறுததான்-காததிரமுங் 28

காஞ்சனமு மாருயிருங் கைமமாற தாயெனககு
வாஞைசயுடன் றவென்று வாஙகினான்-பூஞ்சரணஞ 29

சென்னியிலு மென்னுடைய சிததததும் வைத்தாணட
மன்னவற்குக காணேனகைம-மாறு 30

அதிரகசியம்

கணபதிதுதி

மோகமெனுங கடலகடநது முததியெனுங கரைகாண்பான் முதிரநதநாலாம், பாகமெனு மலாகொண்டு பததியெனும புனலாட்டிப் பரிநதுசாததிச, சோகமெனப பாவிததுத துரியமெனும் விளககேற்றிச சோகநீஙகி, யாகமெனுங கோயிலின்கண் ணறிவென்னுங் கணபதிககே யனபுசெய்வாம. 1

பரமரகசியப் பொருள் துதி.

சாததிரததா லளவுபடாத தனிமுதலைப பராபரததைத தானேதானு, மாததிரமாய நிறபதனை வாய்விட்டுப பேசாத மௌனவைபபைக, காததிரவா தனைகடநத வறிஞருககுப பலமீயுங் கறபகததைப, பாாததவிடந தொறுநிகழும பரமரக சியப பொருளைப் பணிதல செயவாம 2

ஞான குரு துதி

வானே முதலாம் பூதங்க ளல்லை சரண வகுப்பல்லை
யானுப் பொறியு மைமபுலனு மல்லை யறியு மறிவல்லை
யூனு ருடமபின வயததாலே யுளளங தளரே லொனறாய
நானே நீயென் றருள்செய்த ஞான குருவை வணங்குவாம். 3

பிரபஞ்ச வைராக்கிய முணர்த்துதல்.

வையத் தாசையும் வானகத் தாசையுங்
குய்யத் தாசையுங் கூறைபி னாசையு
மெய்யி னாசையும் வேரற வீட்டினோ
ரைய னாசைக் ககப்படு சிந்தையார். 4

குலகோத்திர வபிமான மாகாதென் றுணர்த்துதல்

பறைய ரென்பதும் பண்டித ரென்பது
மறையு மிந்த மலினவு டலையே
பறையர் தமமுளுமப ண்டிதர் தம்முளு
மறிவ னேகமென் றூரறிந் தோர்களே. 5

சமயபர மீதென் றுணர்த்துதல்.

சமய மேபர மென்னுஞ் சமத்தராய்ச்
சமய சாத்திரங் காட்டுஞ் சழக்கர்காள்
சமய மென்னுஞ் சதத்தார்த்த முணர்கிலீர்
சமய மென்பது தன்னை யறிதலே 6

தீர்த்த மீதென் றுணர்த்துதல்

தீர்த்தந் தேடித் திகைத்துத் திரிவிர்கா
டீர்த்த மாவது தேசிகன வாசகந்
தீர்த்த மீதெனத் தேர்ந்து கொளாதவர்
தீர்த்த மாடியுந் தேரையொப பாரகளே. 7

க்ஷேத்திர மீதென் றுணர்த்துதல்.

அள்ளிக் கோவிலை யென்னுவா சானையே
நள்ளிக் கோவிலை நத்திப்பெற் றுங்கொளி
யுள்ளக் கோவிலை யூனறிப்பா ராதவர்
கள்ளக் கோவிலைக் காமுறு வார்களே. 8

வாதசங்கற்ப மாகாதென் றுணர்த்துதல்.

ஏதங் கூறி யிடுக்கண் களைந்தவர்
பாதங் கூறிப் பவித்திர ராய்ப்பர
போதங் கூறிப் பொழுதைச் சுருக்கிலார்
வாதங் கூறித்தம் வாணாள்க ழிப்பரே. 9

துறவு இலக்கண முணர்த்துதல்.

புண்ணிய நதியினும் பொருப்பி டத்தினுந
தண்ணறுங் காவினுந் தருப்பைச் சூழலு
மண்ணறன் கோயிலு மடவி தன்னிலும
நண்ணிய யோகிகள் வதியு நல்லிடம். 10

தந்தைதாய் முதலிய தமரைக் காண்குறில்
வெந்துயா விளைதலால் விருப்பு மேவலா
லந்தநன் னிலமகன் றைம்பதி யோசனை
மைந்தனே நீபர தேயம் வைகுவாய். 11

ஊன் பிறந்த வுடலைச் சுமப்பதற்
கேன் பிறந்தமென் றெண்ணி யறிஞாக
டான் பிறந்த விடத்தைத் தணந்துபோய்
வான் பிறந்த வனத்திற் சரிப்பரே 12

வேறு

வரிக்கய லனைய கண்ணார் மாநலந் துய்த்த பின்னர்
விருத்தனுங் கால மேனும் விரதத்து யாவு நீதே
யிருக்குமந நிலம கன்றோ யோசனை யெயதப் பெற்றுற்
றிருக்கண்மூன் றுடைய பெம்மான சேவடி சோதத றிண்ணம்.

சூத்திர ராதி யாகத தொழுகுதை தவரீருக
மூத்திரக் குழியி லாழ்நது மூழ்கிய பின்ன ரேனுங்
காத்திரத் தானே ரினபங் கடையென விகநது மூன்று
நேத்திரத் தானை நோக்கி நெடுவனம் புகுதல் வேண்டும். 14

வேறு.

காயசம்பந்த மனைவி தாயதந்தை கான்முளை யென்னு மிங் கிவரை, மாயசமபநத மெனததுறந தொழிநதோன் மாநிலம் பரவுமெய்ஞ் ஞானி, தேயசமபநதத தவரொடுமருவிச் செனி த்தவந் நகரிடை மருவான், றாயசம்பநதத தவரொடு மருவித் துறவியா யவாவெலாந் துறப்பான். 15

வேறு.

கரும்பினு மின்பங் காண்பான கட்டறத் துறந்த மேலோர்
ரரும்பொனல் வெள்ளியாற்செய் யணிகலன் பூணல் செய்யார்

விரும்பிய கொழுநர்த் தீர்ந்த மெல்லியல் போலநாளு
மிருந்தவரு செய்தி யாக்கை யிளைப்பதே கரும மன்றே. 16
கற்புடை மகளி ரெல்லாங் கணவனை தெய்வ மென்பர்
சிற்பொலி சமய வேடர் சிலையையே தெய்வ மென்பர்
தற்கொலி மாந்த ரெல்லாந் தாருவே தெய்வ மென்ப
ரற்புறு பெரியோ ரெல்லா மறிவையே தெய்வ மென்பார் 17

ஐவகைப் பிராந்தியை யுணர்த்துதல்.

நித்தனை றுரைத்த வாக்கியப் படியே நிகழ்த்துவன் பிராந்தியைந் தினையுஞ், சத்திய மிந்த வுலகென்னல் கருவி தணந்திடா துடலெநா னென்னல், சுத்தபோ தாவு நமனன் றானுங் கடவு ளும வேறெனக் கருதல், சித்துரு வாகி யிருந்துநா னேகன் சிவ னென்னல் சிதடர்பா லறி 18

வேறு.

ஆன்றநற் சனகனாதி நால்வரு மரன்முகத்தை
மூன்றரைக் கோடிகற்பம் பார்த்தபின் முத்தரானா
தோன்றிநின் றழியுமிந்தத் தொடுகடற் புவியிலுள்ளோ
ரொன்றியோர் கணமேனும் பார்த்திடி னுறுவார்முத்தி 19

பழுதையிற் பாம்பே யில்லை பாம்பினிற் பழுதை யில்லை
பழுதையிற் பாம்பென் றெண்ணிப் பாம்பினைப் பழுதை யாக்கு
முழுதறி வில்லா மூடமூடரோ டுறவு வேண்டேன்
முழுதறி வாகி நின்ற முத்தரோ டுறவே வேண்டும். 20

மெய்யினிற் பொய்யே யில்லை பொய்யினின் மெய்யே யில்லை, மெய்யினைப் பொய்யென் றெண்ணிப் பொய்யினை மெய்யென் றுன்னும், மையரோ டுறவு வேண்டே னறிவுரு வாகி வந்த, வைய னே யுனைப் பூசித்தே யறிவுரு வாதல் வேண்டும். 21

வேறு

காசிவாஞ்சியங் காளத்தி கழுக்குன்றங் காஞ்சி
மாசிலாருணைப் பருப்பதங் கோகன்ன மறைக்கா
டேசிலாதுறை மூர்த்திதந் தெரிசன மெல்லாந்
தேசிகன்றிருச் சேவையை நிகர்க்குமோ செப்பில். 22

வேறு.

மன்னுமா மறையின் சென்னி வாக்கிய முடிவுங் கண்டே
னன்னிய பாசமான வாணவா தியையுங் கண்டே

னென்னையுங் கண்டே னென்ற னிதயதா மரையின் மேய
நின்னையுங் கண்டே னெந்தாய் நீதந்த ஞானக் கண்ணால். 23

ஆகையா னானே யெல்லாப் பொருள்கட்கு மறிவாய் நின்றே
தேகமா திகளுக் கப்பாற் சிதம்பர வடிவ மாகி
யேகனா யனாதி முத்த னாயெனில் வேறொன் றின்றிப்
போகமோ கங்க ளின்றிப் பூரண வறிவா னேனே. 24

அறிவென்னு முதல்வேத மகமென்னு மிரண்டாமோத்
தறிவதுநீ யானாயென் றறையுமூன் றாம்வேதஞ்
செறியிந்த வான்மாவே சிவமென்னு மதர்வணஞ்
செறியுநால் வாக்கியத்தின் சித்தாந்த மறிந்தேனே. 25

நானேநீ நீநானே யானமையான் ஞானகுரு
வானவனே கைம்மாறும வழிபாடுந் தோத்திரமு
மீனமிலாப் பூசனையு மியற்றுவான் றனைக்காணே
னானுமிலை யுயிருமிலை யுனையன்றி யொன்றுமிலை 26

எல்லாநா னென்றுணராக் காலத்தி லிடர்ப்பட்டே
னெல்லாநா னென்றுணர்ந்த காலத்தி லின்புற்றே
னெல்லாநா னேயென்றிங் கெனையெடுத்து விழுங்கினா
யெல்லாநீ யென்றுணரு மெண்ணமும்போய் மாண்டதே. 27

பிண்டமா முடனா னல்லேன் பிராணவா யுவுநா னல்லேன்
கண்டவிந் தியநா னல்லேன் கரணமோர் நான்கு மல்லேன்
பண்டைய வறிவே நானென் றுணர்தரு பருவம வாய்ப்பின்
வண்டறை கொன்றைத் தாரான் மலரடி காணலாமே. 28

சிவாகமக் கச்சிமாலை.

தம்மா லறிந்தன யாவையுந் தாமல வென்றறிந்து
மும்மாயை மும்மல முக்குண நீங்கி முழுதறிவாய்ச்
சும்மா விருக்கத் துரியங் கடந்த சுகமுதிக்குஞ்
சன்மார்க்க முத்தியி தென்றான் றடங்கச்சி யேகம்பனே. 29

சாந்தமு நோன்புந் தவமு மடக்கமுந் தண்ணளியும்
வாய்ந்த குருச் சொலும வாக்கியங்கேட்டு மனமவன்பால்
காந்தமு மூசியுங் கண்ணுங் கதிருங் கலப்பதுபோ
லேய்ந்தது வேமுத்தி யென்றா னெழிற்கச்சி யேகம்பனே. 30

கூவிள மாலையுங் கொன்றையுந் தும்பையுங் கூடாறுகு
மாவ லொடுமெடுத் தர்ச்சனை செய்தங் கங்குழைந்து
நாவினிற் றோத்திரஞ் சொல்லி நலநதெரி ஞானிகளுக்
கேவல்செய் தாலன்றி முத்திகொ டான்கச்சி யேகம்பனே. 31

அன்னிய மேசெயு மாணவ நீக்கத்தி லாருயிர்க
ளன்னிய மேயிலை யென்றுநின் வேத மறைதலினு
லென்னுட லுன்னுட லென்பொறி யுன்பொறி தென்னதுன்ன
தென்னினை வுன்னினை வென்றுரைப் பேன்கச்சி யேகம்பனே.

எல்லாஞ் சிவமெனு நான்மறை யாகம மெக்கலையு
மெல்லாஞ் சிவமென் றெழிற்குரு வாய்வந் தெடுத்திசைத்து
மெல்லாஞ் சிவமென லெவ்வெவர் கோட்கு மிசைந்திருந்து
மெல்லாஞ் சிவமென் றுணரகில் லேன்கசசி யேகபபனே. 32

ஆட்டைச சுமநதநின் பாதார விந்தத்தி லன்புசெய்யாக்
கூட்டைச சுமநது குடும்பத்தை யோம்பிக் குருக்கிடையாப்
பாட்டைச சுமநது பயன்றெரி யாமலப பாட்டெழுது
மேட்டைச் சுமநதவாக் கின்பமுண் டோகச்சி யேகம்பனே. 33

அறிவே சிவமெனு மாகமம் வேதங்க ளவ்வறிவாய்ச் [லாம்
செறியு முனைப்பொரு ளென்றுகொள் ளாதுநற் றெய்வமெல்
வறிதே திரிநதலைந தெய்ததொழிந தேன்றம் மனையகத்தி
லெறிசுடர் விட்டனற் றேடுவர் போறகசசி யேகம்பனே. 34

சொல்லா திறந்திட முத்தியென் பார்சிலர் தோதகஞ்செய்
பொல்லா மனேலய முத்தியென் பார்சிலர் பொய்யொழிவே
யொல்லாத மாமுததி யென்றுரைப் பார்சில ரோதியவை
யெல்லா மிறந்திட முத்தியென் றுன்கச்சி யேகம்பனே. 35

அங்கையி னெல்லிப் பழம்போ லகந்தொறு நீயிருப்பச்
சங்கை யறவுனை நோக்கஞசெய் யாசசமை யச்சழக்கர்
செங்கண னிந்திர னுன்முகன் றன்னையுந் தெய்வமென்பர்
கங்கை மகத்துவ மீனறியா கசசி யேகம்பனே. 36

மண்ணாதி நாத வரையுரு நாமன் றெனமதியா
நண்ணு வறிவுரு நாமெனக் கண்டுமெய்ஞ் ஞானத்தினு
லுண்ணுடி யொன்றிரண் டென்னு துறங்குவ தன்றியுன்னைக்
கண்ணு லறியப் படுமோ கலிக்கச்சி யேகம்பனே. 37

பற்றறத் தீரத் துறந்தாக மத்தின் பரப்பறிந்து
குற்ற மறுசிவ ஞானக் குரவன் குறிப்பி னின்று
வெற்ற வெறுவெளி கண்டவர்க் கேயின்ப மேவுமன்றிக்
கற்றடங் காதவர்க் கின்பமுண் டோகச்சி யேகம்பனே. 38

கோட்டகங் காரமென் கொல்களிற் றுனையின் கோளடக்கி
வாட்டமி லாக்குடும் பப்புலி வாயினின மண்ணையட்டி
யீட்டு மிருவினைப் பேயுடல் கீறி யிணையில்பவக
காட்டைக் கடந்துனைக் கண்டுகொண் டேன்கசசி யேகம்பனே.

மாயாப் படலத்தி னுன்மறைப் புண்டு வழிதிறம்பிக
காயா புரியடைத் தந்தோ கவலைப்பெண் கையகபபட்
டோயாப் பிணிமகப் பெறறே துயர்ததடி யூனறுமெனக்
கேயாப் படல மிரிபபதென் றேகசசி யேகமபனே. 40

புல்லாதி தாபர நீங்கிநற் சங்கமம புக்கினவர்
கொல்லா விரதங் குறிககொண்டுன் பாதகக்குற் றேவல்செய்து
பொல்லாப் பிறபபை யொழிககறி யாரவா புநதியந்தோ
கல்லோ மரமோ விரும்போ கலிககசசி யேகமபனே. 41

சித்தந் தெளிந்தவ ருள்ளச் சினகரத தேதிகழுஞ
சுத்த நிராமயச சோதிய னேயென்று தோததிரத்தாற்
பத்திசெய் யாவெறும பாவிகள சிநதையிற பாறிநின்று
யெத்திறத் தாலுனைக் காணவல லாகசசி யேகம்பனே. 42

ஆசை யொழிவெந தக்காலுமுறு வநத வாசையெல்லாம்
வீசிநி ராசைசெய் வித்தகரே யுனைக் கணடுகொள்வா
ராசை வழிச்செலுந துன்மாாகக ருன்னை யறிவர்கொல்லோ
காசி யினுஞ்சிறந தோங்கும் கலிககச்சி யேகமபனே. 43

ஓமாதி வாக்கிய மொன்றைப பிடிததவ ருததமர்கள்
சாமாறு மங்கிலை நிற்பர் சததியர் சற்குருவா
லாமாற றிந்தவ ரநதண ரியோகிக ளஞ்சடக்கிக
காமாதி குற்றங்க ளோந்தவர் காண்கசசி யேகம்பனே. 44

வீணாய்ச் சுழலு மெனக்கொரு ஞான விழியளித்துக்
கோணுகத் துள்ளொரு கூததப பிரானுண்டக் கூத்தப்பிரா
னுணு வதுமன்று பெண்ணு வதுமன் றலியுமன்று
காணுக்கண் கொண்டினிக் காணியென் றுன்கச்சி யேகம்பனே.

அறிவா யிருந்தறி யாமையை நோக்கி னஃதொழியுஞ்
செறியும் பரிபூ ரணவுருத் தானெனிற் றேகமறு
மறிகரு மங்கட்குச் சாக்கி யுயிரெனின் மாளுமது
பிறியா நிலையிது வென்றான் பெருங்கச்சி யேகம்பனே. 45

படிகக் கடசுட ருள்ளும் புறமும் பரப்பதுபோ
லுடன்றொறு நீயுணர் வாகி யகம்புற முற்றிருந்து
மடைமல வல்லிரு ளாருயிர் ஞானதனை யாவரித்துத்
தொடாவதென் சொல்லுதி பைம்பொழிற் சூழ்கச்சி யேகம்பனே

அஞ்சக் கரமன்றி வேறொரு மந்திர மாயினில்லை
யஞ்சி லிறையரு ளாவி திரோதைசில் லாணவமற்
றஞ்சி லிரண்டை யருளா லகற்றிடி லாவியந்த
வஞ்சி லிரண்டை யணையுமென றான்கச்சி யேகம்பனே. 47

மந்திர மாவது மஞ்செழுத் தேயந்த மந்திரத்தி
னைந்து பொருளையுங் காட்டி யிரண்டின் வழியடைந்து
மூன்று மிரண்டின் வழியைத் திறந்துயா முத்திதந்தான்
கந்தன் கணபதிக் கப்பன் கலிக்கச்சி யேகம்பனே. 48

ஒருதலை மாணிக்க முன்ன ரெனக்குப தேசஞ்செய்தா
னிருதலை மாணிக்க மின்னரும் பேசி யிருளறுத்தா
னரிதலை மற்றை யயன்றலை சூடிய கங்கையின்மூ
வெரிதலைச் சூலத் தொடுநடிப் பான்கச்சி யேகம்பனே. 49

யானென தென்னுஞ் செருக்கொழி யாமையி னெவ்வுயிர்க்கு
மீன வகங்கர ணங்குவி யாதுபின் னிச்சைவழி
வானகம் மண்ணகம் பாதல மூன்றினும் மாறிவரும்
யானென தென்செருக் கற்றோர் தொழுங்கச்சி யேகம்பனே.

விருப்பு வெருப்பற் றுன்வேத மொழிப்படி மெய்யுணர்ந்து
மரிப்பைச் சனிப்பையு மற்றொளி யாகிய மாதவர்பாற்
கருப்புச் சிலையனுங் காலனும் வந்தென் செயக்கடவர்
நெருப்பைப் புழுப்பற் றுங்கொல்லோ நெடுங்கச்சி யேகம்பனே.

ஓசை பரிச முருவஞ் சுவைமண மோரைந்தையும்
வீசி யகமுக மாகி வெறுப்பு விருப்புமற்று
மாசறு திங்களைப் போன்று சதானந்த வாழ்வையுன்னி
யேசறு முத்தியி லென்றிருப் பேன்கச்சி யேகம்பனே. 51

ஆணவ மேலிட வாருயிர் கீழிட் டங்கிரிற்கு
மாணவங் கீழிட வாருயிர் மேலிட டருளுருவா
மாணவ நீங்கிய வாருயிர் வேறல வென்றறைந்தா
ஞணவ நீங்கிய வன்பர்க் கருள்கச்சி யேகம்பனே. 51

அண்ட மொருகுடைக் கீழாள வேண்டில னம்புயத்தோன்
விண்டு புரந்தரன் றன்வாழ்வும வேண்டிலன் மெய்யன்பிறைற்
றொண்டுசெய் தாங்குன் றிருவடி நீழலிற் றாங்கியுன்னைக்
கண்டு கொளும்வரம வேண்டுவன யான்கச்சி யேகம்பனே. 53

வன்புறு கல்லைநீ பொன்னாகச் செய்யற்க மற்றெனக்குச்,
செம்பொன்னைக கல்லுரு வாகத திருவுளஞ் செய்திவெறு, மெ
ன்மைப்பெண் ணுக்குதல் வேண்டா மெனகவெழிற் பெண்ணை
யிழி, யென்புரு வாகச்செய் கண்டா யெழிற்கசசி யேகம்பனே.

மூர்த்தியுந் தீர்த்தமு மூவாத் தலங்களு மூன றுருவாய்ச
சேர்ததது மெய்மொழி சிததந தெளிதரச செபபுமறை
மூர்ததி மனசசுததி தீர்தத மொழிசுததி மூடவுட
லார்த்த தலசுத்தி யென்று•ணணிக்கசசி யேகமபனே. 55

மனமொன்றும வாயொனறு மின்றி யொருப்பட்ட மாதவர்பா
னனவினிற் றோன்றுவ னுன்முக னுடகி நடுக்கமுற
மனமொன்று வைத்து பின் வாயொன்று பேசிய வஞ்சகர்பாற்
கனவிலுந் தோற்றப படுவதுண் டோகச்சி யேகமபனே 56

நாற்றக் குரம்பையை நாயாதிக குண்டியை ஞானமிலார்
போற்றுஞ் சடததைப புனன்மேற் குமிழியைப பொய்யுருவைத்
தூற்று நவையையத தொலையா விடககினைத தோகையர்கள்
ளேற்று முடமபினை யென்றொழிப பேன்கசசி யேகமபனே. 57

காயததைக் கலலினுந திண்ணிதென் றெண்ணிப்பொற் காரிகை
மாயத்திற் பட்டுத தருமஞ் சிறிதின்றி மடகிரையாய்ப் [யார்
பேயொத் தருநிர யநதொறும புக்குப பிறநதுழலு
நேயததை யென்றைகது நீககுவை யோகசசி யேகம்பனே. 58

பங்கயப பாசடை நீரிடை நிற்பினும் பற்றையுறு
சங்கை யெரியிற் சுடினுந தவள நிறங்குறையா
துஙக மணிபபாம பிருடகுகை துன்னினு மலலையுறு
விங்கிவை போனின னடியா ரெழிறகச்சி யேகம்பனே. 59

அஞ்ஞான நீக்கத்தி லாருயி ரேசிவ மானமையான் [ஞ்ஞனிப்
மெய்ஞ்ஞானி யெனப தெவர்க்குஞ் சரியொக்கும் வேறென்று
பொய்ஞ்ஞானம் பேசும் புருடர்க் குன்பாதப் புணைகிடையா
வெஞ்ஞான் றவர்கருள் செய்குவை யோகச்சி யேகம்பனே. 60

வேறெனறு பேசுவ தெல்லாம் விவேக மிலாமையன்றோ
கூறொன் றி லாமறை கூறுஞ் சிவனுருச் சீவனென்றுந்
தேறு முமையுறுத தேகமென் றும்மிதைத தேறுவரோ
வீறின் மலவயப் பட்டோ ரெழிற்கசசி யேகம்பனே. 61

சிருட்டிக்கு முனனுயி ரெல்லாஞ் சிவமெனச் செபபுமறை
சிருட்டிககுப் பின்னுயிர் வேறுபட் டான்சிறு சீவனென்றே
சிருட்டியை நீககிச் சிவோகமென் பாவனை சேர்தலுஞ்
சிருட்டிக்கு முன்சிவ மானுன் றிகழ்கச்சி யேகம்பனே. 62

காணப் பதைப்பறச சிததிர தீபமுங கல்லுமொத்துக்
கிரணமும பானுவும் வேறற் றொளிருமக கேண்மையைப்போற்
சரணத் திருநிழற் கீழ்நிறகு ஞானத தபோதனர்தம்
மரணப் பிறப்பையு மாறறிவிப பான்கசசி யேகமபனே. 63

முன்னை வினைத்தொட ரெலலாஞ் சின்முத்திரை கொண் டெரிததேன், பினனை வருவினை யெல்லா மருளிற் பிரித்துவிட் டேன்,றின்னும் வினையினை யெல்லாஞ் சிவார்ப்பணம் செய்தொ ழித்தே, னின்ன மெனக்குப பிறப்புமுண் டோகச்சி யேகம் பனே. 64

வைதாரை வாழ்த்துவர் பின்னு மிரங்குவர் வாழ்த்திநலஞ்
செய்தாரைப் போற்றுவா பின்னுஞ் சிரிப்பர்பற் றீவினையை
யெய்தாரை நோக்குவ ரேவினைநோக்கி யிகழ்தல் செய்யார்
மைதா விடுமல மற்றூர் மதிகசசி யேகம்பனே. 65

துயருற்ற போது மதிற்றுளே யாராற் சுகமடுப்பி
னயமுற் றதிலமுந் தாரிநத ஞாலத்து ளுட்டமுறார்
பயமுற்ற நீரென நின்னொடொன் றாகிப பதிந்திருப்பார்
செயலற்று நின்னைத் தெரிசித்த போகச்சி யேகமபனே. 66

நாமார நமக்குப் பதியா ரெனவரு ஞானங்களே
மாமாயை கன்ம மலத்திரள் மாறறிடு மாற்றிடவுக்

தாமாய் முழுவதுஞ் சத்திய ஞானத்தைச் சார்வனென்றான்
காமாட்சி யம்மைக் கினியபி ரான்கச்சி யேகம்பனே. 67

சும்மா விருகருஞ் சுகோதயங் காட்டித் துரிசகலா
மும்மாயைக் கப்புறத் தொன்றாய்க் கிடந்த முழுதறிவாஞ்
சிம்மா தனமெனக் கீந்தா யுனக்கென் செயக்கடவேன்
கைம்மாறு மாரிக்கு முண்டோ கலிக்கச்சி யேகம்பனே. 68

கர்நாமிர்தம்

ஒன்றாகி யுணர் வொருங்கி யோமொழிப் பொருடா னாகி
மன்றாடு நின்னை யன்பின் வழிபடு மறிவொன் றின்றி
பொன்றாலி பூட்டு மாதர் புணர்சசியே பொருளென் றெண்ணிச்
சென்றடி யுணங்கிப் போனேன் றிருபபுலி வனதது ளானே.

காதினா லறியா நின்னைக் கண்ணினாற் காணு வென்னை
மேதைசேர் விவேகத் தாலும வேதத்தா விஞ்சை யாலும்
பாதத்துக் கேற்ற தொண்டு பற்பல குயிற்றி யன்பாற்
சேதனங் கண்டு கொண்டேன் றிருப்புலி வனத்து ளானே. 70

பாவமு மறமு மொத்துப் பக்குவம் பருவ முற்றிங்
காவியைம் புலனைப் பற்றா தகமுக மாகி யென்று
மோவியம் போன்றிட் டங்க னுண ருண ராமைபோக்கிற்
சீவனுஞ் சிவனும் வேறோ திருப்புலி வனத்து ளானே 71

ஆகநா மல்ல விந்த வைம்பொறி நாமே யல்ல
வேகமே நாமென் றுன்னு மிருடிக ளிதயத் துள்ளாய்ப
பாகமா முமை மணாள பசுபதி பிறவி வேண்டேன்
சேகறு மனத்தோர் போற்றுந திருப்புலி வனத்துளானே. 72

அறிவினி லகமுண் டாகி யகத்தினின் மனமுண் டாகிப்
பிறிவரு மனத்தின் மாயை மாயையிற் பிண்டாண் டங்கள்
மறியுல கத்தி னக்கை வநதவிம் மாய மெல்லாஞ்
செறிதரா தருளிச செய்வாய் திருப்புலி வனத்து ளானே. 73

பவத்துய ரான் மெலிந்த பக்குவ வுயிர்கட் கெல்லாஞ்
சிவத்தைமுன் விளக்கிப பின்னர்ச் சீவனை விளக்கி மூன்று
மவத்தையை விளக்கி நீக்கி யறிவுரு வானு யென்றுஞ்
சிவத்துவ மசிநீ யன்றோ திருப்புலி வனத்து ளானே. 74

அறிவொடு கடலாயாகி யலையதாய்த் தத்துவங்கள்
பிரிவுரை குமிழி யுப்புப் பிணைமலம் வாயு கன்மங்
குறிபல மீன மாயை யிவற்றினுற் குறைவொன் றில்லைச்
செறிதிரு வருளான் மாற்முய்த் திருப்புலி வனத்து ளானே. 75

புழுவின நிறையு மாக்கை யொன்பது பொள்ள லாலு
மிழிபடு மலங்கள் வீசு மிதனினு நரக மன்றே
வழுவையி னுரிபோர்த் தாடும வள்ளலே பிறவி வேண்டேன்
செழுமணி மாட மோங்குந் திருப்புலி வனத்து ளானே 76

பிறந்தவ ரிறக்கை யாலு மிறந்தவர் பிறக்கை யாலு
மறிந்துயர் பெரியோ ரெல்லா மாக்கையை வெறுத்த லாலு
மறந்துநான் பிறவி வேண்டேன் மறுபிறப் பிலாத வண்ணஞ்
செறிந்தருள் செய்ய வேண்டுந திருப்புலி வனத்து ளானே. 77

சிவனையே தெய்வ மென்று சிந்தையிற் சிந்தை செய்மி
னவனலாற் றெய்வ மில்லை யவனுக்கே யடிமை செய்மின்
றவமிலா மனித ரெல்லா மவனடி சார மாட்டார்
புனையவா தனை கடந்திப பொன்னடிக் கமல மீவன். 78

நூலிடைக் கருத்தை விட்டு நுண்ணிய ஞான மின்றி
மாலுறு சமய வாத வசனத்தை வசனி யாதே
சீலவா சிரியன் சொன்ன செந்நெறிச் சித்தம் வைத்திட்
டாலமார் கண்டத் தானை யகமுக மாக நோக்கே. 79

பண்டைய வினைவாய்ப் பட்டுப் பதைதியும பரிவு மின்றி
வண்டறை கொன்றை யானை மனத்திடை யிருத்த மாட்ட
ரண்டரு முனிவர் தாமு மாகர வெனுஞ்சத் தத்தைத்
கண்டுகொண் டிருப்பீ ரல்லீ ரென்செய்வீர் கால னுக்கே. 80

ஐயமு மிட்டே னில்லை யடியார்க்கொன் றீந்தே னில்லை
துய்யமெய்ஞ் ஞான நூலின் சொற்பொரு ளறிந்தே னில்லை
மையணி கண்டத் தானை மலர்கொடு பணிந்தே னில்லை
வையகத் துவர்நீ ரொத்தே னென்செய்கேன் மதிவல் லீரே. 81

நீரிலாக் குளமு ஞான நிலையிலா நெஞ்சு நீண்ட
தேரிலா வூரும் பன்னூற் றெரிந்தவ ரில்லா நாடு
மேரிலாச் சீரும போல வீசனுக் கடிமை யென்னும்
பேரிலா வாக்கை பெற்றேன் பேதையேன் பேதை யேனே. 82

ஞானத்தான் ஞானி யல்லேன் னன்மையாற் குடும்பி யல்லேன்
மோனத்தாற் றுறவி யல்லேன் மூடத்தான் மூட னல்லேன்
வானத்தார் வணங்குந் தூய வயப்புலி வனத்து ளார்க்குத்
தானற்ற வடிவை செய்யேன் சழக்குடைச் சழக்க னேனே. 83

ஆமைபோ லைந்தொ டுக்கி யறிவினு ளறிவாய் நின்ற
வேமொழிப் பொருளை நாடி யொன்றுபட் டிருக்கும் வண்ணங்
காமனைக் காய்ந்த கண்ணுங் கடையரிற் கடைய னேற்குச
சேமநல் லறிவு காட்டாய் திருப்புலி வனத்து ளானே. 84

பற்றறத் துறந்த ஞானப் பட்டினத் தடிகள் போலப்
பற்றறத் துறந்தே னில்லை ப்ராபர நிலையைக் கண்டாங்
கற்றசீ வாக்க ரல்லே னன்பிற்கண் ணப்ப னல்லேன்
குற்றஞ்செய் மூர்க்க னல்லேன் பத்தியிற் கோழை யேனே. 85

கடலிலே கலந்த வாறு கதியிடைய் பின்வந் தாலும்
கடலினுட் டன்மை குன்றுக் கதையென நினைக்கண் டோரு
முடலிடை யிருநது முண்டு முறங்கியு முலாவி நின்றுந
திடனுடை ஞானி யன்றோ திருப்புலி வனத்து ளானே. 86

ஒன்றிரண் டல்ல வென்றுங் கொன்றினை யொன்றுற் பற்றி
நன்றுதீ தென்று நிற்கு ஞானிக ளுள்ளக் கோயி
லென்றுநிற் கினிய தென்றே விடைவிடா திருந்த தெம்மான்
சென்றிடை யாதசெலவத் திருப்புலி வனத்து ளானே. 87

நகாரத்தின் மயலை ஞான வாளினு னறுக்கிப் பின்னர்
மகாரத்தின் மறப்பை நாமே மணியெனு மதியால் வாட்டி
வகாரத்தின் வழியே சென்று மாலய னறியா தேங்குரு
சிகாரத்தைக் கண்டே னின்னுற் றிருப்புலி வனதது ளானே. 88

நோயிலா வாக்கை பெற்று நுண்ணறி வுடைய ராகித்
தாயினு மினிய நின்னைச சமாதியிற் காண மாட்டார்
மாயையால் வகுக்கப் பட்ட வடிவிடை நின்னைக் காணச்
சேயரா யரற்று கின்றார் திருப்புலி வனத்து ளானே. 89

தனுவொடு கலவா ராயின் சார்தரா வினை யிரண்டுந
தனுவொடு கலத்த லாலே சாதரும் வினை யிரண்டுந
மனமொழி காயமூன்று மவுனமுத் திரையி னிற்பச
சின்மய லகன்றோர் போற்றுந் திருப்புலி வனத்து ளானே. 90

சைவ சித்தாந்த மெல்லாந் தானவ ளுகி நிற்றல்
மையறு வேத சித்த மற்றது நானே யென்ன
லுய்வகைக் கிரண்டு மொன்றென் றேறுதியென் னுயிர்க்கிலாபஞ்
செய்தசற் குரவ னீயே திருப்புலி வனத்து ளானே. 91

சுருதிசாரவிளக்கம்.

முதல் வாக்கியம்.

உலகமே பரப்பிரம முமரைக்குமந்தப் பிரமநா
மலகில்கலை யுணர்நதாலு மருத்தமிதே யறிகண்டாய்
பலமயலைத் துறந்தரிய பரமபதந் தனைத்தாவி
யுலவுசுக முனிவரனே யென்றுரைத்தா னுயர்முனிவன். 92

ஆகிலிந்தப பரப்பிரம மகிலமயமாயிற் றென்றுற்
சோகமொடு பிறநதிறக்குந் தொழிலுளவோ வென்பாயே
லீகைபல பணியாயு மிறந்தனவோ வதுபோல
வேகபர மகிலமுமா யிருக்கும்வியாபகத்தாலே. 93

தந்தைவயி னுண்டாய சந்ததியு மவனென்றே
முந்துமறை யுரைதருமான் முழுவதுந்தா னன்றியொரு
சிந்துமிலை யெனவீசன் சேயிழைக்கோ தியபரிசாற்
பந்தம்றுஞ் சுகமுனிவ பார்பிரமஞ் செகமென்றே. 94

எல்லாவண் டமுமியானே யாவருமென் சொரூபமே
நல்லார்பொல் லார்நானே நன்மையொடு தீமையுநா
னுல்லாச பரமுத்தி யொன்றொழிய விரண்டில்லை
கல்லார்க்கிப் பொருடெரியா கணணிலாக்குக் கிருண்டோ.

ஒலியாகிப் பரிசமா யுருவாகி யிரதமாய்ச்
சலியாத கந்தமாய்த் தாரணியாய்ப் புனலனலாய்
மலிவாயு வானமாய் மதியிரவி யியமானு
பலியாகி யாணுகிப் பெண்ணுகி யமர்கின்றேன். 96

சாவதுவும் பிறப்பதுவுந் தனுவன்றே வஃதறிதி
சாவதுவும் பிறப்பதுவுந் தாமென்றே யுரைதருவார்
போவதுவும் வருவதுவும் புரியட்ட சரீரமே
போவதிலை வருவதிலை போதமயப் பொருளுமே.

இரண்டாம் வாக்கியம்

ஏகமே வாத்துவிதம் பிரமோக மென்றிசைப்பத்
தாகமொடுஞ் சுகமுனிவன் சந்தேகத் தடைநீங்கி
யாகமெனுஞ் சிறையுலவா தாநந்தற் சிறையாகி
யேகமே யத்துவிதம் பிரமநா மெனத்தெளிந்தான். 98

அத்துவிதந் துவிதமல்லா தெனவரிய மறையேக
மத்துவித மிதற்கைய மிலையென்றே யறைந்தாலும
பொய்த்துவித மயக்கொழியார் பூருவா தனையாலே
யத்துவித மொழிபொருடா னன்னியமாய்த் தெளிவரால். 99

ஒன்றாகிப் பரவெளியா யுருவருவ மிலதாகிக்
குன்றாத பரப்பிரமங் குகையிருக்கு மதைவிளக்கி
னன்றாரு மிதயகுகை நாமதுவே யையமிலை
கன்றாத நின்மொழியான் மெய்ஞ்ஞானங் கடைபபிடித்தேன்.

ஊனாடி யுயிர்நாடி யுண்ணாடிப் புறநாடி
வானாடி வளிநாடி மண்ணாடி நீர்நாடித்
தீநாடி நாதவிந்து செங்கதிரோன் றனைநாடி
நானாடிப் பார்ப்பளவி னானேயப் பரபபிரமம். 101

பல்கலையா லாகமத்தாற் பகர்கீதை பதினெட்டா
னல்வினையாற் கருமத்தா னுன்மறையா ஞானத்தாற்
சொல்லூகத் தான்மறையாத் துணிவாலிற் றுறந்தோரா
னல்லோரா னுன்பார்க்கி னானேயப் பரப்பிரமம். 102

ஒருகாலந் தோன்றினே னொருகாலம வளாகின்றே
னொருகாலஞ் சாம்பினே னென்றுரைக்கு முணர்விலிக
ளொருகாலம் பிறந்ததிலை யொருகாலம வளர்ந்ததிலை
யொருகால மிறந்ததிலை நானேயவ் வுயர்பிரமம். 103

நான்மனித னன்றுநா னவிலுறுதே வனுமன்று
நானிராக் கதனன்று நவியசுர னனன்று
நான்முனிவ னன்றுரக னன்முகனு நானன்று
நான்றிருமா லன்றரனு மன்றரிய பிரமநான். 104

மூன்னவரு நானல்ல முடிமன்னர் நானல்ல
ன்னுவசி யருமல்ல சூத்திரரு நானல்ல

வன்னியரு நானல்ல வன்னியரு நானல்ல
பின்னமொடு பிறப்பிறப்பு மில்லாத பிரமநான். 105

நான்பிரம மெனுஞான ஞானிகள்பா லுளவாகு
மூன்பிரமை யொழியாதார்க் கொருக்காலுந் தோன்றுவா
மான்வயிற்றி னரிதார மருவுமன்றி வராகவயிற்
றான்பிறக்கக் கண்டாரு முண்டோபொய்க் கலியுகத்தும். 106

ஆதலா லகம்பிரம மெனுஞ்சுருதி யகநதெளிநது
போதினன் முகப்பிரமன் புண்டரிகத் தாள்வணங்கி
யோதொணு மகிழ்சசியொடு மூலாவினு லுலகமெல்லாஞ்
சோதியிவன் றனென்னத துறநதசுக முனியம்மா. 107

மூன்றும் வாக்கியம்

பக்குவர்ககாய்க் கல்லாலின் பாங்கெழுந்த தெய்வமே
தக்கவிராட் டிருவுருவாய் தமியேன்றன் விண்ணப்ப
முக்குறும்புங் கடநதவிட முழுத்துரிய நிலையென்று
லக்குறுமபைக் கடபபவன்யா ரவனேயப பரப்பிரமம். 108

பாவாபா வாதீதம பிரமோக மெனப்பகரு
மூவாத வாக்கியத்தின் முடிவறியின் முன்மாயை
நீவாத பின்மாயை யிரண்டிறகு நீண்டிருக்கு
மோவாத பரப்பிரம நீயாமென் றுணாகண்டாய். 109

கேவல சகலமென்னக் கிளைத்தெழு மாயைதன்னைக்
கேவல ஞானத்தாலே கிழித்தறி வாகிநிற்பாய்
பூவலம் புரிநதமாநதா புண்ணிய தீரததமாதி
யாவலாய்த் தானமாதி யாகமா தியவிதாமால். 110

நினைவழிப்பி னதன்பின்னே நினையாமை யெழுமதனை
நினைவறியா வறிவுருநா மென்றவறறி னயனிறபாய்
மனிதரறி யாவிந்த மாறுத சுகோதயத்தைத்
தனியிருந்து காண்டியாற் சகங்கடந்த தவத்தோயே. 111

காரணகா ரியங்கடநத கரிப்பிரம நாமென்றே
யாரணநூற் புகன்றபடி யனுபவிப்பா யருந்தவனே
காரியமேழ் காரணமேழ் கழறினுபா திகளாகுந்
தூரியமுன் பாலுடைத்துக் காரணமக் கடவுடன்பால். 112

இன்னணமா யுயிரானைக் கடந்தேறி யிறையரனைப்
பன்னுமறை யின்படியே கடந்திடிறபைங் கிளிப்பெயரோய்
சொன்னபரப் பிரமமய நீயாயே தோன்றுமா
லன்னியமா யொருபொருளுந தோன்றுவே யனுபவத்தே. 113

தேகமலேன் பொறியல்லேன் செறிகரண நானல்லேன்
மூகபிரா ணனுமல்லேன் முழுப்பிரம நானென்னச்
சோகமெனப பாவிக்கிற சுகமுனிவ வுயிர்த்தடைபோம்
மாகமுறு மதிபோல விளங்குமுன்றன் மதிதானே. 114

பாவனையெ லாமிறந்தாற் பாழன்றோ பரமேட்டி
பாவனையெ லாமிருந்தாற் படுசகமன் றோவிரண்டு
மோவியதே நின்னிலைய முபாதியறு சூனியமா
யோவியம்போ னிருவிகற்ப வுணாவாய்நில் சுகமுனிவ. 115

வேறு.

அறிவை யன்றி யறியப படும்பொருள்
சிறிது மில்லை யெனத்தெளி யாவிடின்
மறியு மைம்புல வாதைத் திரைகளில
பிறவி மைக்கடல் வீழ்வை பெருநதவ 116

நான்காம் வாக்கியம்.

எத்தனை தாயைக் கண்டோ மெததனை தமரைக கண்டோ
மெத்தனை மனையைக் கணடோ மெத்தனை மகவைக் கண்டோ
மெத்தனை யூரைக் கண்டோ மெத்தனை பேரைக கண்டோஞ்
சித்தமே திருமபா யீசன் றிருவடி காணு மாறே. 117

வேறு.

வாமனமே யென்கண்டாய் வையகத்திற் போயருந்திச்
சாமளவு மென்னையேன் றடுமாற்றஞ் செய்கின்றாய்த்
தூய்மனமே யென்னோடுந துணைப்பட்டா யாகிலன்றே
தேய்மதியூர் சடையானை யின்றேசென் றடைவேனே. 118

விரியமனங் கடவதென வியாதனிட்ட சாபமோ
பெரியபிரா ரத்தமோ பிரமன்விதித் தனலிபியோ
கரியமனக் கள்ளாநீ கவலைவனம் புகுகின்றா
யொருமொழியா லுனைக்கட்டி யுருட்டிவிடக் காண்பேனோ.

பெரியவர்தந் தரிசனத்தாற் பெறுதபொரு ளொன்றுண்டோ
வரியவவர் மொழித்தடியா லடிக்கின்றேன் வாமனமே
யொருபொழுதோர் நொடியளவு நிற்பாயே லுயர்முத்திக்
கரைகாண்பேன் மெய்ஞ்ஞானக் கடவுளையுங் காண்பேனே 120

அறிகின்றே னறிவில்லே னெனுநிலையங் கடந்தநிலம்
பிறிவறிய சுவானுபவா தீதம்பிர மோகமென
மறுவின்மறை கூறுமா வாக்கியத்தைக் கடைப்பிடிக்கி
னறிகின்ற வனுபவமு மனுபவமன் றுமன்றே. 121

உன்றந்தை யுரைத்ததுவு முயர்முனிவ னுரைத்ததுவு
மன்றல்கமழ் கமலனுரை வாக்கியமு மகதேவ
ரன்றுரைத்த வாக்கியமும் யானுரைத்த வரும்பொருளு
மொன்றேயா மையமலை யுனையன்றி வேறில்லை. 122

பூசனையார் பூசகன்யாா புகலென்றான் சுகமுனிவ
னாசையெலா நிராசையா யாநந்த முங்கடந்த
வீசனு னீச னிரண்டற்ற வெல்லையிலே
பூசனமார் பூசகன்யார் புகலென்றான் புகழ்ச்சனகன். 123

வாழ்த்திடவும வாயில்லை வணங்கிடவுஞ் சிரமில்லை
சூழ்த்திடவு மலரில்லை தொழுதிடவுங் கையில்லை
யேத்திடவும் பாவில்லை யெதிர்ந்திடவோ ரிறையில்லைப்
பார்த்தவிடந் தொறுமியானே யெனையானே பணிகின்றேன்.

சிந்தனை வெண்பா.

தக்ஷிணா மூர்த்தி துதி.

ஏணியைப்போ லியாவரையு மேறவிட்டு மியானேறேன்
றோணியொப்புப் பல்லியொப்புச் சொல்லலா-நாணமற
வெல்லார்க்கும் போதித்து மியானில்லே னென்செய்கேன்
கல்லாலா முற்றுமெனக் கா. 125

பொன்னைப் பொருளைப் புகழைக் குறியாது
தன்னை யளித்தவனே சற்குருவா-மின்னமின்னாம்
பொன்னீ பொருளீ யென்றோதுங் குருவெல்லா
முன்னியனே சற்குருவன் றும். 126

ஐயந் திரிவகற்றி யான்மாவைக் காட்டியதற்
கைய னருளை யறிவித்து-மெய்யன்
திருவடியைக் காட்டிச் சிவோகம் பாவிக்க
வருள்செய்வோன் ஞானகுரு வாம். 127

கண்போல வான்மா கதிர்விளக்குப் போலாக்கை
விண்போற் சிவமதிபோல் விஞ்ஞானம்-விண்போந்த
சூரியன்போல் மெய்ஞ்ஞானஞ் சூழிருள்போ லஞ்ஞானந்
தாரகைபோற் றத்துவங்க டான். 128

சிவன்வேறு சீவன்வே றெனனுந்தே சீவன்
சிவன்கூறு சிவைகூறு தேகஞ்-சிவனிதயத்
தான்மா பிறநதானன் றைம்முகத்து மைம்பூதந்
தான்பிறக்கக் காண்கிலைநீ தான். 129

தேறினர் சித்தத் திருந்தார் சிவனென்றால்
வேறுபடுத் துவதேன் வீணநீ-மாறுபட்டுப்
பேசாதை யெல்லாம் பிரமமென்னும் வேதாந்த
மாசையிற்று னீயே யதி. 130

சிவன்வேறு சீவன்வே றென்றிரண்டாய்ச செப்பு
மவன்சிவனை யென்று மறியாதான்-றவமில்லா
வுள்ளத்தார்க் கெய்துமோ வூர்க்குருவி யாகாச
மெள்ளப் பறந் தறியுமே. 131

அதுவேநீ யாமென் றருமறைகள் சொல்லு
மெதிர்சிவனே நீயானு யென்னு-முதுசைவம
வேறேவே றன்றேசொல் வேதியனே விண்விசும்பும்
வேறேவே றன்றே விளமபு. 132

ஐம்பொறியு மைம்புலனு மைம்பூத முமகற்றி
யின்பசிவ நீயென்று லேலாதோ-வன்பனே
முத்திமுடி வீதென்றுன் முன்னூலும் பின்னூலு
மற்றநூ லெல்லா மற. 133

தானே பரமாணுற் றத்துவசா லத்திலே
யேனோ பிறநதிறந்தே னித்தனைநாள்-மாணுகேள்
நீபிறந்த தில்லையுண்மை நெஞ்சுபுல னும்பொறியு
நீபிறந் தாற்போ னிச்சயம். 134

அமுசோகம் பாவனையா லாருயிரின் போதச்
சமுசயத்தை யென்மொழியாற் றள்ளி-யிமையளவும்
கட்டவுட லாகாமற் காமிகத்திற் சொன்னவண்ண
நிட்டையிலே நின்றுவிடு நீ. 135

மெய்கண்டான் வெண்காட னெங்குருச்சிற் றம்பலவன்
பொய்கண்ட கண்டசுகர் பூரணர்க-ளெவரையு
முள்ளடக்கி யொன்று யுணர்வா யுறங்கினர்போ
லுள்ளடங்கி நீயு முணர். 136

தானே சிவமல்லாற் றனிசசிவம்வே றில்லையென்ற
மோனமொழி யொன்றின் முடிபறியா-யோனிதருஞ்
சென்றுபிறந் தெய்,நதேன் சிவாயசிவ வென்செய்கே
னென்றுகடைத் தேறுவே னியான். 137

எல்லா வுயிர்கட்கு மின்பங் கொடுத்தலால்
எல்லாஞ் சிவனையே யெண்ணலால்-எல்லாஞ்
சிவனுருவே யாமாற்.றெவிட்டாப்பே ரின்பஞ்
சிவனுருவ மென்றுணர்விற் றேர் 138

ஆகாயந தன்னை யளக்கமரக காலெடென
வாகாயம மரக்கா ற குள்ளிருக்க-வாகாயங்
கண்டாயே லந்தக கருதமே கருத்தாகிக்
கண்டா வதுவே கதி. 139

நிராமய வந்தாதி·

மெய்யைப் பொய்யென்றான் வெளியைநல்ல வீடென்றான்
சைவத் துரைகாழிச சமபநதன்-ஐயமற
நின்போதம் போமிடததே நீயே சிவமென்று
னென்போதத் துளளே யிருநது. 140

இருந்த படியிருநதா லிறையுருவந தோன்றும்
பொருநதுமல மிமமையிலே பொன்று-மிருந்தபடி
யேதென்றங் குன்னி யிரண்டாட்டு வார்கருண்டோ
போதமுண்ட பிளளை புகல்

தானே சிவமான சத்தியஞா னாநந்த
மோனநிலை சொல்காழி முன்னோனே-ஞானிகடம்
முள்ளமா கயமா வொன்றாய வாநநத
வெள்ளமாய் நிற்குமவா மெய்.